# தமிழரசு

ஜூலை 2007

விலை ரூ.10/-

சய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு




| ஆம் | இல்லை |
| --- | --- |
| பாதுகாப்பற்ற உடலுறவு, ஊசிகளைப் பகிர்தல், பரிசோதிக்கப்படாத இரத்தம் மூலம் | கொசுக் கடியால், உணவைப் பகிர்வதால், கட்டிப் பிடிப்பதால், ஒரே கழிவறையைப் பயன்படுத்துவதால் |
| எச்.ஐ.வி / எய்ட்ஸ் பரவும். | எச்.ஐ.வி / எய்ட்ஸ் பரவாது. |

மேலும் எச்.ஐ.வி / எய்ட்ஸ் பற்றிய ஆலோசனை மற்றும் பரிசோதனைக்கு அனைத்து அரசு மருத்துவமனைகளிலுள்ள **நம்பிக்கை மையத்தை** அணுகவும்.

# தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600 008
தொலைபேசி: 044-28190467, 044-28190891, தொலைநகல்: 28190465 மின்னஞ்சல்: tansacs@tn.nic.in , இணையம்: www.tansacs.org

செ.ம.தொ.இ/1106/வரைகலை/2007

# தமிழரசு


செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2038

ஆனி – ஆடி ஜூலை 2007

மலர் : 39 இதழ் : 1



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

மு. ஸ்ரீநாகேஷ்
துணை இயக்குநர் (வெளியீடுகள்) (பொறுப்பு)

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

எஸ்.பி.எழிலழகன்
ஆர்.சேகர்

உதவி ஆசிரியர்கள்

க.இராஜராஜேஸ்வரி
இரா.சுரேஷ்
வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்
இரா.இளவரசி

நிருபர்கள்

கோ.சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்

தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ.ஜெயசிம்ஹன்

புகைப்படக்காரர்

வி.ராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு

அ.மதன்
ஆர்.பாலாஜி
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை – தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை–600 002.

தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை**

இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல், கிடைத்ததைப்
பகிர்ந்துகொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற
சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...


❖ கல்வியிலே கருத்துள்ளவர்களாக்க உடல் வளர்ச்சிக்காக 3 முட்டைகள் வழங்குகிறோம் - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ..... 2

❖ தமிழ்நாடு முழுவதும் ரூ.160 கோடி செலவில் பத்தாயிரம் மின்மாற்றிகளை அரசு அமைக்கிறது - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு ..... 7

❖ 2007-2008ஆம் ஆண்டில் வழங்க 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க முடிவு ..... 13

❖ 13 மாத ஆட்சியில் ரூ.9,710 கோடி மதிப்பில் 10 தொழில் ஒப்பந்தங்கள் - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ..... 14

❖ **தொழில் வளர்ச்சியில் தமிழகம்**

☐ ஒரகடத்தில், ரூ.225 கோடி மதிப்பீட்டில் 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் உயர் தொழில்நுட்ப மின்னணு வன்பொருள் தயாரிப்புக்கான புதிய மையம் ..... 17

☐ செங்கல்பட்டு அருகே ரூ.1,373 கோடியில் எதிர்கால எரிசக்தி மண்டலம் - 15 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு ..... 19

☐ பெரம்பலூர் மாவட்டத்தில், ரூ.1,500 கோடியில் பல்பொருள் உற்பத்தித் தொழில் மையம் ..... 20

☐ தூத்துக்குடி - நெல்லை மாவட்டங்களில் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் டைட்டானியம் டை-ஆக்சைடு தொழிற்சாலை ..... 21

☐ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் செய்தி ..... 22

☐ புத்தபிரானின் புரட்சிகரமான கருத்துக்களை உயிர்ப்பித்து உலவவிடுவோம்! - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வாழ்த்துச் செய்தி ..... 24

❖ **உள்ளாட்சித்துறையின் வளர்ச்சிகள்**

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புகள்**

☐ ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 50 இலட்சம் நிதியுதவி ..... 27

☐ மகளிர் சுயஉதவிக்குழு உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய சென்னையில் ரூ.5 கோடியில் விற்பனை மையம் ..... 29

☐ ஓராண்டில் ரூ.280 கோடியில் தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டம் நிறைவேற்றம் ..... 32

☐ தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஓராண்டில் ரூ.280 கோடியில் 3,548 பணிகள் நிறைவேற்றம் ..... 35

☐ சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தில் வாரிசுதாரருக்கு 15 ஆண்டுகளுக்குப் பிறகு பணி நியமன ஆணைகள் ..... 46

☐ சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் - மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்திட ஆணை ..... 47

❖ சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்கள் பயன்பாட்டிற்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி ..... 49

❖ செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள், அரசின் திட்டங்களை மக்களுக்கு நல்லமுறையில் எடுத்துச் செல்லவேண்டும் ..... 50

❖ சாலைப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வெளிவட்டச் சாலை திட்டம் ..... 51

❖ மாவட்ட வளர்ச்சிப் பணிகள் மற்றும் செய்திகள் ..... 61

❖ சமூக நீதி காத்த சான்றோர் - இரட்டைமலை சீனிவாசன் ..... 72


**அட்டைப் பட விளக்கம்**

*முதலாம் பக்க அட்டை :* **நான்காவது கட்ட இலவச நிலம் வழங்கும் விழா** (17.6.2007)

*நான்காம் பக்க அட்டை :* **தமிழ்நாடு மின்சார வாரியப் பொன்விழா** (2.7.2007)



# கல்வியிலே கருத்துள்ளவர்களாக்க உடல் வளர்ச்சிக்காக 3 முட்டைகள் வழங்குகிறோம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உரை

**சென்னை** சிந்தாதரிப்பேட்டை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் – கல்வி வளர்ச்சி நாளான 15.7.2007 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுடன் வாரம் **3** முறை முட்டை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:–

இன்று இளைஞர்களுக்கு எழுச்சியூட்டக் கூடிய – அவர்களுடைய அறிவுக்கு வளர்ச்சியூட்டக் கூடிய – ஒரு நாளாக இந்த நாள் அமைந்திருக்கின்றது. இங்கே வருகை தந்துள்ள நம்முடைய சட்டப்பேரவையின் காங்கிரஸ் தலைவர் சுதர்சனம் அவர்கள் எடுத்துரைத்ததைப் போல, தன்னலம் மறந்து தாயகத்திற்காக பல தியாகங்களைச்



செய்து, வாழ்ந்து, மறைந்த, ஆனால் நம்முடைய நெஞ்சங்களில் எல்லாம் மறையாமல் நிழலாடிக் கொண்டிருக்கின்ற பெருந்தலைவர் காமராஜருடைய பிறந்த நாள் இந்த நாள் என்பதை எண்ணும்போது, இந்த நாளில் இந்த நாட்டை ஆளுகிற அரசு, அந்தப் பெருந்தலைவரின் நினைவாக என்ன செய்கிறது என்ற கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில் தான் சத்துணவுத் திட்டத்தை மேலும் வலுவுள்ளதாக, மேலும் மேலும் ஊட்டச் சத்து மிகுந்ததாக ஆக்குவது என்று முடிவு செய்து, அப்படி முடிவுக்கு விரிவுரையாக தொடக்கத்திலே சத்துணவோடு சிறார்க்கு ஒரு முட்டை வழங்குவதென்றும், அதற்குப் பிறகு கடந்த காலத்தில் இரண்டு முட்டைகள் வாரம் ஒன்றுக்கு வழங்குவதென்றும் தீர்மானித்து – கடந்த ஆண்டு அறிவித்தேன். இனி வாரம் மூன்று முறை சிறார்க்கு சத்துணவோடு முட்டைகள் வழங்கப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற ஓர் அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

**உங்களால் உருவாக்கப்பட்ட அரசு**

முட்டை வழங்குவதாகச் சொல்லி விட்டு, வழங்கப்பட்ட முட்டையை நிறுத்துகின்ற அரசாக இந்த அரசு இல்லாமல், ஒரு முட்டை இரண்டு முட்டை, இரண்டு முட்டைக்கு மூன்று முட்டை வழங்குகிறோம் என்று வழங்கிக் காட்டுகின்ற அரசு தான் உங்களால் உருவாக்கப்பட்ட, அமர்த்தப்பட்ட தி.மு.கழக அரசாகும்.

வாக்குறுதிகள் அளித்திருக்கிறோம், ஒரு முட்டை அல்ல. ஒரு கோடி முட்டை கூட வழங்குவோம் என்று வாக்குறுதிகளை வழங்கி விடலாம். ஆனால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மிக மிக சிரமம். ஏனென்றால் சிலபேர், சில அரசியல் கட்சிகள் வாக்குறுதிகளை சுலபமாக வழங்குவார்கள். எப்படி சுலபம் என்றால், நிறைவேற்றவா போகிறோம் என்ற நம்பிக்கையோடு வாக்குறுதிகளை வழங்குவார்கள்.



இன்னும் சில பேர் வாக்குறுதிகளை வழங்கும் போது, வெற்றி பெறவா போகிறோம். நாம் வாக்குறுதி வழங்கினால் நிறைவேற்றுவதற்கு என்று அந்த எண்ணத்தோடு வாக்குறுதிகளை வழங்குவார்கள். ஆனால் தி.மு.க.வைப் பொறுத்தவரையில் நாங்கள் உருவாக்கிய கூட்டணி மீது எங்களுக்கே நம்பிக்கை நிறைய உண்டு. இந்தக் கூட்டணி தமிழகத்திலே வெற்றி பெறாவிட்டால், வேறு எந்தக் கூட்டணி வெற்றி பெறும் என்ற அந்த மனத் தெம்போடுதான் நான் இந்த வாக்குறுதியை தேர்தல் அறிக்கை மூலமாக வழங்கினேன்.

முட்டைகள் மூன்று வழங்கப்படும் என்றும் அறிவித்தேன். முதலிலே இரண்டு முட்டைகள் வழங்கப்படும் வெற்றி பெற்றால் என்று அறிவித்தேன். வெற்றி பெற்றவுடன் வாக்குறுதியை நிறைவேற்றினேன். இரண்டு முட்டைகள் வழங்கப்பட்டது. இப்போது மூன்று முட்டைகள் வழங்கப்படும் என்று கூறியதற்குக் காரணம் – நீங்கள் கேட்பீர்கள் – அப்போது தான் தேர்தல் வாக்குறுதி வழங்கினீர், இப்போது எதற்காக வாக்குறுதி வழங்கினாய் என்று கேட்பீர்கள் – உங்களால் அமைக்கப்பட்ட அரசு தொடர்ந்து நல்ல முறையிலே நீடித்து ஆட்சி நடத்தும் என்ற அந்த நம்பிக்கையில்தான் மூன்று முட்டைகள் வழங்கப்படுமென்று அறிவித்தேன். தொடர்ந்து இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த மூன்றாவது முட்டையும் இன்றைக்கு வழங்கப்படுகிறது.

**மனநிறைவோடு நினைக்கின்ற நாள்**

பெருந்தலைவர் காமராஜர் அவர்களை இந்த நாளில் நினைக்கப்படுவதற்கு என்ன காரணம்? பெருந்தலைவரை திராவிட முன்னேற்றக் கழகம் நினைப்பதற்கும் நம்முடைய நண்பர் சுதர்சனம் அவர்கள் இருக்கின்ற காங்கிரஸ் இயக்கம் நினைப்பதற்கும் வேறுபாடு உண்டு. அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவர். நமக்கும் தமிழகத்தின் பெருந்தலைவர்களில் ஒருவர். அந்த வகையில் அவர் கட்சிச் சார்பற்ற முறையிலே ஒரு பெருந்தலைவர். நம்முடைய சுதர்சனம் போன்றவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர் அவர்கள்

நினைப்பதிலே அர்த்தம் இருக்கிறது. ஆனால் நாம் அவரைக் கொண்டாடுவதும், அவருடைய பிறந்த நாளைப் போற்றுவதும் என்ன அதிலே ஒரு கருத்து, உணர்வு இருக்கிறதென்றால், இப்படிப்பட்ட தலைவர்களைக் கொண்டாடுகின்ற அந்தப் பண்பு – இப்படிப்பட்ட தலைவர்களுக்கு புகழ் சேர்க்கின்ற அந்தப் பண்பு – எல்லா கட்சிகளுக்கும் வந்துவிடாது. அண்ணா போன்ற பெரியவர்களால், அண்ணா போன்ற பெருந்தன்மையாளர்களால் வளர்க்கப்பட்ட தி.மு.கழகம் போன்ற கட்சிகளுக்குத்தான் அப்படிப்பட்ட பண்பு வர முடியும். நாம் இன்றைக்கும் – அவர்கள் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிற்றே, இவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாயிற்றே, இவர்கள் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களாயிற்றே, இவர்கள் தேசிய காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிற்றே, என்று பிரித்துப் பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் அவர்கள் நம்முடைய நாட்டவர்கள், நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், நம்முடைய தமிழ் இனத்தவர்கள். அவர்கள் தலைவர்களாக உயர்ந்தால், அவர்கள் மதிப்பும் மரியாதையும் மக்களிடம் பெற்றால், அந்த மதிப்பும் மரியாதையும் நமக்கும் உண்டு, நம்மையும் சேரும், அப்படிப்பட்டவர்களை நாம், அவர்களுடைய மாண்பினை மேலும் மேலும் உயர்த்துகின்ற வகையிலே மன நிறைவோடு நினைக்கின்ற நாளாக இந்நாள் இருக்க வேண்டுமென்று கருதித்தான் இந்த நாளை காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாள் என்று கொண்டாடுகிறோம்.

**கல்வியிலே கருத்துள்ளவர்களாக்கும் பணி**

அதிலே கூட எனக்கு என்ன சந்தேகம் வந்தது என்றால், நம்முடைய சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதைச் சட்டமாகவே ஆக்கிவிட்டார் என்று குறிப்பிட்டார். ஏன் சட்டமாக ஆக்கப்பட்டது என்றால், காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாள் என்று சட்டமாக ஆக்கப்படாவிட்டால், முன்பு இதை கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்கப்பட்டு, தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்து வேறொரு ஆட்சி வந்த போது உங்களுக்கு தெரியும் – நான் அந்த ஆட்சியின் பெயரையெல்லாம் இப்போது சொல்லி – நல்ல நேரத்தில் என்னுடைய மனதைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அந்த ஆட்சி காமராஜருடைய பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அறிவித்த அந்த அறிவிப்பை செயல்படுத்தவில்லை. செயல்படுத்தாதது மாத்திரமல்ல, சத்துணவுத் திட்டத்தில் முட்டை வழங்க வேண்டும் என்று வழங்கப்பட்ட அந்தக் காரியத்தையும் அந்த ஆட்சி நிறுத்தி விட்டது. அதற்குப் பிறகு மீண்டும் தமிழ்நாட்டு மக்கள் தி.மு.கழக ஆட்சியை இந்தக் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு உருவாக்கி அவையிலே உட்கார வைத்த பிறகு இன்றைக்கு நாங்கள் மூன்று முட்டைகள் வழங்குகின்ற விழாவினை நடத்துகிறோம் என்றால், அதற்குக் காரணம் சிறார், இளைஞர்கள், சிறுமிகள் இவர்கள் எல்லாம் கல்வி கற்று, கல்வி கற்கின்ற பள்ளிகளுக்குச் செல்கிற அந்த ஊக்கத்தைப் பெற்று, அந்த ஆர்வத்தைத் தூண்டி அவர்கள் வீட்டிலே சத்துணவு கிடைக்காது, இருந்தாலும் பள்ளிக்குச் சென்றால் அங்கே சத்துணவு கிடைக்கும் என்கிற அந்த ஆர்வத்தை அவர்களுக்குத் தூண்டி, அவர்களைக் கல்வியிலே கருத்துள்ளவர் களாக ஆக்குகின்ற ஒன்று இதற்கான குறிக்கோள்.

இரண்டாவது ஏன் முட்டை வழங்க வேண்டும்? சில பிள்ளைகளுக்கு பள்ளியிலே அவர்கள் படிக்கும் படிப்புகளில் முட்டை கிடைக்கின்றது. அந்த முட்டை இல்லாமல் இது உள்ளபடியே சாப்பிடுகிற முட்டையாக வழங்குவதற்குக் காரணம், கல்வி கற்றிட மூளை வளர்ச்சி மட்டும் போதாது, உடல் வளர்ச்சியும் தேவை. "ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்று மிக எளிய முறையில் பாரதி பாடினான். ஏன் குழந்தையைப் பார்த்து அப்படிச் சொன்னான் என்றால், அப்படி ஓடி

> “ஒரு அரசு கல்விக்கு இத்தகைய ஊக்கங்களை அளிக்கும்போது பெற்றோர்கள், உற்றார், உறவினர், தங்களுடைய குழந்தைகளை கல்விப் பயிற்சிக்கு அனுப்பி தவறாமல், அந்தக் குழந்தை கல்வியும் பெறவேண்டும் என்கின்ற அந்த உத்வேகத்தை உருவாக்க வேண்டும்.”

விளையாடினால்தான் அதன் இளம் எலும்புகள் வளரும். அதனுடைய உடல் கட்டுமஸ்தான நிலையில் இருக்கும். அது எதிர்காலத்திலே நல்ல உடல் அமைப்போடு, உலகத்தோடு போட்டி போடுகின்ற பல விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் ஈடுபட முடியும். அந்தப் பெருமை இன்றைக்கு இந்தியாவிலே, குறிப்பாக தமிழ்நாட்டிலே உள்ளவர்களுக்கு பெருமை, பெரும்பாலும் கிடைப்பதில்லை, எப்போதாவது அத்தி பூத்தது போலத்தான் நாம் ஏதோ சில பதக்கங்களை விளையாட்டுப் போட்டிகளில் நம்முடைய உடல் பயிற்சியிலே உள்ள அந்த ஆர்வத்தைக் காட்டுகின்ற வகையிலே பெற முடிகின்றது.

**பள்ளிக்குத் தவறாமல் அனுப்புங்கள்**

இங்கே ஒருவர் இருவர் தங்கப்பதக்கங்களைப் பெற்றாலே அதை வைத்துக் கொண்டு கூத்தாடுகின்ற அளவுக்கு நம்முடைய நாட்டிலே, குறிப்பாக தமிழகத்திலே உடல் பயிற்சியிலே அதிக கவனம் செலுத்தாத நிலைமைதான் நம்முடைய பிள்ளைகளுக்கு, பிள்ளைகளை வளர்க்கின்ற பெற்றோர்களுக்கு இருக்கின்றது. அதனால்தான் முட்டை சத்தான உணவு, அந்தச் சத்துணவை குழந்தைகள் பாச்சிடுகின்ற காரணத்தால் அவர்கள் உடற்கட்டு வலுவானதாக அமைகின்றது. அந்த உடற்கட்டு நம்முடைய வீட்டுப் பிள்ளைகளுக்குத் தேவை என்ற முறையில் இந்த முட்டையைப் பயன்படுத்த வேண்டும், அதற்காகத்தான் ஒரு முட்டையை இரண்டு முட்டையாக ஆக்கி, இன்று மூன்று முட்டை என்று இப்போது ஆக்கியிருக்கிறோம்.

ஒருவேளை அடுத்த ஆண்டு நான்கு முட்டையாக இருக்குமா என்று தயவுசெய்து யாரும் கருத வேண்டாம். அளவுக்கு மீறினால் அந்த முட்டையும் உடம்புக்குக் கெடுதி என்பதால், இந்த மூன்று முட்டையோடு நிச்சயமாக நிறுத்தப்படும்.

அரிச்சுவடியில் படித்ததை தம்பி தங்கம் தென்னரசு இங்கே விரிவாகச் சொன்னார். அ, ஆ எழுத்துக்களில் கடைசியாகப் பார்த்தால் மூன்று முட்டைகள் ஃ போட்டு – இது ஆயுத எழுத்து – எனவே இந்த ஆயுத எழுத்தோடு இந்த முட்டை எழுத்துக்களை நாம் நிறுத்திக் கொள்கிறோம். அடுத்த ஆண்டு நான்கு முட்டை, ஐந்து முட்டை என்பதெல்லாம் குழந்தைகளின் சாப்பாட்டிற்கு அல்ல, நம்முடைய துரைமுருகன் போன்றவர்களின் சாப்பாட்டிற்கு வேண்டுமானால் அவைகள் இருக்கலாமே தவிர, குழந்தைகளின் சாப்பாட்டிற்கு அவைகள் கிடையாது என்பதைச் சொல்லி – காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும், ஒரு அரசு கல்விக்கு இத்தகைய ஊக்கங்களை அளிக்கும் போது பெற்றோர்கள், உற்றார் உறவினர், தங்களுடைய குழந்தைகளை கல்விப் பயிற்சிக்கு அனுப்பி தவறாமல், அந்தக் குழந்தை கல்வியும் பெற வேண்டும், உடல் அறிவும், உடல் நலமும் பெற வேண்டும் என்கின்ற அந்த உத்வேகத்தை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு அப்போது தான் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று நாம் கொண்டாடுவதற்கு அர்த்தம் – நாடு வளர, சமுதாயம் வளர, இளந்தலைமுறை வளர இந்த நாள் பெரிதும் உதவுமாக என்று கூறி, இங்கே உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டமைக்காக மகிழ்ச்சியும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

* * *



# தமிழ்நாடு முழுவதும் ரூ.160 கோடி செலவில் பத்தாயிரம் மின்மாற்றிகளை அரசு அமைக்கிறது

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அறிவிப்பு

மின் வாரிய வளர்ச்சிக்காக நாளும் தேய்ந்து அதன் புகழை நிலை நாட்டுகின்ற மின் வாரிய அலுவலர்களே, தொழிலாள உடன்பிறப்புகளே, இந்த வாரியத்தின் பொன் விழா நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி யடைகின்றேன், பெருமை யடைகின்றேன். நான் ஐந்து முறை முதலமைச்சர் பொறுப்பை யேற்றாலும், பொறுப்பேற்கின்ற ஒவ்வொரு முறையும் எப்படியாவது ஒரு விழா, அது வெள்ளி விழாவாகவோ அல்லது பொன்விழாவாகவோ வந்து விடுகிறது. எனவே நான் விழா முதல்வராகவே ஆகிவிட்டேன். விழா முதல்வர் என்று ஆகியிருக்கின்றேன்.






இந்த இனிய நிகழ்ச்சியில் பாராட்டுகள், பதக்கங்கள் பெற்றவர்களையெல்லாம் உங்களோடு சேர்ந்து நானும் உற்சாகப்படுத்தி வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கே நம்முடைய அருமை நண்பர் ஆற்காட்டார் உரையாற்றும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். இந்த வாரியத்தின் தொடக்கக் கால வளர்ச்சிக்கு இந்த வாரியம் வளர்ந்தோங்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் – திருமிகு காலஞ்சென்ற அப்பாதுரையார் என்று குறிப்பிட்டார். அப்பாதுரையார் அவர்கள் இன்று இல்லாவிட்டாலும், அவர் ஆற்றிய பணி என்றைக்கும் பாராட்டப் படக்கூடியது என்பதற்கு அடையாளமாகத்தான் அவருடைய திருமகனாருக்கு இங்கே பரிசளிப்பும், பட்டாடையும் அணிவிக்கப்பட்ட காட்சியை நீங்கள் கண்டீர்கள். எனவே நாம் ஒய்வுபெற்று விட்டோம், அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டோம், இனி இந்த நிறுவனத்திற்கு என்ன பணி ஆற்ற வேண்டுமென்று இல்லாமல், நாம் உருவாக்கிய நிறுவனத்தை, நாம் வளர்த்த நிறுவனத்தை, நாம் முன்னேற்றப் பாதையிலே கொண்டு சென்ற நிறுவனத்தை ஒட்டிக் கொண்டு கடைசி வரையிலே அந்த நிறுவனத்தின் நல்வாழ்வுக்காக வளத்திற்காகப் பாடுபட்டால், நான் இல்லாவிட்டாலும் நம்முடைய சந்ததியினர் பாராட்டப்படுவார்கள், நம்முடைய வழித்தோன்றல்கள் பாராட்டப்படுவார்கள் என்பதற்கு அடையாளமாகத் தான் இங்கே மறைந்த அப்பாதுரையார் அவர்களுடைய மைந்தருக்கு பாராட்டும், பரிசளிப்பும் வழங்கப்பட்டது என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

## என் முகம் மலர்ந்தது

இதை இந்த வாரியத்திலே மாத்திரமல்ல, எந்தவொரு அமைப்பிலே பணியாற்றுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற அத்தனை பேரும் உணரவேண்டிய, உள்ளத்திலே பதியவைக்க வேண்டிய ஒரு பேருண்மையாகும். என்னைப் பொறுத்தவரையிலே இங்கே வந்து பதக்கங்கள் பெற்றவர்கள், தங்கத்தாலான பதக்கங்களைப் பெற்றவர்கள், அருமையான பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றவர்கள், பட்டாடைகளைப் பெற்றவர்கள் எல்லாம் ஏறத்தாழ இருபது பேரை நான் மிக நன்றாக நெருங்கி அறிவேன். காரணம் நானே பொறுப்பிலே ஐந்து முறை இருந்து விட்ட காரணத்தால், அவர்கள் எல்லாம் எனக்கு மிகவும் பழக்கமானவர்கள். அவர்கள் மின் வாரியத்தின் தலைவர்களாக மாத்திரமல்ல, இந்த அரசினுடைய பல்வேறு அங்கங்களில் சிறப்போடு செயல்பட்டவர்கள். அதனால்தான் அவர்களைக் காணும்போதெல்லாம் என்னை அறியாமல் என் முகம் மலர்ந்தது. அவர்களையறியாமல் அவர்களும் புன்னகை புரிந்தார்கள். நான் அவர்களின் நலன் விசாரித்தேன். அவர்கள் என் நலனை விசாரித்தார்கள்.

## நாட்டு நன்மைக்காக செய்த காரியங்கள்

காரணம் இரண்டு பேரும் நாட்டு மக்கள் நலனிலே அக்கறை உள்ளவர்களாக இருந்த காரணத்தால் நலன் விசாரிக்கத் தோன்றியது. அது இயல்பானதும்கூட அப்படிப்பட்ட ஒரு நல்ல

எண்ணத்தோடு இந்த அருமையான வாரியத்தை நம்முடைய தொழிலாளத் தோழர்களும், அலுவலக நண்பர்களும் பணியாற்றுகின்ற பாட்டாளிகளும், நிபுணத்துவம் வாய்ந்தவர்களும், வித்தகர்களும், விஞ்ஞானிகளும் இயக்கி வருகின்ற இந்த அருமையான முயற்சிக்கு ஊக்கச் சக்தியாக, உந்து சக்தியாக விளங்குபவர், நம்முடைய மின்துறை அமைச்சர் அருமை நண்பர் ஆற்காட்டார் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் மின்சாரம் என்றால், அதன் சாரமே அவர்தான். அவர் தன்னுடைய வாழ்க்கையை அரசியலிலே ஆரம்பித்த வாழ்க்கையை சட்டமன்றத்திலேயே அவர் என்னோடு அறிஞர் அண்ணா காலத்திலே சட்டப்பேரவையிலே உறுப்பினராக இருந்த அந்தக் காலத்திலேயிருந்த அவர் மின்சார வாரியத்திலும் தொடர்பு உடையவர் என்பதை நான் அறிவேன்.

மின்சார வாரியத்திலே என்ன நடக்கிறது என்பதையெல்லாம் நான் சட்டசபையிலே பேசுவதற்கு பல நேரங்களில் எனக்கு உதவிப் புரிந்தவரும் கூட, நம்முடைய ஆற்காட்டார் அவர்கள் என்பதைச்

மின்சாரத் துறை இன்றைக்கு இந்த அளவு வளர்ந்திருப்பதற்குக் காரணம் நான் என்று – முதலமைச்சரை பெருமைப்படுத்த வேண்டுமென்ற ஒரு கடமைக்காக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் மின்சாரத் துறை அமைச்சருக்கு என்னை விட அதிகப் பொறுப்பு இந்தத் துறையிலே உண்டு. அவருக்கு மாத்திரமல்ல – என்னோடு இருக்கின்ற சக அமைச்சர்கள் அத்தனை பேரும், இன்றைக்கு வைத்திருக்கின்ற அத்தனை பொறுப்புக்களையும், அத்தனை இலாகாக்களையும்



சொன்னால், ஏதோ தவறுதலாக நீங்கள் கருதிக் கொள்ளக்கூடாது, நாட்டு நன்மைக்காகச் செய்த அந்தக் காரியங்கள் , அன்றைக்கு சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டு, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அமைச்சர்களே கூட நான் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுகள், நான் சுட்டிக்காட்டிய குறிப்புகள், புகார்கள் எல்லாம் உண்மைதான் என்பதை ஒத்துக்கொண்டு, அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு குழுவைக் கூட அவர்கள் பெருந்தலைவர் காமராஜருடைய காலத்திலே நியமித்தார் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவரவர்கள் உயர்த்தினால் தான், அந்த உயர்வெல்லாம் சேர்ந்து எனக்கு உயர்வளிக்கும். இந்த ஆட்சிக்கு உயர்வளிக்கும் என்பதை நான் உணராதவன் அல்ல. அப்படிப்பட்ட உயர்வளிக்கின்ற உன்னதமான இடத்தில் நம்முடைய ஆற்காடு வீராசாமி அவர்கள் மின் துறை அமைச்சராக இருந்து பணி புரிந்து வருகிறார்.

**பத்தாயிரம் மின்மாற்றிகள்**

இங்கே தொகுப்புரையாற்றிய அம்மையார் சொன்னதைப் போல Finger Dip என்பார்களே, அதைப் போல புள்ளி விவரங்களையெல்லாம் விரல் நுனியிலே வைத்திருப்பவர் அவர். நாம் கேட்கிற நேரத்தில் – காதிலே மாத்திரம் சரியாக விழுந்தால் உண்மையிலேயே சரியான விவரங்களை நமக்குச் சொல்லக் கூடியவர் அவர். சட்டமன்றம் நடக்கும்போது நீங்கள் வந்து பார்த்தால் உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் திருக்குறள் சொல்லி முடித்தவுடன் கேள்வி நேரம் தான் முதலிலே ஆரம்பமாகும். முதல் கேள்வியை எடுத்துக் கொண்டால், அநேகமாக அந்த முதல் கேள்வி மின் துறையைப் பற்றியதாகத்தான் இருக்கும்.

ஒவ்வொரு ஊரையும் குறிப்பிட்டு, அந்த ஊரிலே விளக்கு எரியவில்லை, மின் தடங்கல் என்று யாராவது ஒரு உறுப்பினர் கேட்டால், அப்போதெல்லாம் அவர்களுக்கு மின்சாரத்துறை அமைச்சர் அளிக்கின்ற பதில், பத்தாயிரம் டிரான்ஸ்பார்மர்கள் விரைவிலே வரவிருக்கின்றன. வந்தவுடன் உங்கள் தொல்லை யெல்லாம் தீரும், கவலைப்படாதீர்கள் என்று சொல்வார். நான் கூட எப்போது வரப்போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அது பற்றி அறிவிப்பதற்கு ஒரு பொன்னான நாள், பொன் விழா நாள் தான் என்று கருதியோ என்னவோ, 160 கோடி ரூபாய் செலவில், பத்தாயிரம் மின் மாற்றிகள், டிரான்ஸ்பார்மர்கள் அமைத்திட அரசு ஏற்பாடு செய்துள்ளது என்பதை இன்றைக்கு இந்த விழாவில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். தமிழகம் முழுவதும் இதுவரை அமைக்கப்பட்டுள்ள புதிய மின் மாற்றிகள் இன்று தொடங்கி வைக்கப்படுகின்றன என்ற செய்தியையும் செவிக்கினியதாக மாத்திரமல்ல, சிந்தைக் கினியதாகவும் உங்கள்பால் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழா நினைவாக இவ்வாரியத்தில் தற்போது பணியாற்றும் தொழிலாளர்கள், ஓய்வூதியம் பெறுவோர், குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் அனைவருக்கும் தலா 1,000 ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

**ரொக்கப் பரிசு – ஊக்க ஊதிய உயர்வு**

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு மின்வாரியத்தில் தற்போது பணியாற்றும் 72,723 தொழிலாளர்களும், 46,035 ஓய்வூதியதாரர்களும் 27,055 குடும்ப ஓய்வூதியதாரர்களும் – ஆகமொத்தம் 1 இலட்சத்து 45 ஆயிரத்து 813 தொழிலாளர்களுக்கு தலா 1,000 ரூபாய் வீதம் மொத்தம் 14 கோடியே 58 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு இந்த விழா அடையாளமாக அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழா நினைவாக இவ்வாரியத்தில் தற்போது பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள், பகுதிநேர தொழிலாளர்கள் அனைவருக்கும் தலா 500 ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 21,401 ஒப்பந்தத் தொழிலாளர்களும், 5,646 பகுதி நேரத் தொழிலாளர்களும் – ஆகமொத்தம் 27,047 தொழிலாளர்களுக்கு தலா 500 ரூபாய் வீதம் 1 கோடியே 35 இலட்சத்து 23 ஆயிரத்து 500 ரூபாய் ரொக்கப் பரிசாக அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழா நினைவாக இவ்வாரியத்தில் தற்போது பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் சிறப்புப் பரிசாக ஒரு ஊக்க ஊதிய உயர்வு (Incentive Increment) வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 72,723 தொழிலாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

இந்த சிறப்பு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படுவதன் காரணமாக, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு, ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 29 கோடியே 87 இலட்ச ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வுபெற்ற மின்சார ஊழியர்களின் கோரிக்கைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் மின்சார ஊழியர்களுக்கு சம்பளக் கமிஷன் பரிந்துரைகள் செய்யும்போது கவனிக்கப்படும் என்ற உறுதியையும், இந்த விழாவிலே நான் அளிக்கின்றேன். ஆகவே நல்ல அறிவிப்புகளாக இந்த விழாவிலே உங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் மின்சாரத் துறை அமைச்சரிடத்திலே பேசி, அவரும் அதிகாரிகளிடத்திலே கலந்துரையாடி, இந்த அறிவிப்புகளை இந்தப் பொன் விழா நினைவாக வெளியிட்டிருக்கிறேன்.

நீங்கள் இந்த அறிவிப்புக்களை அகமகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கின்றீர்கள். வரவேற்றதின் அடையாளமாக ஊரெல்லாம் ஒழுங்காக விளக்கெரிய வேண்டும். ஒரு நாள் கூட தடங்கல் ஏற்படக்கூடாது என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு இந்த அளவில் விடைபெறுகிறேன்.

---

சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில்,
2–7–2007 அன்று நடைபெற்ற
தமிழ்நாடு மின்சார வாரிய பொன்விழாவில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை.



# பொன்விழா காணும் தமிழ்நாடு மின்சார வாரியம்

**1957** முதல் 2007 வரை கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழகத்தை ஆற்றல் மிக்கதாகச் செய்து சமூகம், பொருளாதாரம், விவசாயம், தொழில்துறை, உற்பத்தி மற்றும் சேவைப்பகுதிகளிலும் முன்னேற்றி தமிழகத்தை இந்தியாவிலேயே மிகவும் வளர்ச்சி அடைந்த மாநிலமாக ஆக்கியுள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் அடைந்துள்ள வளர்ச்சி

- ☐ நுகர்வோர் எண்ணிக்கை 4.30 இலட்சத்திலிருந்து 185.82 இலட்சமாக உயர்வு.
- ☐ நிறுவுதிறன் 256 மெகாவாட்டில் இருந்து 10.098 மெகாவாட்டாக உயர்வு.
- ☐ துணை மின் நிலையங்களின் எண்ணிக்கை 89 லிருந்து 1,148 ஆக உயர்வு.
- ☐ விநியோக மின் மாற்றிகள் 3,773 லிருந்து 1,73,503 ஆக உயர்வு.
- ☐ கூடுதல் உயர் அழுத்த மற்றும் உயர் அழுத்த மின் பாதைகளின் நீளம் 11,479 கி.மீ.ல் இருந்து 1,54,068 கி.மீ. ஆக உயர்வு.
- ☐ குறைந்த மின் அழுத்த பாதையின் நீளம் 13,055 கி.மீ.லிருந்து 5,01,807 கி.மீ. ஆக உயர்வு.
- ☐ மின்இணைப்பு பெற்ற நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை 1,813ல் இருந்து 63,177 ஆக உயர்வு.
- ☐ விவசாயத்திற்கான நீர் இறைப்பு இணைப்புகளின் எண்ணிக்கை 33,440லிருந்து 18,01,972 ஆக உயர்வு.
- ☐ தனிநபர் நுகர்வு 21 யூனிட்களிலிருந்து 960 யூனிட்களாக உயர்வு.
- ☐ உச்சத்தேவை 172 மெகாவாட்டில் இருந்து 8,803 மெகாவாட்டாக உயர்வு.

மொத்த மின் உற்பத்தி 1,053 மில்லியன் யூனிட்களிலிருந்து 63,038 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரிப்பு.



### இந்தியாவில் முதலிடம்

தமிழ்நாடு மின்சார வாரியம் எரிசக்தித் துறையில் மிகச் சிறப்பாக பயனளித்து சேவைபுரியும் நிறுவனங்களில் ஒன்றாகும்.

அதன் வருவாய் திரட்டும் திறன் 99 சதவிகிதம் ஆகும்.

மின்கடத்தல் மற்றும் விநியோக இழப்பு தற்போது 18 சதவிகிதம் மட்டுமே.

காற்றாலைகளின் அதிகபட்ச திறன் 3,456 மெகாவாட், அதாவது தமிழ்நாடு மின்சார வாரியம் இந்தத் துறையில் இந்தியாவிலேயே முதலிடத்தையும் உலகத்திலேயே நான்காவது இடத்தையும் பெற்றுள்ளது.

மின்சாரத் திருட்டு நிகழ்வு மிகவும் குறைவு.

அனல்மின் நிலையங்களின் மின் சுமை காரணி (Plant load factor) மிகவும் உயர்வாக உள்ளது.

காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடம்.

அதிக உயரமுள்ள புனல் மின் உற்பத்தி நிலையம் – பைக்கார நீர் மின் நிலையம்.

தொடர்கட்ட வகையைச் சேர்ந்த மலைப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உற்பத்தி நிலையம் – குந்தா மின் திட்டம்.

காவேரி நதிக்கு குறுக்கே நிர்மாணிக்கப் பட்டுள்ள தொடர்கட்ட குறைந்த உயரமுள்ள தடுப்பணைத் திட்டங்கள்.

உச்ச நேரத் தேவைகளைச் சமாளிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காடம்பாறை நீரேற்று தேக்க நீர் மின் நிலையம்.

### செயல்படுவதில் முதலிடம்

கூடுதல் உயர் மின் அழுத்த காற்று காப்பிடப்பட்ட துணை மின் நிலையம் – சென்னை மாநகர்.

மின் விநியோக கட்டுப்பாட்டு மையம் ஸ்கடா – சென்னை மாநகர்.

கூடுதல் உயர் மின் அழுத்த 230 கே.வி அளவிலான மின் கட்டமைப்பு மற்றும் மின் சுமை அனுப்புகை மையம் – ஈரோடு.

### அறிமுகம் செய்வதில் முதலிடம்

வலுவேற்றப்பட்ட சிமெண்ட் கான்கீரிட் கம்பங்களை உயர் மற்றும் குறைந்த மின் அழுத்த பாதைகளில் பயன்படுத்துவதில் மின் சக்தி பாதை வழி தொலைபேசியை மின் கட்டமைப்பு இயக்கத்தில் பயன்படுத்துவது – கம்பியில்லா தொலைத் தொடர்பு முறையை மின் பழுது அழைப்புகளை கவனிக்க பயன்படுத்துவதில், கிராமப்பகுதிகளுக்கு மின் இணைப்புகள் வழங்குவதில், மின் பொறியாளர் களுக்கான மதிப்பு மிக்க கையேடு வெளியிடுவதில் முதலிடம் வகிக்கிறது.

☐ ☐ ☐





## 2007 - 2008 ஆம் ஆண்டில் வழங்க
## 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க முடிவு

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் எட்டாவது கூட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 3.7.2007 அன்று காலை 10.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் கூடியது. இதில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் டி. சுதர்சனம் (காங்கிரஸ்), கோ.க.மணி (பா.ம.க), சி.கோவிந்தசாமி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்) வை.சிவ.புண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), செல்வப் பெருந்தகை (விடுதலை சிறுத்தைகள்) எச். அப்துல் பாசித், (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்), ஜெகன் மூர்த்தி (புரட்சிப் பாரதம்) மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்து விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அந்த ஏற்பாட்டின்படி 24.6.2007 வரை 12 இலட்சத்து 18 ஆயிரத்து 897 தொலைக்காட்சிப் பெட்டிகள் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு, அவற்றுள் 10 இலட்சத்து 16 ஆயிரத்து 940 தொலைக்காடசிப் பெட்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளில் பெட்டிகள் அனைத்தும் வரும் நவம்பர் இறுதிக்குள் வழங்கிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2007 – 2008 ஆம் ஆண்டுக்கு 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதென்றும், அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் சர்வதேச அளவில் கோருவதென்றும், ஒப்பந்தப் புள்ளிகளை ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட்டு, செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிவு செய்வதென்றும் 2006 – 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப குறியீடுகளையே இந்தக் கொள்முதலுக்கும் பின்பற்றுவதென்றும் இன்றையக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ★

# 13 மாத ஆட்சியில் ரூ.9,710 கோடி மதிப்பில் 10 தொழில் ஒப்பந்தங்கள்



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்**

**வே**றொரு அலுவல் காரணமாக வெளியூர் செல்ல வேண்டியிருப்பதால் விரைவில் நான் என்னுடைய உரையை நிறைவு செய்துவிட்டு விடைபெற வேண்டும் என்று சிவசைலம் குடும்பத்தினரிடம் வேண்டிக் கொண்டு இருந்தேன். ஆனால் சிவசைலம் அவர்களுடைய பேச்சைக் கேட்கும்போது நேரம் போனதே தெரியவில்லை. அவர்களும் நீண்ட நேரம் உரையாற்றிவிட்டார். வயதானவர்கள் பேச ஆரம்பித்தால் சீக்கிரம் முடிக்க முடியாது. நான் சீக்கிரம் முடிப்பதற்கு காரணம் எனக்கு வயதாகவில்லை என்பதை உங்களுக்கு அறிவிப்பதற்காகத் தானே தவிர வேறல்ல.

**டிராக்டர் அன்பளிப்பு**

இந்த தொழிற்கூடத்தோடு என்று நான் சொல்ல மாட்டேன், இந்தக் குடும்பத்தோடு எனக்கு நீண்ட காலமாக நல்ல உறவும், நட்பும், தோழமையும் உண்டு. அவர்கள் இங்கே எடுத்துக்காட்டிய 1970ஆம் ஆண்டுகளில் நான் வெளிநாட்டிலே சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, இலண்டன் மாநகரத்திலே சிவசைலம் அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுது இலண்டனிலே உள்ள தொழிற்சாலையில் இருந்து பர்கூசன் டிராக்டரை எனக்குப் பரிசாக அளித்தார். நான் அந்தப் பரிசை என்னுடைய வாழ்நாள் வரையிலே மறக்க முடியாது. சில பேருடைய பரிசு காதல் பரிசாக இருக்கும், நட்புப் பரிசாக இருக்கும். அவைகளை மறக்க முடியாது என்று சொல்வதிலே அர்த்தம் இருக்கிறது.

ஆனால் இவர் அளித்த பரிசு என்னை சிக்கலிலே மாட்டிவிட்டது. பர்கூசன் டிராக்டரை நான் அன்பளிப்பாக அங்கே பெற்றவுடன், அங்கேயே நான் அறிவித்தேன். இதை நான் என் சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளப் போவதில்லை, காரணம் எனக்கு டிராக்டரை வைத்து நிலத்தை உழுகின்ற அளவிற்கு நிலம் இல்லை. எனவே இதை நான் முதலமைச்சர் என்கிற முறையில் தமிழ்நாட்டிலே இருக்கின்ற கோவை விவசாயப் பல்கலைக் கழகத்திற்கு அன்பளிப்பாக தருகிறேன் என்று அங்கேயே அறிவித்தேன்.

அது பத்திரிகைகளில் எல்லாம் வெளிவந்து நான் அறிவித்தவாறு அது அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்பட்டது, இலண்டனில் இருந்து அவர்களே அதை முன் நின்று அனுப்பி வைத்தார்கள். ஆனால் அப்பொழுது கப்பல் தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தின் காரணமாக கப்பல்கள் ஆங்காங்கு புறப்படாமல் நின்றதால் அந்த டிராக்டர் சென்னைக்கு வந்து சேரவில்லை, சென்னைக்கு




வராத காரணத்தால் அது சில நாட்களுக்கு கோவைக்கும் அனுப்பப்படவில்லை. அதற்கிடையே என்மீது தரப்பட்ட புகார் ஒன்றில் பார்கூசன் டிராக்டர் சிவசைலம் கொடுத்ததை நான் என்னுடைய சொந்த நிலத்திற்கு அனுப்பி பயன்படுத்திக் கொண்டேன் என்று புகார் கொடுத்தார்கள்.

அந்தப் புகாரிலிருந்து அன்றைக்கு சாட்சியமாக இருந்து என்னைக் காப்பாற்றிய பெருமை நம்முடைய சிவசைலம் அவர்களுக்கு உண்டு என்பதை நன்றியுணர்வோடு இப்பொழுது நான் சொல்லிக் கொள்கிறேன். அந்த டிராக்டரை என்னுடைய சொந்த நிலத்திற்குப் பயன்படுத்துகிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். எப்படி பயன்படுத்த முடியும் என்று நம்முடைய வழக்கறிஞர்கள் கேட்ட பொழுது அது சென்னைக்கு வந்து சென்னையில் இருந்து திருவாரூருக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள்.

ஏறத்தாழ ஒரு 300 மைல் அதைக் கொண்டு போனார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். போகும் வழியிலே எங்கெங்கே எந்தெந்த பெட்ரோல் பங்குகளில் அதற்கு பெட்ரோல் பிடித்தார்கள், என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு நம்முடைய சிவசைலம் அவர்கள்தான் ஏதோ தன்னுடைய சகோதரனுக்கு ஏற்பட்ட ஒரு அவமானத்தை கழுவுவதற்கு இன்னொரு சகோதரர் எவ்வளவு உரிமையோடு பாடுபடுவாரோ அந்த அளவிற்கு உரிமையோடு பாடுபட்டு அந்த சாட்சியங்களையெல்லாம் எடுத்துக் கொடுத்து அந்த கமிஷன் விசாரணையில் இருந்து அந்தப் புகாரில் இருந்து என்னை விடுவித்த பெருமைக்குரியவர் என்னுடைய நண்பர் சிவசைலம் ஆவார்கள்.

அவர்கள் இன்றைக்கு இந்தத் தொழிற்சாலையின் மூன்றாவது பிரிவினுடைய திறப்பு விழாவை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இது "மூன்றாவது" ஏற்படுகின்ற காலம். அந்த வகையில் மூன்றாவது பிரிவை அவர்கள் இன்றைக்குத் தொடங்கி இருக்கிறார்கள், இதை மூன்றாவது பிரிவு என்றும் சொல்லலாம். அவர்கள் தொழிற்சாலையிலே மூன்றாவது அணியென்றும் குறிப்பிடலாம். இந்த மூன்றாவது அணியும் அவருக்குப் பிணியாக இல்லாமல் அணியாகவே இருந்து அவருடைய ஆரோக்கியத்தை வளர்ப்பது மாத்திரமல்ல, அவரது தொழிலுக்கு நல்ல வளர்ச்சியையும் தரும் என்று நான் நம்புகிறேன்.

1971–ஆம் ஆண்டில் இந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. அப்படி தொடங்கப்பட்ட டிராக்டர் தொழிலுக்குப் பின்னர், இந்த டாபே பாட்டரி தொழிற்சாலை 1993ஆம் ஆண்டு 18 தொழிலாளர்களோடு தொடங்கப்பட்டது. அப்போது 3,000 பாட்டரிகளை தொடக்கத்திலே உற்பத்தி செய்தது.

பின்னர் இது மேலும் மேலும் உயர்ந்துவரும் பாட்டரிகளின் தேவைகளைக் கணக்கிலே கொண்டு, டாபே பவர் சோர்ஸ் நிறுவனத்தின் இரண்டாவது தொழிற்கூடம் 2000–ஆம் ஆண்டில், கழக அரசு இருந்த அந்தக் காலத்திலேதான் தொடங்கப்பட்டது. இரண்டாவது தொழிற்கூடம் 2000ஆம் ஆண்டில் அப்போதும் கழக அரசு இருந்த அந்தக் காலத்திலேதான் மறைமலை நகரிலே இரண்டாவது தொழிற்கூடமும் தொடங்கப் பட்டது. அப்பொழுது நான்கு சக்கர வாகனங் களுக்கான பாட்டரிகளை உற்பத்தி செய்கிற அளவுக்கு இந்தத் தொழிற்கூடம் வளர்ந்தது.

மாதம் ஒன்றுக்கு 3.5 இலட்சம் பாட்டரிகள் உற்பத்தி செய்கிற அளவுக்கு இந்த தொழிற் கூடம் உயர்ந்திருக்கிறது. இதுவரையிலே 2 கோடி (20 மில்லியன்) பாட்டரிகளை உற்பத்தி செய்து மகத்தான சாதனையை இந்த நிறுவனம்




படைத்திருக்கிறது என்பதை எண்ணும்போது நான் இதை வாழ்த்துவதற்கு கடமைப் பட்டிருக்கின்றேன்.

பொதுவாக கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் தமிழகத்திலே வளர்ந்த தொழில் வளர்ச்சிக்கும் இந்த பதிமூன்று மாத காலத்தில் கழக ஆட்சியிலே வளர்ந்துள்ள தொழில் வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டை இந்த நிகழ்ச்சியிலே உணர்த்தினால் பல தொழில் அதிபர்கள், தொழில்துறை நண்பர்கள் குழுமியிருக்கின்ற இந்த இடத்திலே அது பயனுள்ளதாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். நான் விளம்பரத்திற்காக இதைச் சொல்லவில்லை. எப்பொழுதுமே விளம்பரம் தொழிலை வளர்க்கும். தொழிலை வளர்ப்பது என்றால் என்னுடைய சொந்தத் தொழிலை அல்ல. இது நாட்டிற்கு, பொருளாதாரத்திற்குத் தேவையான தொழில் வளர்ச்சியை உருவாக்குவதற்காக இதைச் சொல்கின்றேன்.

2001 லிருந்து 2006 வரையில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் ஐந்தே ஐந்து தொழில் ஒப்பந்தங்கள் 2,220 கோடி ரூபாய் முதலீட்டில் நிறைவேற்றப்பட்டன. ஆனால் இந்த பதிமூன்று மாத கால கழக ஆட்சியில் பத்து தொழில் ஒப்பந்தங்கள் 9ஆயிரத்து 710 கோடி ரூபாய் முதலீட்டிலே தொடங்கப் பட்டிருக்கிறது என்பதை நான் சிவசைலம் போன்றவர்களுக்கு நல்ல உள்ளம் படைத்தவர்களுக்கு தொழிலை எந்த அளவிற்கு இந்த அரசு வளர்ந்துக் கொண்டிருக்கிறது, பெருக்கியிருக்கிறது என்பதற்கு மகிழ்ச்சி அடைவார்கள் என்ற எண்ணத்தோடு இதை நான் தெரிவிக்கின்றேன்.

இந்தத் தொழில் வளர்ச்சி நம்முடைய நாட்டில் மறைமலை நகரிலே மாத்திரம் அல்ல, சென்னைக்கு அருகிலே உள்ள இடங்களிலே மாத்திரமல்ல, இன்னும் உட்புற கிராமங்களிலே, உள்மாவட்டங்களில், வட்டங்களில், கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சி மிக வேண்டும் என்ற ஆசை, எண்ணம் நம்முடைய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியிலே தொடர்ந்து இந்தத் தொழில் வளர்ச்சி கிராமங்களிலும், மாவட்டங்களிலும், தாலுகாக்களிலும் பரப்புவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நல்ல விழாவிலே தெரிவித்து நம்முடைய சிவசைலம் அவர்களுடைய முயற்சிகள் மேலும் மேலும் வெல்க வெல்க என்று என்னுடைய வாழ்த்துக்களை வழங்கி அவரும் உடல்நலம் பெற்று தொழிலாளர்களையும் வளமாக அவர் வளர்த்திட வேண்டும், அவர்களுடைய ஊக்கத்திற்கு, உழைப்புக்கு ஆதரவு தந்திட வேண்டும் என்பதை நான் இங்கே அறிவித்து இந்தத் தொழிற்சாலைக்கு என்னை அழைத்து சிறப்பித்தமைக்காக என்னுடைய நன்றியை அவருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் தெரிவித்து இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
சென்னை, மறைமலைநகரில் 'டாபே'
நிறுவனத்தின் தொழிற் பிரிவை 6.7.2007
அன்று தொடங்கி வைத்து ஆற்றிய உரை

* * *

# ஒரகடத்தில், ரூ.225 கோடி மதிப்பீட்டில்

# 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

## வழங்கும்

## உயர் தொழில்நுட்ப மின்னணு வன்பொருள் தயாரிப்புக்கான புதிய மையம்



அமெரிக்காவில் சான்ஜோஸ் என்னும் இடத்தைத் தலைமை இடமாகக் கொண்டு சான்மினா எஸ்.சி.ஐ. கார்ப்பரேஷன் நிறுவனம் எலெக்ட்ரானிக்ஸ் பொருள்கள் தயாரிப்புப் பணிகளில் ஒரு முன்னணி நிறுவனமாகும். சான்மினா எஸ்.சி.ஐ. நிறுவனம் ஆண்டுக்கு 11 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு வருவாய் ஈட்டி 2006 ஆம் ஆண்டில் உலகின் மிகச் சிறந்த 500 நிறுவனங்களில் 198–ஆவது தகுதி பெற்றுள்ளது. உலகின் 19 நாடுகளில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் 80 தொழிற் சாலைகளில் ஏறத்தாழ 51 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

இந்த சான்மினா எஸ்.சி.ஐ. நிறுவனம், ஒரகடம் உயர் தொழில்நுட்ப மையத்தில் 225 கோடி ரூபாய் முதலீட்டில், 100 ஏக்கர் பரப்பில் தனது புதிய உற்பத்திப் பிரிவைத் தொடங்க உள்ளது. இத்திட்ட முதலீடு 315 கோடி ரூபாயாக உயருமென எதிர்பார்க்கப் படுகிறது. சான்மினா எஸ்.சி.ஐ. நிறுவனத்தின் உதிரிபாக உற்பத்தி யாளர்கள் தங்களுடைய தொழிற் சாலைகளை தமிழகத்தில் நிறுவுவார்கள்



என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், 4,000 தொழிலாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும், 6,000 தொழிலாளர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் வழங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒரகடத்தில் உள்ள சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் ஒரகடம் உயர் தொழில்நுட்ப மையம் அமைக்கப்படும் என 8.5.2007 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார். இந்த மையம் சென்னைக்கு அருகில் அமையும் இரண்டாவது மின்னணு வன்பொருள் வளர்ச்சி மையமாகும். மைய அரசு இதற்குரிய முறையான ஒப்புதலை அண்மையில் வழங்கியுள்ளது. சிப்காட் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ள திருப்பெரும்புதூர் உயர்தொழில்நுட்ப மையத்தில் ஏற்கெனவே பல மின்னணு வன்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பிரிவுகளை அமைக்கத் தொடங்கியுள்ளன.

இத்தொழிற்சாலை அமைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 19.6.2007 அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. தமிழக அரசின் சார்பில் தொழில் துறைச் செயலாளர் திரு. சக்திகாந்ததாஸ் இ.ஆ.ப., அமெரிக்காவின் சான்மினா எஸ்.சி.ஐ. கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கான உலகளாவிய செயலாக்கப் பணிகளின் தலைவர் திரு. ஹாரி பிள்ளை ஆகியோர் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இந்த நிகழ்வின்போது அமெரிக்காவில் உள்ள சான்மினா எஸ்.சி.ஐ.நிறுவனத்தின் முதுநிலை நிருவாக அதிகாரிகளாகிய நிருவாகத் துணைத் தலைவர் திரு. சி.டி.சுவா, அதன் தொழில் வணிக இயக்குநர் திரு. மைக்கேல் கோவாக்ஸ், சான்மினா எஸ்.சி.ஐ., இந்தியா நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் திரு. குமரன் சுப்ரமணியன், அதன் தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் திரு. ஆர்.எஸ். வெங்கட்டராமன் ஆகியோரும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கே.ஞானதேசிகன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலாளர் டாக்டர் சி.சந்திரமௌலி, இ.ஆ.ப. ஆகியோரும் உடனிருந்தனர். ■

# செங்கல்பட்டு அருகே ரூ.1,373 கோடியில் எதிர்கால எரிசக்தி மண்டலம்

## 15 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசுக்கும் எம்.பி.பி.எல். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே 14.7.2007 அன்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான பொருட்களை தயாரிப்பதற்கான பிரிவுகளுடன் தொழில் மையம் ஒன்றைத் தமிழ்நாட்டில் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அப்போது, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களும் உடனிருந்தார்.



மும்பையைச் சேர்ந்த கமலா நிறுவன குழு மற்றும் எம்.பி.பி.எல்.நிறுவனத்தால் இணைந்து எதிர்கால எரிசக்தி மண்டலம் (Future Energy Zone) என்ற பெயருடைய தொழில் மையம் நிறுவப்படும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முன்னோடியான திட்டங்களை எம்.பி.பி.எல். நிறுவனம் செயல்படுத்தியிருக்கிறது. கட்டுமானம், மின்னணு மற்றும் ஜவுளி போன்ற துறைகளில் கமலா குழு குறிப்பிடத்தக்க முதலீடுகள் செய்துள்ளது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உற்பத்தி பொருள் பரிசோதனை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் மனிதவள மேம்பாடு ஆகியவற்றிற்கான வசதிகளை இத்தொழில்நுட்பப் பூங்கா கொண்டிருக்கும். உயிரி கொதிகலன்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பொருட்களை தயாரிக்கும் அலகுகள், உயிரி எரிவாயு உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் டைஜஸ்டர்கள், சிறப்பு எரிவாயு என்ஜின்கள், சூரிய வெப்ப தகடு பொருட்கள், கார்பன் எரிசக்தி பேட்டரிகள், உயிரி எரிபொருள் சுத்திகரிப்பு இயந்திரங்கள் முதலியவற்றைத் தயாரிக்கும் தொழிற்பிரிவுகளுக்கு இத்தொழிற்பூங்கா இடமளிக்கும். இத்தொழில் மையத்திற்கான உட்கட்டமைப்பில் ரூபாய் 900 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்பட வுள்ளது.

473 கோடி ரூபாய் முதலீட்டில் உயர் அறிவுசார் சொத்துடனும் தொழில் நுட்பத்துடனும், புதுப் பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான பொருட் களைத் தயாரிப்பதற்காக பல்வேறு கூட்டு நிறுவனங் களை எதிர்கால எரிசக்தி மண்டலம் ஏற்படுத்தும்.

ஆக, இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் மொத்த முதலீடு ரூபாய் 1,373 கோடி ஆகும். எதிர்கால எரிசக்தி மண்டலம் சுமார் 5,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 10,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும். காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தில் 215 எக்டேர் நிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2008ஆம் ஆண்டு முடிவில் இத்தொழில் மையத்தின் முதற்பகுதி நிறுவப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசின் சார்பில், தொழில் துறைச் செயலாளர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., மற்றும் எம்.பி.பி.எல். நிறுவனத்தின் தலைவர் திரு. எஸ். கிருஷ்ன், கமலா குரூப்பின் தலைவர் திரு. ஆர்.பி. லாட், இயக்குநர், திரு.ரமேஷ் கோவானி, திரு.எம்.எச். சானே, திரு.என்.கே. சாஸ்திரி ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானபோது உடனிருந்தனர். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., மைய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தித் துறைச் செயலாளர் திரு.வி. சுப்பிரமணியன், இ.ஆ.ப., திரு.ஆர்.சதபதி,இ.ஆ.ப., திரு. கு. ஞானதேசிகன்,இ.ஆ.ப., திரு. இளங்கோவன், இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர்.



# பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.1,500 கோடியில் பல்பொருள் உற்பத்தித் தொழில் மையம்

பெரம்பலூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் அங்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக ஒரு சிறப்புத் தொழில் மையம் அமைக்கப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2006–2007 ஆம் ஆண்டிற்கான தொழில்துறை மானியக் கோரிக்கையின்பொழுது அறிவித்தார்கள். மத்திய அரசு இத்திட்டத்திற்குக் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தைக் கூட்டுத் துறையில் செயல்படுத்த டிட்கோ நிறுவனம் உலகளாவிய போட்டிமுறை மூலம் ஐதராபாத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஜி.வி.கே. குழுமத்தைத் தேர்வு செய்துள்ளது. இக்குழுமம், இந்தியாவில் பல்வகைக் கட்டமைப்புகள் சார்ந்த துறைகளில் சாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

இத்திட்டத்திற்காக நிலம் வாங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், தனி மின்சார நிலையம் அமைத்தல், பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் போன்ற வகைகளில் ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் பத்தாண்டுகளுக்குள் இவ்வளாகத்தில் அமையவுள்ள தொழிற்சாலைகளால் ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்படுமென மதிப்பிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தினால், ஏறத்தாழ 50 ஆயிரம் பேருக்கும் மேலாக வேலைவாய்ப்புகள் கிடைக்கும். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் ஏற்படும். இத்திட்டத்தின் காரணமாக பெரம்பலூர், கடலூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் வேலைவாய்ப்புகள் பெருகி, பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

2009–ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கப்படவுள்ள இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 6.7.2007 அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் டிட்கோ நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு.க. இராமசுந்தரம்,இ.ஆ.ப., ஜி.வி.கே. குழுமத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. ஜி.வி. கிருஷ்ணா ரெட்டி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்ச்சியின்பொழுது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, தொழில் துறைச் செயலாளர் திரு. சக்தி காந்ததாஸ், இ.ஆ.ப., ஜி.வி.கே. குழுமத்தின் துணைத் தலைவர் திரு.சஞ்சய் ரெட்டி, நிருவாக இயக்குநர் திரு.சாம் பூபால் ஆகியோர் உடனிருந்தனர்.

★

# தூத்துக்குடி – நெல்லை மாவட்டங்களில் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் டைட்டானியம் டை – ஆக்சைடு தொழிற்சாலை



டாடா ஸ்டீல் நிறுவனம் தமிழ்நாட்டின் தென்பகுதியில் உள்ள பின்தங்கிய மாவட்டங்களான தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் டைட்டானியம் டை – ஆக்சைடு (Titanium Di-oxide) தொழிற்சாலையை 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்திட திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் சுரங்கப் பணி மற்றும் அதன் மூலம் கனிமங்களைப் பிரித்து எடுத்தல், சிந்தடிக் ரூட்டைல் (Synthetic Rutile) தயாரித்தல், உச்ச அளவில் மதிப்புக் கூட்டப்பட்ட டைட்டானியம் டை –ஆக்சைடு சாயப் பொருள் தயாரித்தல் முதலியவற்றை மேற்கொள்ளும். இத்திட்டம் ஏறத்தாழ 1,000 பேருக்கு நேரடியாகவும், 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கும்; மேலும், வேளாண் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த மறுசீரமைத்தல் பணி மூலம் ஏறத்தாழ10,000 பேருக்குத் தொடர் வாழ்க்கை வசதிகள் கிடைக்கவும் வழிவகுக்கும்.

டாடா ஸ்டீல் நிறுவனம், இத்திட்டத்திற்காக நிலம் வழங்கியோரின் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும்; மற்றும் அக்குடும்பத்திலுள்ளவர்கள் வேலைவாய்ப்பு களைப் பெறத்தக்க வகையில் அவர்களுக்குத் தகுந்த பயிற்சிகளையும் அளிக்கும். மேலும், டாடா ஸ்டீல் நிறுவனம் சுரங்கப் பணி முடிக்கப்பட்ட நிலங்களில் பணப் பயிர்களைப் பயிர்செய்யும் அளவிற்கு அவற்றைச் சீரமைத்து மேம்படுத்தி, அதன் மூலம் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்குத் தொடர் வாழ்க்கை வசதிகளும், வேலைவாய்ப்புகளும் கிடைக்க உதவும். டாடா ஸ்டீல் நிறுவனம் தங்களது டைட்டானியம் டை–ஆக்சைடு திட்டத்திற்காகக் கடல் நீரை நன்னீராக்கும் தொழிற்சாலை மற்றும் மின்தொழிற்சாலை ஆகியவற்றையும் நிறுவும்.

இத்திட்டம் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படுவதால் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும். மேலும், இத்திட்டம் இப்பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த உதவும். தமிழக அரசு இத்திட்டத்திற்குத் தேவைப்படும் உதவிகளையும், சலுகைகளையும் அளிக்கும்.

இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 28.6.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறைச் செயலாளர், திரு.சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., டாடா ஸ்டீல் நிறுவனத்தின் சார்பில் அதன் நிருவாக இயக்குநர் திரு. பி. முத்துராமன் ஆகியோர் கையொப்ப மிட்டனர். இந்நிகழ்வின்போது, டாடா குழுமத்தின் தலைவர் திரு. ரத்தன் என். டாடா, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் மற்றும் ஆணையர் திரு இ. தசரதன், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர். ■



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் செய்தி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

– என்றார் அய்யன் திருவள்ளுவர்.

எண், எழுத்து எனும் இரு கண்களையும் இழந்து கல்வி கற்கும் வயதில் குழந்தைத் தொழிலாளர்களாகச் சிறுவர்களும், சிறுமியர்களும் வேலைகளில் ஈடுபடுவதும், ஈடுபடுத்தப்படுவதும் கொடுமையாகும். இக்கொடுமையைக் களைந்திட ஆண்டுதோறும் சூன் திங்கள் 12 ஆம் நாள் "குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள்" என உலகெங்கும் கடைப்பிடிக்கப்படுகிறது.

தமிழகக் குழந்தைகள் அனைவரும் கல்விபெற வீதிதோறும் பள்ளிகள் அமைக்கப்பட்டு, இலவசக் கல்வி, இலவசச் சீருடை, இலவசப் பாடநூல்கள், முட்டையுடன் இலவசச் சத்துணவு, இலவச மருத்துவப் பரிசோதனைகள், இலவசப் பேருந்து பயணச் சலுகைகள், ஊக்க உதவித் தொகைகள் எல்லாம் அளிக்கப்படுகின்றன. இவற்றின் பயனாகப் பள்ளி செல்லாக் குழந்தைகள் எண்ணிக்கையும், குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கையும் தமிழகத்தில் பெரிதும் குறைந்துவிட்டன. எனினும், இது முற்றிலும் தடுக்கப்பட்டாக வேண்டும்: மனமாற்றமே இதற்கு மாமருந்தாகும்.



பெற்றோர் தொழில் புரிவது பெருமை, குழந்தைகள் தொழில் புரிவது சிறுமை; குழந்தைகள் வீட்டிற்கும், நாட்டிற்கும் செல்வங்கள் என ஒவ்வொரு பெற்றோரும் மனதளவில் உணர்ந்திட வேண்டும்; தங்கள் குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்பிட வேண்டும்.

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துதல் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம்; எனவே, குழந்தைகளை வேலைக்கு அமர்த்தமாட்டோம் எனத் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் மனதால் உணர்ந்து, உறுதியுடன் கடைப்பிடித்திட வேண்டும்.

தமிழக அரசைப் பொறுத்தவரை குழந்தைகள் தொழில்களில் ஈடுபடும் போக்கைத் தடுப்பதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இதில் பெற்றோர்கள், தொழில் உரிமையாளர்கள், அரசு அலுவலர்கள், அரசு சாரா நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், தொழிற் சங்கங்கள் பொதுமக்கள் எனப் பலரும் மனமுவந்து அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகள் அனைவரும்
கல்வி இன்பம் காணச் செய்வோம்!
குழந்தைத் தொழிலாளர் இல்லா மாநிலம்
தமிழகம் எனப்புகழ் குவிப்போம்!

❖ ❖ ❖

புத்தர் மகாபரி நிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டு கொண்டாட்ட நிறைவு விழா – 30.6.2007 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. விழாவுக்கு வருகைதந்த பெருமக்களையும், சான்றோர்களையும் வரவேற்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் உரையாற்றினார். வழக்குரைஞர் திருமதி. அ.அருள்மொழி, கவிக்கோ அப்துல் ரகுமான், பேராசிரியர் பெரியார் தாசன், இ.கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு.தா.பாண்டியன், முனைவர் ஔவை நடராஜன், சட்டமன்ற உறுப்பினர் திரு.கோ.க.மணி, சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.சுதர்சனம், நீதியரசர் பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் ஆகியோரும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ.தமிழரசி, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்கு மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையேற்றார்.

# திருவள்ளுவர் சிந்தனையும் புத்தரின் சிந்தனையும் ஒன்றுதான்







# புத்தபிரானின் புரட்சிகரமான கருத்துக்களை உயிர்ப்பித்து உலவவிடுவோம்!

30.6.2007 அன்று நடைபெற்ற
புத்தர் மகாபரி நிர்வாணம் அடைந்த 2550ஆம்
ஆண்டு நிறைவு கொண்டாட்ட விழாவிற்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது :—

**து**ன்பங்கள் தொடர்வதற்கு; மனித உள்ளத்தில் ஆசைகள் படர்வதுதான் காரணம் என்பதை – ஊருக்கு உபதேசமாகக் கொள்ளாமல், செயலில் காட்டிய செம்மல் புத்தபிரான். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியத் திருநாட்டில் அன்பெனும் விதை நட்டு அனைத்து மக்களிடமும் சமத்துவ ஆல்பரப்பி பகுத்தறிவுப் புரட்சி செய்தவராவார். அந்தத் தருவின் விழுதுகளும், கிளைகளும் உலகில் பல நாடுகளில் பரவியுள்ள பெருமைக்குச் சொந்தக்காரர்கள் நாமென்று – ஆலின் அடிமரமாக ஆணிவேராக அவரது அறிவொளிக் கொள்கைகளை வாழ்க்கைத் தத்துவமாக அமைத்துக் கொள்வதிலே ஆறுதல் பெறுகிறோம்.

அந்த இனிய உணர்வை வெளிப்படுத்தி புத்தபிரானின் புரட்சிகரமான கருத்துக்களை உயிர்ப்பித்து உலவ விடுவதே இந்நாள் சூளுரையாக மேற்கொள்வோம்.

நமது பேராசிரியர் அழைப்பையேற்று இவ்விழாவில் கலந்து கொள்வதாக இருந்த எனக்கு; சற்றே உடல் நலிவு – அதனால் ஆர்வலர்களும், அவையோரும் பொறுத்தருள வேண்டுகிறேன்.




மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள் தலைமை வகித்துப் பேசியபோது :

“ஆண்டுதோறும் நடைபெற வேண்டிய ஒருவரின் விழா, மனிதனின் வழிகாட்டியாக இருப்பவரின் ஒரு விழா, எப்போதாவது ஒருநாள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பவுத்தம் என்பது ஒரு மதம் இல்லை, மதம் என்றால் கண்டிப்பாக அதற்கு ஒரு கடவுள், மோட்சம், நரகம் வேண்டும். ஆனால் புத்தர், முதலில் கடவுளைப் பற்றி கவலைப்பட வேண்டாம், மனிதனைப் பற்றி கவலைப்படு என்று சொல்லியிருக்கிறார் என்று தந்தை பெரியாரே கூறியுள்ளார். புத்தருடைய கருத்து திராவிடத்தோடு தொடர்புடையது.

இன்றைய சூழ்நிலையில் இருப்பது போன்று மேல்ஜாதி, கீழ்ஜாதி, தீண்டாமைக் கொடுமை புத்தர் காலத்தில் இல்லை. ஆனால் அடிமட்டத்தில் அந்த எண்ணங்கள் இருந்தன. அதை எதிர்த்தவர் புத்தர்.

திருவள்ளுவர் சிந்தனையும் புத்தரின் சிந்தனையும் ஒன்றுதான். புத்தரைப் போன்று மகாமனிதனை உலகத்தில் எங்கும் கண்டதில்லை. அவரை உலகம் மறக்காது. புத்தர் உயர்ந்த உள்ளம் கொண்டவர். அவரைப் போல மனிதன் வாழ முயற்சிக்க வேண்டும்.

புத்தரின் மதம் நம்மிடம் இல்லை. கருத்து நம்மிடம் உள்ளது. புத்தர் துறவு பூண்டார் என்பது உண்மையல்ல. துறவு பூண்டார் என்பதை புத்தர் சில சூழ்நிலை காரணமாக நகரத்தைவிட்டு காட்டுப்பகுதிக்கு சென்று ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்து மக்களுக்கு அறிவுரைகளை வழங்க முற்பட்டார். தியானம் என்பது மதம் அல்ல, தியானத்திற்கு மூலமாக விளங்குபவர் புத்தர்தான்” என்று குறிப்பிட்டார்.

விழாவில், ஏராளமான பொதுமக்களும் புத்தபிக்குகளும் கலந்துகொண்டனர். நிறைவாக தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 10–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார்



தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து அரசு தேர்வுத் துறை நடத்தும் 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுச் சாதனை படைக்கும் மாணவ மாணவியரின் உயர் கல்விச் செலவினங்களைத் தமிழக அரசு ஏற்கும் திட்டம் 1996ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டதாகும். அத்திட்டத்தின் கீழ், அண்மையில் வெளியிடப்பட்ட, 2007 மார்ச் திங்களில் நடைபெற்ற 10 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு முடிவுகளின்படி, மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெற்றுச் சாதனைப் படைத்துள்ள 7 மாணவ, மாணவியரும் 9.6.2007 அன்று காலை தலைமைச் செயலகத்தில் தம்மைச் சந்தித்தபோது அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பாராட்டுகள் தெரிவித்து வாழ்த்துக்கள் கூறினார்.

முதலிடம் பெற்ற காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு புனிதமேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி எஸ். அக்ஷயா, 500க்கு 490 மதிப்பெண்கள் பெற்று, மாநில அளவில் முதல் இடம் பெற்றதற்கு பரிசாக 7,500/– ரூபாயும், நெல்லை மாவட்டம், சேரன்மாதேவி, இருதயகுளம், அமலி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி எஸ். ஜஸிமா சுலைஹா, திருவாரூர் மாவட்டம், பேரளம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவி செல்வி பி. சிவகாமசுந்தரி ஆகிய இருவரும் 500க்கு 489 மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றமைக்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் 6,000 ரூபாயும், கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை, அமலா கான்வென்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ஆர். லம்ஷி, தூத்துக்குடி மாவட்டம், ஸ்பிக் நகர் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி ஏ. பால வித்யா, நாகை மாவட்டம், மயிலாடுதுறை திவான் பகதூர் டீ ரெங்கச்சாரியார் தேசிய மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி ஜே.ஆர்த்தி, கடலூர் மாவட்டம், கடலூர் மஞ்சக்குப்பம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி மாணவர் செல்வன் இ.கார்த்திகேயன் ஆகிய நால்வரும் 500க்கு 488 மதிப்பெண்கள் பெற்று, மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றமைக்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5,000 ரூபாய் எனப் பரிசுத் தொகைகள் வழங்கி, அம்மாணவ மாணவியரின் உயர்கல்விச் செலவு முழுவதையும், தமிழ்நாடு அரசே ஏற்கும் என்பதற்கான சான்றிதழ்களையும், அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 10 ஆம் வகுப்புத் தேர்வுகளில் மட்டும் மாநில மாவட்ட அளவில் சாதனைகள் படைக்கும் ஏறத்தாழ 100 மாணவ, மாணவியர்கள் ஆண்டுதோறும் அரசின் செலவிலேயே படித்து முன்னேறும் அரியவாய்ப்புகள் கிடைக்கின்றன என்றும், இந்த ஆண்டில் அந்த வாய்ப்புகளைத் தங்களுக்கு வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் மாணவ மாணவியரும், அவர்களது பெற்றோரும் பெருமிதத்துடன் மனம் நெகிழ்ந்து நன்றி கூறினர். ★

# ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 50 இலட்சம் நிதியுதவி



**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 11.4.2007 அன்று சட்டமன்றக் கூட்டத் தொடரில் தமிழகத்திலுள்ள 561 பேரூராட்சிகளிலும் நான்காண்டு காலத்திற்குள் "அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார். இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கேற்ப பணிகள் தொடங்கப்படவுள்ளன.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், திட்டப் பணிகளை ஆய்வு செய்ய வருகை தந்தபோது தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சித் துறை பிரதிநிதிகளால், பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக தக்க நிதி ஒதுக்கீடு மற்றும் பணிகள் மேற்கொள்வதற்கான ஆணையினை வழங்கும்படி வேண்டிக் கொண்டதற்கிணங்க பொதுமக்களின் அத்தியாவசிய அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் பொருட்டு அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் விதத்தில், "அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" உருவாக்கப்படும் என சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவித்துள்ளதற்கிணங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின்படி குறைந்த வருமானம் உள்ள பேரூராட்சிகளில் மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் நிதிநிலை இடர்பாடுகளால் எந்தவொரு பெரிய அளவிலான அடிப்படை மற்றும் கட்டுமானப் பணிகள் எடுத்துக் கொள்ளாத நிலையினைப் போக்கிட அரசு புதிய முனைப்பாக இத்திட்டத்தினை பேரூராட்சிகளின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு குறைந்த வருமானம் உள்ள பேரூராட்சிகளுக்கு முன்னுரிமை அளித்து பட்டியல் தயாரிக்கப்பட்டு பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மக்களின் அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளித்து குடிநீர் வசதி, சாலை மற்றும் பாலங்கள் அமைத்தல், தெருவிளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், சுயஉதவிக் குழுக்களுக்கு

பணிக்கூடம் அமைத்தல், அங்காடி வளாகம், சுகாதார வளாகம் அமைத்தல், படிப்பகம், பூங்கா அமைத்தல் மற்றும் உட்கட்டமைப்புப் பணிகளை செய்திட இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை மாவட்ட அளவில் முழுமையாக செயல்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை குழு தலைவராகவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் உறுப்பினர்–செயலாளராகவும், பிற துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட திட்ட செயலாக்க கண்காணிப்புக் குழு அமைத்து திட்டம் செயல்படுத்தப் படும். இக்குழு இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவும், கண்காணிக்கவும், பிற திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2007–2008ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் 140 பேரூராட்சிகள் வீதம் பேரூராட்சிகளின் வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு குறைந்த வருமானம் உள்ள பேரூராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து தேர்வு செய்து, ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.50 இலட்சம் நிதியுதவியுடன் ஆண்டுக்கு ரூ.70 கோடி நிதியுதவியும், ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்தில் உள்ள 25 சதவிகித பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு, நான்கு ஆண்டு காலத்திற்குள்  பேரூராட்சிகளிலும் மொத்தமாக ரூ.280.50 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு காஞ்சிபுரம் – 6, திருவள்ளூர் – 3, வேலூர் – 6, திருவண்ணாமலை – 3, தருமபுரி – 2, கிருஷ்ணகிரி – 2, சேலம் –8, நாமக்கல் –4, ஈரோடு– 14, கோயம்புத்தூர்– 13, நீலகிரி – 3, கடலூர் 4, விழுப்புரம் – 3, தஞ்சாவூர் – 6, நாகப்பட்டினம் – 2, திருவாரூர் –1, திருச்சி –4, பெரம்பலூர் – 2, புதுக்கோட்டை –2, திண்டுக்கல் – 6, கரூர் – 3, மதுரை – 3, தேனி – 5, இராமநாதபுரம் – 2, விருதுநகர் – 3, சிவகங்கை – 3, திருநெல்வேலி – 9, தூத்துக்குடி – 4, கன்னியாகுமரி – 14 ஆக மொத்தம் 140 பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

பேரூராட்சிகளில் அடிப்படை மற்றும் கட்டுமான வசதிகள், சுகாதாரம் மற்றும் சுற்றுப்புற தூய்மை பேணிடும் பணிகள் மற்றும் பேரூராட்சிகளில் பொதுமக்கள் தகவல் எளிதில் பெற்றிட கணினிமயமாக்கல் மற்றும் ஒருங்கிணைந்த வகையில் பேரூராட்சிகள் சமூகப் பொருளாதார வளர்ச்சி பெற்றிட, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களோடு ஒருங்கிணைத்து செயல்படுத்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. ★

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் ஆணை

## சிக்குன் குனியா - தடுப்பு நடவடிக்கை 3,850 களப் பணியாளர்கள் நியமனம்

கேரள மாநிலத்தில் பரவலாக "சிக்குன் குனியா'' நோய் பரவியுள்ள நிலையில், தமிழகத்தில் அந்த நோய் வந்துவிடக்கூடாது என்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 11.6.2007 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ஆகியோருடன் விவாதித்தார்.

துறையின் அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் முதல் அமைச்சர் அவர்களிடம் தமிழக அரசின் சார்பில் "சிக்குன் குனியா'' நோய் வராமல் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்கள். மக்கள் இன்னும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்திடும் வகையில் தகுந்த விளம்பரங்களை உடனடியாகச் செய்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

நடவடிக்கைகளுக்குப் பிறகும், அந்த நோய் தமிழகத்திற்கு வந்து விட்டால், அப்போது உடனடியாக அந்த நோயைத் தடுத்து நிறுத்திட தேவையான மருந்துகளை முன்கூட்டியே வாங்கி தயாராக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக, "சிக்குன் குனியா'' நோய் நிரந்தரமாக தமிழகத்திற்குள் வராத அளவிற்கு தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்காக கிராமங்களில் கொசுக்களை அறவே ஒழிக்க வேண்டி 3,850 தற்காலிக களப் பணியாளர்களை நியமித்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதற்கான பணிகளை நிறைவேற்றிட அரசு சார்பில் 7 கோடியே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

★ ★ ★

# மகளிர் சுயஉதவிக்குழு உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய சென்னையில் ரூ.5 கோடியில் விற்பனை மையம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு



சென்னை மாநகராட்சி சார்பில் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு சுழல்நிதி வழங்கும் விழா சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 13.06.2007 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6,737 சுயஉதவிக் குழுவினருக்கு சுழற்சி நிதியாக தலா ரூ.1,000 வீதம் வழங்கிப் பேசுகையில், "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1989ஆம்



ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக சுயஉதவிக்குழுக்களை தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை நிதியத்தின் உதவியுடன் தொடங்கினார்கள். இத்திட்டம் பரந்து, விரிந்து வியக்கத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது. சென்ற ஆட்சியாளர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களை அரசியலுக்காக, தேர்தலுக்காகப் பயன்படுத்தினார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் சுயஉதவிக்குழுவினர் சுயமாக சிந்தித்து, பொருளாதாரத்தில் உயர வழிவகை கண்டார்கள். தமிழகத்தைப் பொருத்தவரை 30.04.2006ன்படி 3 இலட்சத்து 38 ஆயிரத்து 430 சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் கிராமப்புற குழுக்கள் 2 இலட்சத்து 45 ஆயிரத்து 38 எனவும், நகர்ப்புற குழுக்கள் 93 ஆயிரத்து 392 ஆகும். மொத்தம் 54 இலட்சத்து 42 ஆயிரத்து 303 நபர்கள் குழு உறுப்பினர்களாக உள்ளனர். இதில் கிராமப்புற உறுப்பினர்கள் 39 இலட்சத்து 76 ஆயிரத்து 521 ஆகவும், நகர்ப்புற உறுப்பினர்கள் 14 இலட்சத்து 65 ஆயிரத்து 782 ஆக உள்ளனர். இவர்களின் மொத்த சேமிப்புத் தொகை ரூபாய் 1,410 கோடியே 40 இலட்சம் ஆகும்.

**சுயஉதவிக்குழு கல்வித்திட்டம்**

கழக ஆட்சி ஏற்பட்டதற்கு முன்னதாக சுயஉதவிக் குழுக்கள் சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன. தலைவர் கலைஞர் அவர்கள் இக்குழுக்களை ஒருங்கிணைந்து சிறப்புடன் செயல்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுத்த ஆணையிட்டார்கள். இக்குழுக்கள் சமுதாயத்தில் உரிய அங்கீகாரம் பெறவும், அரசு அலுவலகங்கள் மற்றும் வங்கிகளை எளிதாக அணுகிப் பயன் பெறவும், அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக்குழுக்களுக்கும் அரசு செலவில் அடையாள அட்டை வழங்க முடிவெடுக்கப்பட்டு நடந்து முடிந்த

சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. இந்த அடையாள அட்டையில் குழு உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள், குழுவின் சேமிப்பு, கடன் மற்றும் இதர தகவல்களும் இடம் பெறும். இப்பணிக்காக இந்த ஆண்டு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணிற்கு அளிக்கப்படும் கல்வி ஒரு குடும்பத்திற்கே அளிக்கப்படும் கல்வி ஆகும். ஆகவே, சுய உதவிக்குழு பெண்களுக்கு அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்துடன் இணைத்து அடிப்படை கல்வி அளிக்க ஒரு முன்னோடித் திட்டத்தை முதல் கட்டமாக 1,000 ஊராட்சிகளில் இந்த ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் சுயஉதவிக்குழு கல்வித் திட்டம் என்று அழைக்கப்படும். இத்திட்டத்திற்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பயிற்சித்தொகை மீண்டும் உயர்வு**

குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் முக்கிய நோக்கம் சுய உதவிக்குழுவின் கோட்பாடுகளை அனைத்து உறுப்பினர்களும் அறிந்து கொள்வதுடன் அவர்களிடையே மறைந்துள்ள திறமையை வெளிக் கொணரவும் வாய்ப்புகள் உண்டாக்குவதாகும். கழக அரசால் பயிற்சிக்கான தொகை ரூபாய் 45 ஏற்கெனவே வழங்கப்பட்டது. இந்தத் தொகை சென்ற ஆட்சிக் காலத்தில் வெறும் ரூபாய் 7.50 என குறைத்து வழங்கப்பட்டது. 2006–2007 ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் பயிற்சிக்கு வருகை தரும் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித் தொகையை ரூபாய் 7.50லிருந்து ரூபாய் 45.00 ஆக மீண்டும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். சுய உதவிக்குழு உறுப்பினர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்தவும், சுய உதவிக்குழு கூட்டமைப்பு களுக்கிடையே சமத்துவப் பொங்கல் திருநாளில் பல்வேறு குழுப்போட்டிகள் நடத்த அறிவுறுத்தப் பட்டுள்ளது. வட்டார அளவிலும், பின்னர் மாவட்ட அளவிலும் போட்டிகள் நடத்தி, வெற்றி பெறும் கூட்டமைப்புகளுக்கு ரொக்கப் பரிசுகளும், விருதுகளும் வழங்கப்படும். இதற்கு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

**6,737 பேர்களுக்கு தலா ரூ.1000**

சென்னை மாநகராட்சி மூலம் சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டதின் கீழ் இதுவரை தனி நபர் கடன் 112 நபர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 61 ஆயிரம், 1,260 நபர்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 14 இலட்சத்து 99 ஆயிரமும் குழு கடனாக 116 நபர்களுக்கு ரூபாய் 5 இலட்சத்து 65 ஆயிரமும், பயிற்சித் தொகையாக 1,225 நபர்களுக்கு ரூபாய் 22 இலட்சத்து 5 ஆயிரம் என மொத்தம் 2,713 நபர்களுக்கு சுவர்ண ஜெயந்தி திட்டத்திலிருந்து ரூபாய் 46 இலட்சத்து 30 ஆயிரத்து 209 வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் இந்த விழாவில் சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஊக்கப் படுத்துவதற்காக 6,737 மகளிர் சுய உதவிக்கு உறுப்பினர்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 67.37 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. தலைவர் கலைஞர் அவர்கள் மகளிருக்காக சொத்தில் சம பங்கு சட்ட உரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடும், மகளிருக்கு திருமண உதவித் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி உள்ளார்கள். தேர்தல் அறிக்கையில் அறிவித்த பல திட்டங்களை ஆட்சிக்கு வந்தவுடன் நிறைவேற்றி சாதனை படைத்து உள்ளது கழக அரசு. அனைவருக்கும் இலவச கலர் டி.வி. வழங்கும் திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரேஷன் அட்டை உள்ள அனைவருக்கும் இலவச கலர் டி.வி. வழங்கப்படும்.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் சுய உதவிக்குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக மாநில அளவிலான விற்பனை மையம் ரூபாய் 5 கோடி செலவில் விரைவில் அமைக்கப்பட உள்ளது". என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள்.

**– ச. செல்வராஜ்**
*மக்கள் தொடர்பு அலுவலர்,*
*சென்னை மாநகராட்சி*

# ஓராண்டில் ரூ.280 கோடியில் தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டம் நிறைவேற்றம்



தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் இரண்டாவது கூட்டம் 11.6.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலர், நிதித்துறை செயலாளர், ஊரக வளர்ச்சித் துறைச் செயலர், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர், பாராளுமன்ற உறப்பினர் திரு.என்.எஸ்.வி. சித்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி, திரு. சுந்தரம், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



கடந்த 25.11.2006 அன்று நடைபெற்ற முதல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீதான மேல்நடவடிக்கை குறித்தும், தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகள், வழங்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள், திட்ட நிதி பயன்பாடு ஆகியவை குறித்தும் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

கடந்த ஆட்சியில் இந்தத் திட்டத்தின் கீழ் 6 மாவட்டங்களில் சுமார் 3 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்த நிலையில் 13.5.2006 க்குப் பிறகு இந்த ஓராண்டு காலத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 280 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்றும், மொத்தம் 3 கோடியே 45 இலட்சத்து 11 ஆயிரம் மனித வேலை நாட்கள் இந்த ஓராண்டு காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புப் பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூபாய் 80 வழங்குவதற்கு ஏதுவாக, இத்திட்டத்திற்கென தனியான விலைப்பட்டியலை இந்த அரசு அறிவித்துள்ளது. இதனால் இத்திட்டத்தின் கீழ் தற்போது ஊதியமாக ஒரு நபருக்கு ரூபாய் 80 வீதம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசிற்கு கடிதம் எழுதியுள்ளார் என்றும், ஏற்கெனவே இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களோடு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கூடுதலாக தஞ்சாவூர், கரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்த மத்திய அரசு அனுமதித்துள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

* * * * * * * * * * * * * * * * * * * * *

# சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 28,700 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி

பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் நடப்பு ஆண்டான 2007–08இல் 28,700 நபர்களுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி தொழில் நிறுவனம் அமைக்க தனி நபருக்கு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரையில் கடன் வழங்கப்படும். வியாபாரம் மற்றும் சேவை சார்ந்த நிறுவனம் அமைக்க தனிநபர் முன் வந்தால் அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரையிலும், கூட்டாக 5 நபர்கள் சேர்ந்து திட்ட மதிப்பீடு ரூ.10 இலட்சம் வரையிலான தொழில் வியாபார நிறுவனம் அமைக்கவும், வங்கிகள் மூலம் அதிகபட்சம் ஒரு நபருக்கு ரூ.12,500 வீதம் மானியத்துடன் கூடிய கடன் பெற்று சுயமாக தொழில் செய்யலாம். இத்திட்டத்தில் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் கடனுதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழு ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் வரையிலும், குழு உறுப்பினருக்கு ரூ.15,000 வரையிலும் மானியம் வழங்கப்படும். குழுமத் திட்டத் தொழில்களுக்கு தனி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சம் வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்**

கடனுதவி பெற வயது 18 முதல் 35க்குள் இருக்க வேண்டும். ஆதிதிராவிடர் / பழங்குடியினர், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் மற்றும் பெண்களுக்கு உச்சகட்ட வயது வரம்பு 45 ஆக தளர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். 8 ஆம் வகுப்பிற்கு மேல் கல்வித் தகுதி உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,00,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தொடர்புடைய மாவட்டத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருபவராக இருத்தல் வேண்டும்.

எனவே தகுதியுள்ள நபர்கள் தக்க சான்றுகளுடன் அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட தொழில் மையத்தை அணுகி, இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பத்தை பெற்று பயனடையுமாறு தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறை ஆணையர் திரு.ம.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரூ.723 கோடி செலவில் 8,200 கி.மீ. சாலைகளைப் புதுப்பிக்க மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து 11.07.2007 அன்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், துறைச் செயலர் மற்றும் பொறியாளர்களுடன் ஆய்வு செய்தார். நடைபெற்று வரும் சாலைப் பணிகள் மற்றும் புதிதாக ஒப்புதல் தரப்பட்டுள்ள 6,530 கிலோமீட்டர் நீள சாலைப் பணிகளையும், 12 மேம்பாலங்கள், 175 பெரிய மற்றும் சிறிய பிற பாலங்களையும் துரிதப்படுத்தி முடிப்பதென்றும்; மேலும், நடப்பாண்டில் அரசு திட்டப் பணிகளுக்கு ஒதுக்கியுள்ள ரூ.2,653 கோடியை முழுமையாகப் பயன்படுத்தி சாலை மேம்பாட்டுப் பணிகளை முடிப்பதென்றும்;

சாலைகளைப் பராமரிக்கும் பணிகளுக்காக நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.723 கோடியைப் பயன்படுத்தி 8,200 கிலோமீட்டர் சாலைகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுப்பதென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், தமிழகத்திலுள்ள மாநிலச் சாலைகள் அனைத்தையும் இரு வழித்தடங்களாக அகலப் படுத்துவது என்ற அரசின் கொள்கை அடிப்படையில் கடந்த ஓராண்டில் 1,518 கிலோமீட்டர் நீளச் சாலைகள் அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல, சுமார் 1,000 கிலோ மீட்டர் மாநிலச் சாலைகளை அகலப்படுத்தவும், 925 கிலோ மீட்டர் மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் 1,367 கிலோ மீட்டர் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தவும், 42 புதிய பாலங்களைக் கட்டுவதற்கும், ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.729 கோடி அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை வழங்கினார்.

* * *

## தமிழரசில் பணியாற்றிய கவிஞர். சாமிபழனியப்பன் மருத்துவ சிகிச்சைக்காக ஒரு இலட்ச ரூபாய் நிதியுதவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மாணவரும், தமிழரசு பத்திரிகையில் ஏற்கெனவே பணியாற்றி ஓய்வுபெற்றவருமான, 82 வயதுடைய கவிஞர். சாமிபழனியப்பன், அவர்கள் இருதய கோளாறு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும், அவருக்குச் சிகிச்சை தொடர வேண்டி உள்ளதால், தங்கள் குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு நிதியுதவி வழங்குமாறு அவரது துணைவியார் அரசுக்கு அளித்துள்ள கோரிக்கை விண்ணப்பித்தினை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, ஒரு இலட்ச ரூபாய் நிதியுதவியை, கவிஞர். சாமிபழனியப்பன் அவர்களின் மருத்துவ சிகிச்சைக்காக அவரது மனைவி திருமதி. கமலா சாமிபழனியப்பன் மற்றும் அவரது மகள் திருமதி. நாகம்மை ஆகியோரிடம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் 29.6.2007 அன்று வழங்கினார்.

* * *

# தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில்

# ஓராண்டில் ரூ.280 கோடியில்

# 3,548 பணிகள் நிறைவேற்றம்

### மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



**த**மிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலம் செயல்ப டுத்தப்படும் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களின் நிறைவேற்றத்தை கண்காணித்து ஆய்வு செய்திட அமைக்கப் பட்டுள்ள மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவின் இரண்டாவது கூட்டம் **15.6.2007** அன்று தலைமைச் செயலகத்தில் **மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.பெல்லார்மின், திரு.அப்பாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கோ.க.மணி, திரு.எம்.அப்பாவு, திரு. வை. சிவபுண்ணியம், திரு. வீ. மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு.க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, திரு. அலாவுதீன், இ.ஆ.ப., செயலர், நெடுஞ்சாலைத் துறை, திரு.சந்திர மௌலி, இ.ஆ.ப., செயலர் (பொறுப்பு), திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர், மாநில திட்டக் குழு, திரு. நவ்நீத்,இ.ஆ.ப., சிறப்புச் செயலர், நிதித்துறை, திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப., திரு. ஜதிந்திரநாத் ஸ்வய்ன், இ.ஆ.ப., திரு. தியாகராஜன், இ.ஆ.ப., திரு.முத்துசாமி,இ.ஆ.ப., திரு.சிவசங்கரன், இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கடந்த **31.12.2006** அன்று நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரத்தை ஊரக வளர்ச்சித்துறை செயலர் அவர்கள் விளக்கினார். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய வேலை உறுதித் திட்டம், பொன்விழா கிராம

சுயவேலை வாய்ப்புத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், முழு சுகாதார திட்டம் ஆகிய திட்டங்களின் நிதிப் பயன்பாடு, பணிகள் நிறைவேற்ற நிலை குறித்து தனித்தனியாக ஆய்வு செய்யப்பட்டது.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தை தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுத்துகிறது என்றும், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் நிர்ணயிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை கேட்டுக் கொள்ள ஒருமனதாக இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் முந்தைய அரசால் 3 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்த நிலையில் கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 5.6.2007 வரை ரூபாய் 280 கோடி செலவிடப்பட்டு 3,548 பணிகள் நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் கிராமப்புற பகுதிகளில் மொத்தம் 3 கோடியே 45 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப் பட்டுள்ளன என்பதும், குறைந்தபட்ச ஊதியமாக ரூபாய் 80 வழங்கிட தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கென தனியாக விலைப்பட்டியல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது இக்கூட்டத்தில் பாராட்டப்பட்டது.

திரு.கோ.க.மணி அவர்கள் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்காக மாவட்டங்களைத் தேர்வு செய்யும்போது மாநில அரசின் கருத்தினை மத்திய அரசு பெற்று தேர்வு செய்திட வேண்டும் என்றும், இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளைப் பொறுத்து கூடுதலாக பணிகளைச் சேர்த்திட அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங் களிலும் செயல்படுத்திட வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுவித்தார். எனினும் இத்திட்டம் செயல்படுத்தப்படும் சில பகுதிகளில் விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது என்பதையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

சுயஉதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட கூடுதலாக ஏற்பாடுகள் தேவைப்படுகிறது என்றும், இதற்கென தனியாக செயல் திட்டம் வகுக்கப்பட்டு அதன்படி "சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்கள் விற்பனை விழா"க்கள் தற்போது தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைப் பணிகளின் தரம் தேசிய கண்காணிப்புக் குழுவினரால் பாராட்டப்பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் தெரிவித்தார். முழு சுகாதார இயக்கத்தின் மூலம் கட்டப்படும் தனிநபர் இல்ல கழிப்பறைகளுக்கான மதிப்பீடு தற்போது 1,500 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கழிப்பறைகள் மேலும் தரமாக கட்டப்படுவதற்கு இதனை குறைந்தபட்சம் 5,000 ரூபாயாக மாற்ற கேட்டுக் கொள்வது தொடர்பாக விவாதிக்கப் பட்டது.

பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் திரு.அப்பாத்துரை அவர்கள் தெரிவித்தார். பணிகளின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது என்று ஒரு மனதாக கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அனைத்து வளர்ச்சிப் பணிகளின் நிறைவேற்றமும் முழுமையாக கண்காணிக்கப் படுவதாகவும், அளவீடுகள் செய்யப்பட்டு, புகைப்படங்கள் எடுக்கப்பட்டு திட்டப் பணிகளின் நிறைவேற்றும் உரிய முறையில் கண்காணிக்கப்படுவதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலர் அவர்கள் தெரிவித்தார்.

# 91,576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 1,01,623 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உரை



நிலமற்ற ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு நான்காவது கட்டமாக இலவச நிலம் வழங்குகின்ற விழாவும், தகவல் தொழில் நுட்பப் பூங்கா அடிக்கல் நாட்டுகின்ற விழாவும் இணைந்து நடைபெறுகின்ற இந்த மகத்தான நிகழ்ச்சியிலே உங்களையெல்லாம் காணும் பெரும் வாய்ப்பு பெற்றமைக்காக மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்கே உரையாற்றிய நம்முடைய தோழமைக் கட்சிகளின் நண்பர்களும், தி.மு. கழகத்தைச் சேர்ந்த நண்பர்களும், சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று நடைபெறுகின்ற இந்த விழாவின் சிறப்பை மாத்திரமல்ல, இந்த விழாவிலே கலந்து கொண்டிருக்கின்ற என்னுடைய சிறப்புக்களையும், பெருமைகளையும் பலவாறு பெருக்கி உரைத்திருக்கிறார்கள். பெருக்கி உரைத்திருக்கிறார்கள் என்றால், இருப்பதை மேலும் பெருக்கி, உங்களிடத்திலே பேசியிருக்கிறார்கள் என்ற பொருளிலே தான் குறிப்பிடுகிறேன். அவை அடக்கம் என ஒன்று உண்டு. அந்த அவை அடக்கம் காரணமாக அல்ல. உண்மையிலேயே சொல்லுகின்றேன், இவ்வளவு சிறப்புக்கும் பெருமைக்கும் உரியவன் தனி ஒரு கருணாநிதி அல்ல என்பதையும், என்னுடைய வலிமை, என்னுடைய ஆற்றல், என்னுடைய திறமை, என்னுடைய வாய்மை, என்னுடைய செயல் என்று ஒன்று சிறப்புடையதாக அமையுமேயானால், அந்தச் சிறப்புக்கெல்லாம் காரணம், என்னை இங்கே பாராட்டிப் பேசியவர்கள் உள்ளிட்ட, எதிரே அமர்ந்திருக்கின்ற தமிழ்ப்பெருங்குடி மக்களாகிய நீங்கள் தான் என்பதை இத்தனை புகழுரைகளும் உங்களுடைய பாதார



**24 ஆயிரத்து 774 பேர் ஆதிதிராவிட மக்கள் என்பது எனக்கு அகமகிழ்ச்சியை அளிக்கின்ற ஒரு செய்தியாகும். 2 ஆயிரத்து 89 பேர் மலைவாழ் பழங்குடிமக்கள், 28 ஆயிரத்து 880 பேர் பிற்படுத்தப்பட்ட மக்கள், 32 ஆயிரத்து 48 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள். 3 ஆயிரத்து 785 பேர் இதர வகுப்பினர் - ஆகமொத்தம் 91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த அரசு இந்த ஓராண்டு காலத்திலே நிலத்தை இலவசமாக வழங்கியிருக்கிறது.**

விந்தங்களுக்குச் சொந்தம் என்பதையும் நான் இங்கே மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று நடைபெறுகின்ற இந்த விழா – இன்றைய விழா – என்னென்ன உதவிகளை மக்களுக்கு அளிக்கின்ற விழாவாக அமைந்திருக்கின்றது என்பதை எண்ணிப் பார்த்தாலே இந்த அரசு யாரால், யாருக்காக அமைக்கப்பட்ட அரசு என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

33 கோடியே 18 இலட்ச ரூபாய் மதிப்புடைய 107 குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள், 26 பொதுப்பணித் துறைக் கட்டடங்கள் 9 பள்ளிக் கட்டடங்கள், 894 ஊரக வளர்ச்சித் துறை பணிகள் உட்பட 1,141 பணிகள் நிறைவேற்றப்பட்டு அவைகள் இன்றைக்கு திறந்து வைக்கப்படுகின்றன.

427 கோடியே 8 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில், தகவல் தொழில்நுட்பப் பூங்கா, 64 வீட்டுவசதி வாரியத் திட்டங்கள், 166 குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகள், 37 குடிநீர் வடிகால் வாரியப் பணிகள், 5,475 ஊரக வளர்ச்சித் துறை பணிகள் உட்பட 5,831 பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்படுகின்றன.

9 கோடியே 81 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 461 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

ஆக மொத்தம் 470 கோடியே 7 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 44 ஆயிரத்து 433 பணிகள் இன்றைய விழா நிகழ்ச்சியின் மூலம் நெல்லை மாவட்டத்தில் செயலாக்கம் பெறுகின்றன.

இங்கே உரையாற்றிய நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். தி.மு. கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் திருநெல்வேலி சீமைக்கு பல பெரிய திட்டங்களை அறிவித்து நிறைவேற்றி வந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய ஆசை அல்லது அவர்களுடைய எதிர்பார்ப்பு அத்துடன் முடிந்து விடவில்லை என்பதற்கு அடையாளமாகத் தான் நாடாளுமன்ற உறுப்பினர் பேசினாலும், மாநகரத்து மேயர் பேசினாலும் ஒரு கோரிக்கையை வைத்துவிட்டுத்தான் தங்கள் பேச்சை முடித்திருக்கின்றார்கள். நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு பிர்காவை தன்னுடைய மாவட்டத்தோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். நம்முடைய மேயர் ஏ.எல்.எஸ். அவர்கள் செல்லப் பாண்டியன் சிலைக்குப்



பக்கத்திலே உள்ள அந்தப் பகுதியில் ஒரு மேம்பாலத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், நம்முடைய சட்டப்பேரவைத் தலைவரிடத்திலும் பேசும்போது சொன்னார்கள். அதற்கான கோரிக்கை வைக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அது பற்றி விவாதிப்பதாக குறிப்பிட்டு விரைவிலே ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார் என்றும், பொறியாளர்கள் இந்தத் திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் என்னிடம் ஒரு பட்டியலைக் காண்பித்தார்கள்.

## செல்லப்பாண்டியன் பெயரில் மேம்பாலம்

18 கோடி ரூபாய் செலவில் அந்தப் பாலம் அமைப்பதற்கு தொகை வேண்டும், நிதி வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நிதியை இந்த "நிதி"யிடத்திலே எதிர்பார்க்கிறார்களா? அல்லது அரசாங்க "நிதி"யிலேயிருந்து எதிர்பார்க்கிறார்களா என்று தெரியவில்லை. யாரிடத்திலே எதிர்ப்பார்த்தாலும் – நான் இப்போது ஐந்தாவது முறை முதலமைச்சராக இருக்கும்போது முதல் முறையாக நெல்லைக்கு வந்திருக்கின்ற நேரத்தில் இங்கே முதல் முதலாக மேயராக ஆகியிருக்கின்ற என்னுடைய அருமைத் தம்பி ஏ.எல்.சுப்பிரமணியத்தின் வேண்டுகோளை நிறைவேற்றினால் தான் நன்றாக இருக்கும், பொருத்தமாகக் கூட இருக்கும். அவர் கேட்டு பலவற்றை, பல முறை நான் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு இந்தக் கோரிக்கையையாவது நிறைவேற்றினால் அவர் மனம் சாந்தியடையும் என்று சொல்ல மாட்டேன். அவர் மனம் திருப்தியடையும் என்ற எண்ணத்தில் நான் அவருக்கும் சொல்லிக் கொள்கிறேன். நெல்லை மாவட்ட மக்களுக்கும், நெல்லை நகரத்திலே வாழுகின்ற மக்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். அந்த மேம்பாலம் நிச்சயமாக அமைக்கப்படும் அதற்கான ரூபாய் பதினெட்டு கோடியும், அரசின் சார்பில் ஒதுக்கப்படும், அது "செல்லப்பாண்டியன்" சிலைக்கு அருகிலே அமைய இருக்கின்ற மேம்பாலம் என்பதால், செல்லப்பாண்டியன் ஒரு காலத்தில் எனக்கு சபாநாயகராக இருந்தார் என்ற அந்த நினைவோடு, என்னுடைய ஐம்பதாண்டு கால சட்டமன்ற வாழ்வில் வந்துபோன சபாநாயகர்களில் அவரும் ஒருவர் என்பதால், அவர் வந்து போனவர் என்று சொல்ல மாட்டேன். அவர் எங்களுடைய சிந்தையிலே நிறைந்த சபாநாயகர் – அந்தச் செல்லப்பாண்டியனின் பெயரால், அந்த மேம்பாலம் அழைக்கப்படும் என்பதையும் – அந்தப் பாலத்திற்கு "செல்லப்பாண்டியன் மேம்பாலம்" என்ற பெயரையும் சூட்டி, அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை தம்பி மேயர் ஏ.எல்.எஸ். அவர்களுக்கு நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## ஓயாமல் உழைத்துக் கொண்டே இருப்பேன்

அதைப் போல இங்கே எழுப்பப்பட்ட கோரிக்கைகள் எதுவானாலும், அவைகளை நிறைவேற்றித் தருகின்ற கடமை இந்த அரசுக்கு உண்டு. அந்தக் கடமையை உணர்ந்த காரணத்தினால் தான் நான் நம்முடைய அருமைத் தம்பியும், காங்கிரஸ் கட்சியினுடைய வீறுகொண்ட பேச்சாளர்களிலே ஒருவருமான பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, நேற்றைக்கு டெல்லி, இன்றைக்கு நெல்லை என்ற முறையிலே என்னுடைய பயணத்தை அமைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் – நாளைக்கு சென்னை, நாளை மறுநாள் எங்கோ என்று சொல்ல முடியாத அளவிற்கு என்னுடைய சுற்றுப் பயணத்தை நான் வகுத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், நான் எங்கு சென்றாலும் என்ன செய்தாலும் தமிழர்களுக்காக, தமிழர்களுடைய மத்தியில் இருந்து கொண்டு, அவர்களுக்கான பணிகளை நிறைவேற்றுவேன் என்பதற்கு அடையாளமாகத் தான் இப்படிச் சுற்றிக் கொண்டிருக்கிறேன்.

நான் என்னுடைய வாழ்க்கையை குறிப்பாக பொது வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை என்னோடு இருக்கின்ற நண்பர்கள் அறிவார்கள். என்னுடைய பொதுவாழ்க்கை என்பது ஏதோ ஒரு பகிரங்கமான விளம்பர வெளிச்சத்திற்காக அமைத்துக் கொள்ளப்பட்டதல்ல. என்னை நானே அர்ப்பணித்துக் கொள்வதற்காக அமைக்கப்பட்ட வாழ்க்கைக்கு பெயர் தான், கருணாநிதியின் பொது வாழ்க்கை என்று பெயர். அந்தப் பொது வாழ்க்கையிலேயிருந்து என்னை நான் என்றைக்கும் விடுவித்துக் கொள்ள விரும்பவில்லை. ஒருவேளை இயற்கை வேண்டுமானால் என்னை பொது வாழ்க்கையிலிருந்து விடுவிக்கலாமே தவிர இந்த மக்களுடைய பற்றும், பாசமும், மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்று எடுத்துக் கொண்ட உறுதியும் என் நெஞ்சில், என் ரத்தத்தில் ஊறியிருக்கின்ற வரையில் நான் ஓயாமல் இந்த மக்களுக்காக உழைத்துக் கொண்டே தான் இருப்பேன்.

இன்றைக்கு பல உதவிகள் வழங்கப் படுகின்றன. ஏழை விவசாயிகளுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு தேர்தல் நேரத்திலே அளித்த வாக்குறுதிகளின்படி, குறைந்தபட்சம் இரண்டு ஏக்கராவிற்குக் குறையாமல், இலவசமாக நிலம் வழங்கப்படும் என்று அறிவித்த அந்த அறிவிப்பின்படி இது வரையிலே நான்கு கட்டங்களிலும் சேர்த்து, 91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மொத்தம் 1 இலட்சத்து ஓராயிரத்து 623 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது என்றால், இந்த நான்கு கட்டங்களிலும் இலவச நிலம் பெற்றவர்களில்,



24 ஆயிரத்து 774 பேர் ஆதிதிராவிட மக்கள் என்பது எனக்கு அகமகிழ்ச்சியை அளிக்கின்ற ஒரு செய்தியாகும். 2 ஆயிரத்து 89 பேர் மலைவாழ் பழங்குடிமக்கள். 28 ஆயிரத்து 880 பேர் பிற்படுத்தப்பட்ட மக்கள். 32 ஆயிரத்து 48 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள். 3 ஆயிரத்து 785 பேர் இதர வகுப்பினர் – ஆகமொத்தம் 91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த அரசு இந்த ஓராண்டு காலத்திலே நிலத்தை இலவசமாக வழங்கியிருக்கிறது என்பது அடுத்தடுத்து வழங்கப் படவிருக்கின்ற நிகழ்ச்சிகளுக்கு எடுத்துக்காட்டு, படிப்படியாக அந்தப் பணி நடைபெறும் என்ற உறுதியை இந்த மக்கள் கடலிலே நான் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் நடைபெறுகின்ற விழாக்களில் நமது மத்திய, மாநில அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு நான் எப்படி இங்கே கலந்துகொண்டு இன்றைக்கு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்குகின்றேனோ, அதுபோல தமிழகம் முழுவதும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும், சில இடங்களில் மத்திய அமைச்சர் பெருமக்களும் கலந்துகொண்டு இந்த நிகழ்ச்சியிலே நிலம் வழங்குகின்ற, மற்றும் மக்களுக்கு பல உதவிகளை வழங்குகின்ற அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

## நீளும் சாதனைப் பட்டியல்

இந்தப் பணி மாதந்தோறும் நடைபெறும், அதற்கான தேதிகள் எவையெவை என்பதை நீங்கள் அறிவீர்கள். செப்டம்பர் 15 – அண்ணா பிறந்த நாள், செப்டம்பர் 17 – பெரியார் பிறந்த நாள், அக்டோபர் 2 – காந்தி அடிகள் பிறந்த நாள், ஜூலை 15 – பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் என்று இப்படிப்பட்ட நாட்களையெல்லாம் நாங்கள் புனித நாட்களாக கருதி – அதன் அடையாளமாக ஏழையெளிய மக்களுக்கு எதையெதை செய்ய வேண்டுமோ அந்த நல்ல காரியங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கின்றது, அதைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்போம், நெல்லைக்கு செய்யப்பட்டிருக்கின்ற காரியங்கள் இங்கே கருப்பசாமிபாண்டியன் அவர்களாலும், பீட்டர் அல்போன்ஸ் அவர்களாலும், ஆவுடையப்பன் அவர்களாலும், இங்கே பட்டியலிட்டுக் காட்டப்பட்டது. பட்டியல் நீளும், இந்த அரசு தொடரும் வரையில் அந்தப் பட்டியல் நீளும். அந்தப் பட்டியலை படிக்க முடியாத அளவிற்கு உங்களுக்கு நேரம் இல்லாத அளவிற்கு பெரும் பட்டியலை தமிழகத்திலே இருக்கின்ற மக்களுக்கு – எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கு நாங்கள் பாடுபடுவோம், பணியாற்றுவோம். இந்தப் பணியை பழிப்போர் உண்டு, குறை கூறுவோர் உண்டு, வசைபாடுவோர் உண்டு, வசையை இசையாக எடுத்துக் கொள்ளக்கூடிய மனப்பக்குவமும் எங்களுக்கு உண்டு. யார் பழித்தாலும், யார் திட்டினாலும், யார் சபித்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் – சாபங்களையெல்லாம் வாழ்த்துக்களாக ஆக்கிக் கொள்கின்ற திறமையை எங்களை ஆளாக்கிய தலைவர்கள் எங்களுக்கு தந்திருக்கிறார்கள், அந்த உறுதியை மனதில்கொண்டு நாங்கள் பணியாற்றுவோம். அந்தப் பணிக்கு இங்கே குழுமியிருக்கின்ற பல்லாயிரக்கணக்கிலே குழுமியிருக்கின்ற திராவிடப் பெருங்குடி மக்கள், தமிழ்ப் பெருங்குடி மக்கள், உழவர் பெருங்குடி மக்கள், தொழிலாளத் தோழர்கள், பாட்டாளி மக்கள் அத்தனை பேரும் எனக்கு துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னைப் பாராட்டிப் பேசியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, உங்கள் பாராட்டுக்கு ஏற்றவாறு என்னை நான் தயாரித்துக் கொள்ள மேலும் முயற்சி செய்வேன், அதற்கான ஆயுளை எனக்கு இயற்கை அளிக்க வேண்டுமென்கின்ற விழைவுடன் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
திருநெல்வேலியில், 17.6.2007 அன்று
நடைபெற்ற 4 ஆவது கட்ட
இலவச நிலம் வழங்கும் விழாவில்
ஆற்றிய உரை




# ஊரகக் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
புதுதில்லியில், குடிநீர் – சுகாதாரம் குறித்த அனைத்து மாநில அமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை

மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ரகுவன்ஸ் பிரசாத் சிங் அவர்களே, குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறைக்கு தலைமை ஏற்றுள்ள மாநில அமைச்சர் பெருமக்களே, இந்திய அரசின் குடிநீர் வழங்கல் துறையின் அரசுச் செயலர் அவர்களே, இந்திய அரசு மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து இக்கருத்தரங்கிற்கு வருகை தந்து பங்கேற்றுள்ள அரசுச் செயலாளர்களே, அதிகாரிகளே,

சகோதர சகோதரிகளே,

மிகுந்த சிறப்பு வாய்ந்த பிரதிநிதிகள் கூடியுள்ள இந்தக் கருத்தரங்கில் பங்கேற்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. பெரும் முக்கியத்துவம் வாய்ந்த குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் ஆகிய பொருள் பற்றி எங்களுடைய கருத்துக்களை இந்தக் கருத்தரங்கில் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்துள்ள இந்திய அரசிற்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கருத்தரங்கத்தில் “நாட்டிலுள்ள ஊரகப் பகுதிகளில் அனைவருக்கும் 2012 ஆம் ஆண்டிற்குள் நீடித்த குடிநீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் சுகாதார வசதியை அளித்தல்” என்பதை மையப் பொருளாக தேர்வு செய்தமைக்கு மத்திய அரசிற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், திருமதி. சோனியா காந்தி அவர்களுக்கு பூங்கொத்து வழங்கினார்.

தமிழ்ப்பெரும் புலவர் திருவள்ளுவர் அவர்கள்

"நீர் இன்றி ஆமையாது உலகு" என்று கூறியுள்ளார்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

என்பது சுகாதாரமான வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் தமிழ்ப் பழமொழியாகும்.

ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் குறித்து திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. குடிநீர் வழங்கலுக்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திட இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் 1971ஆம் ஆண்டே தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் என்ற சட்டபூர்வமான அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகளில் ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசு முதலீடு செய்துள்ள நிதியின் அளவினை வைத்தே இதற்கு மாநில அரசு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை உணரலாம். ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக மொத்தம் ரூபாய் 4,583 கோடி இக்காலக்கட்டத்தில் முதலீடு செய்யப்பட்டது.

## சமூகநீதியை அடிப்படையாக் கொண்ட திட்டங்கள்

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் அரசாக செயல்படும் மத்திய அரசு பொதுமக்களின் நலனில் மிகுந்த கவனம் கொண்டுள்ளது. இதற்கேற்ப ஊரகப் பகுதிகளில் வாழும் அனைவருக்கும் சுகாதார வசதிகளையும், குடிநீர் விநியோகத்தையும் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்ட சிறந்த திட்டமான "பாரத் நிர்மாண்"என்ற திட்டத்தை தொடங்கி உள்ளது.

அனைவருக்கும் குடிநீர் கிடைத்திடச் செய்ய வேண்டும் என்பது பாரத் நிர்மாண் திட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ளதால், திட்டங்களின் நீடித்த தன்மை குறித்து நிலவுகின்ற பிரச்சினைகளைப் பற்றி நாம் தாமதமின்றி உடனடியாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் அனைத்துத் தரப்பினரின் நலன்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற தத்துவமானது தமிழக வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

அறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழக அரசின் அனைத்துத் திட்டங்களையும், சமூகநீதி என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கி உள்ளார்.

குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் என்பது அனைவரும் உணர்ந்த ஒன்றே ஆகும். புகழ்வாய்ந்த

## குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்

கடந்த மே மாதம் 2006ல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஆட்சி அமைந்த பிறகு தமிழ்நாட்டில் 9 இலட்சத்து 34 ஆயிரம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களை உள்ளடக்கிய மொத்தம் 30 இலட்சம் நபர்கள் பயன் அடையும் வகையில் 7 ஆயிரத்து 742 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மட்டும், மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன், மேலும் 9 ஆயிரம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு இந்திய அரசு 191 கோடி ரூபாயும், தமிழ்நாடு அரசு 411 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளது. ஊரகப்

பகுதிகளுக்கு போதுமான அளவு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திட பெருமளவிலான முதலீடு தேவைப்படுகின்ற அதே நேரத்தில் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களின் நீடித்த தன்மையையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.ரகுவன்ஸ் பிரசாத் சிங் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்தார்.

குடிநீர் வழங்கல் திட்டங்களைப் பொறுத்தவரை நீராதாரம் மற்றும் விநியோக அமைப்புகள் ஆகிய இரண்டு அம்சங்களின் நீடித்த தன்மை என்பது மிக முக்கியமானதாகும். இத்தகைய நிலைத்த தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 1977 ஆம் ஆண்டு முதல் நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க என நீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்கும் ஒரு தனித் திட்டத்தை தொடங்கியது.

இதுவரை இத்தகைய 3 ஆயிரத்து 186 நீர் சேகரிப்பு அமைப்புகள், மொத்தம் ரூபாய் 109 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது என்பதை இங்கே சிறப்பாக குறிப்பிட வேண்டும். கட்டட வரைபட அனுமதி பெறுவதற்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை கட்டடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்பது சட்டப்பூர்வமான விதிமுறையாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக நகர்ப்புற பகுதிகளில் உள்ள 1 இலட்சத்து 72 ஆயிரம் அரசு கட்டடங்களிலும், 48 இலட்சத்து 11 ஆயிரம் தனியார் கட்டடங்களிலும் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள 66 இலட்சத்து 67 ஆயிரம் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குடிநீர் ஆதாரங்களின் தன்மை பாதிக்கப்பட்டுள்ள குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி 5 ஆயிரத்து 574 குடியிருப்புகளில் நீரினுடைய தரத்தில் குறைபாடு உள்ளதாகத் தெரியவந்தது. இவற்றில் இதுவரை 5 ஆயிரத்து 431 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முடிவடைந்து தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கும் நடப்பு ஆண்டிலேயே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

தரமான குடிநீர் கிடைக்காமல் மற்றும் போதுமான நீராதாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான மிகப் பெரிய கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான ஆயத்தப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார் என்பதை இந்நேரத்தில் தெரிவிப்பது மிகப் பொறுத்தமானது என கருதுகிறேன்.

## குடிநீரின் தரம் குறித்து ஆய்வு

இந்தத் திட்டத்தின் மூலம் 5 நகராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 3,163 ஊரக குடியிருப்புகளில் உள்ள 15 இலட்சத்து 64 ஆயிரம் நபர்களுக்கு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு மொத்தம் 616 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் ஊரகப் பகுதிகளில் சுத்தமான குடிநீர் வழங்குகின்ற நீராதாரமாக உள்ள ஊருணிகள் எனப்படுகின்ற குளங்களில் நீடித்த நீர் வளத்தினை உறுதி செய்யும் வகையில் ஒரு

ஒருங்கிணைந்த திட்டத்தை செயல்படுத்தக் கருதியுள்ளோம்.

குடிநீர் ஆதாரங்களின் நீடித்த திறன் மற்றும் வழங்கப்படும் குடிநீரின் தரம் ஆகியவற்றை கண்காணித்திட 1,286 பரிசோதனைக் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 28 மாவட்டங்கள் மற்றும் மாநில தலைமை இடத்திலுள்ள பரிசோதனைக் கூடங்களின் மூலம் குடிநீரின் தரம் அவ்வப்போது உரிய கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது.

இந்திய நாட்டிலுள்ள குடிநீர் ஆய்வகங்களிலேயே தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள ஆய்வகமே ISO சான்றிதழ் பெற்ற முதல் ஆய்வகம் ஆகும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல கள அளவில் குடிநீரின் தரத்தினை ஆய்வு செய்யக் கூடிய ஒரு கையடக்க ஆய்வு உபகரணத்தை குடிநீர் வாரியம் உருவாக்கியுள்ளது. இது உபயோகிப்பதற்கு எளிமையானது ஆகும். இதனை அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

முழு சுகாதார இயக்கத்தின் செயலாக்கத்தில் பொன்விழா சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஈடுபடுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்த உதவியுள்ளது.

தமிழ்நாட்டில் முழு சுகாதார இயக்கம் திட்டமானது 1999–2000ஆவது ஆண்டில் 4 மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. அப்போது ஊரக சுகாதாரத்தை பொறுத்தவரை 15 சதவீத பகுதிகளே இத்தகைய வசதியைப் பெற்றிருந்தன. தமிழக அரசு மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளின் விளைவாக தற்போது ஊரகப் பகுதிகளில் உள்ள 68 சதவீத தனி நபர் இல்லங்கள் கழிப்பறை வசதியைப் பெற்றுள்ளன.

2007ஆம் ஆண்டிற்குள் 100 சதவீத பள்ளிக் கூடங்கள் மற்றும் அங்கன்வாடிகளுக்கும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தி அளிக்கப்படும்.

நடப்பு ஆண்டில் மட்டும் 296 கிராம ஊராட்சிகள் மத்திய அரசு வழங்குகின்ற "நிர்மல் கிராம் புரஸ்கார்" என்ற தூய்மையான கிராம விருதினை மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றுள்ளன. இது ஊராட்சி அமைப்புகள் முழு சுகாதார இயக்கத்தின் செயலாக்கத்தில் கொண்டுள்ள கூடுதலான ஈடுபாட்டினை காட்டுகின்றது.

இறுதியாக மத்திய அரசின் சாதகமாக ஆய்விற்கு என கீழ்க்கண்ட பரிந்துரைகளை நான் சமர்ப்பிக்கிறேன்.

★ குடிநீர் ஆதாரங்களின் நீடித்த தன்மையை உறுதி செய்ய மத்திய அரசு 100 சதவீத நிதியுதவியுடன் கூடிய ஒரு புதிய திட்டத்தை தொடங்க வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியில் குறைந்தபட்சம் 30 சதவீதம் நீர் சேகரிப்புப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

★ பெரிய அளவிலான நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவான நிலப் பகுதிகளைக் கண்டறிவதற்கு தொலை உணர்வு மற்றும் நிலவியல் தகவல் முறை ஆகிய தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டியுள்ளது. தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசின் முழு நிதி உதவியை வழங்க வேண்டும் என கோருகிறேன்.

★ ஏற்கெனவே முழு அளவு குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்ட குடியிருப்புகளிலும் தவிர்க்க இயலாத பல்வேறு காரணங்களால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதால் விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழான ஒதுக்கீட்டை இத்தகைய குடியிருப்புகளுக்கும் நிதியுதவி அளித்திட ஏற்ற வகையில் அதிகரிக்க வேண்டும்.

மேலும் தனிநபர் இல்ல கழிப்பறைகளுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மானியமான ரூபாய் 1,200 என்பதை குறைந்தபட்சம் 5,000 ரூபாயாக மத்திய அரசு உயர்த்தி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் நிலையான தனிநபர் இல்ல கழிப்பறைகளை ஏற்படுத்த இயலும்.

நிறைவாக தமிழ்நாட்டின் சார்பாக இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு எமது மாநிலத்தின் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளித்தற்கு இந்திய அரசிற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய அரசின் உதவி மற்றும் ஆதரவுடன் பாரத் நிர்மாண் திட்டத்தின் அனைத்து இலக்குகளையும் உரிய காலக் கெடுவிற்குள் தமிழ்நாடு அரசு நிறைவேற்றும் என்ற உறுதியையும் அளிக்கிறேன்.

புதுதில்லியில் 4–7–2007 அன்று
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
மாண்புமிகு இந்தியப் பிரதமர்
**டாக்டர் மன்மோகன் சிங்** அவர்கள் தலைமையில்
நடைபெற்ற **குடிநீர் – சுகாதாரம் குறித்த அனைத்து மாநில அமைச்சர்கள் மாநாட்டில்** ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

# துப்புரவுப் பணியாளர்கள் பணி நியமன ஆணை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்



நகராட்சி நிருவாகத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நகராட்சிகளில் காலியாக உள்ள 192 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி நகராட்சி நிருவாகத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றம் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட அனுமதித்துள்ள 125 துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடத்திற்கான தகுதியுள்ள நபர்களைத் தேர்வு செய்யும் பணி 11.6.07 மற்றும் 12.6.07 அன்று ஆணையர், நகராட்சி நிருவாகம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் நேர்காணலுக்கு சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டு விதிமுறைப்படி தேர்வு பெற்ற 112 தகுதியான நபர்களுக்கு நேரடி பணி நியமன ஆணை 14.6.07 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் நேரடியாக வழங்கப்பட்டது.

கடந்த 1997ம் ஆண்டு திமுக ஆட்சியின்போது இப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்யப்பட்டது. அதன் பிறகு தற்போதுதான் இந்த பணியிடத் திற்கான நியமனம் மீண்டும் செய்யப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வேலைவாய்ப்பக பதிவு மூப்பு மற்றும் வகுப்புவாரி சுழற்சி முறையின் அடிப்படையில் தற்போது நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பணி நியமன ஆணை வழங்கும் இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை செயலர் திரு. க.தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இணை ஆணையர் திரு. ஹிதேஷ் குமார் மக்வானா, இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

□ □ □



# சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தில் வாரிசுதாரருக்கு 15 ஆண்டுகளுக்குப் பிறகு பணி நியமன ஆணைகள்

அரசுப்பணியில் பணி புரியும் போது, மரணமடைந்த ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுதல் வாரியத்தில், நிருவாகக் காரணங்களாலும், அரசின் நியமனத் தடை ஆணை நடைமுறையில் இருந்ததாலும் கடந்த 15 ஆண்டுகளாக இந்த நியமனம் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தற்பொழுது காத்திருப்போர் பட்டியலில் இருந்து முதல் கட்டமாக 1 முதல் 50 வரையில் உள்ள பட்டியல் பரிசீலிக்கப்பட்டு, அதில் 26 நபர்களுக்கு நியமனஆணை வழங்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஆணை 7.7.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 9 நபர்களுக்கு சென்னை குடிநீர் வாரிய களப்பணியாளராக பணி நியமன வழங்கப்பட்டது. இதில் பயனடைந்தோர் 7 பேர் மகளிரும், 2 பேர் ஆண்களும் ஆவர்.

தமிழகத்தில் உள்ள 561 பேரூராட்சிகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் பல்வேறு திட்டங்களின் கீழ் விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்த பேரூராட்சிகளில் மிக முக்கியமான திட்டங்களான சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Urban Infrastructure Development scheme for Small and Medium Towns) பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப் படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் மாநில அளவிலான அங்கீகாரக் குழுக் கூட்டம் (State Level Sanctioning Committee) மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு இந்த திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்(UIDSSMT) பேரூராட்சிகளில் பணிகள் எடுத்துக் கொள்ள விரிவான திட்ட அறிக்கைகளை தயார் செய்யப்பட்டு மத்திய, மாநில அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளன. இதில் 45 பேரூராட்சி களுக்கு ரூ.63.24 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 45 பேரூராட்சிகளில் சாலைகள், நடைபாதைகள், மழைநீர் வடிகால்கள், குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற அத்தியாவசியமான மற்றும் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள 45 பேரூராட்சிக ளிலிருந்து முதற் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட திருக்கழுக் குன்றம், முசிறி, கோம்பை, களக்காடு, சேரன்மகாதேவி ஆகிய ஐந்து பேரூராட்சித் தலைவர்களுக்கு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நிதி ஒப்பளிப்பு சான்றிதழ்களை 7.07.2007 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

* * *

# மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

## சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் - மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்திட ஆணை



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 7.7.2007அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல், பேரூராட்சிகள் குறித்து சட்டமன்றத்தில் அறிவித்த திட்டங்களை ஆய்வு செய்தார். ஆய்வுக் கூட்டத்தில் சென்னை மாநகராட்சி மூலம், வடசென்னையில் 3 நவீன குப்பை மாற்று நிலையங்கள் மற்றும் தென்சென்னையில் 2 குப்பைமாற்று நிலையங்கள் ரூ. 7.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணியினை குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

தங்கசாலை சந்திப்பு, பேசின்பால சாலை, காக்ரேன் பேசின் சாலை சந்திப்பு மற்றும் திருவான்மியூர் எல்.பி. சாலை, மத்திய கைலாஷ், ஐ.டி. காரிடார் சந்திப்பில் மேம்பாலப் பணிகள் உடனடியாகத் தொடங்கிட ஆணையிட்டார்.

பெரம்பூர் மேம்பாலப் பணிகள் உடனடியாக புதிய வடிவமைப்பின்படி பணிகள் உடனடியாகத் தொடங்கிடவும், வடக்கு உஸ்மான் சாலை – கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பு, டர்ன்புல்ஸ் சாலை – பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை சந்திப்பு ஆகியவற்றில் மேம்பாலப் பணிகளைத் துரிதப்படுத்தி, குறித்தக் காலத்திற் குள்ளாக முடித்திடவும் கேட்டுக் கொண்டார்.

சென்னை மாநகரத்தில், ஈ பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை துரிதப்படுத்த வேண்டும் என்றும், குப்பைகளையும், கட்டட இடிபாடுகளையும் உடனுக்குடன் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

அண்ணாசாலையில் அதிக வெளிச்சத்துடன் கூடிய புதிய மெட்டலைடு தெருவிளக்குகள் அமைக்கும் பணியினை துரிதப்படுத்திட அறிவுறுத்தினார்.

ஒவ்வொரு மண்டலத்திலும் அனைத்துப் பணியாளர்களையும் ஒருங்கிணைத்து, சாலைப் பகுதிகளை தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், பருவமழை தொடங்குவதற்கு முன்பாக மழைநீர் வடிகால் பணிகளை மேம்படுத்தி, மழைநீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ள பல்வேறு துறைகளை இணைத்து செயல்படவும் அறிவுறுத்தினார். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீஞ்சூர் அருகிலுள்ள காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள

100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையப் பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் எனவும் நெம்மேலியில் 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் மற்றொரு நிலையம் அமைப்பதற்கான நிதியை இந்திய அரசிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் ஆணையிட்டார்.

மேலும் சென்னை மாநகர குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், தகவல் தொழில்நுட்பச் சாலையை (ஐ.டி. காரிடார்) ஒட்டியுள்ள நுகர்வோருக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதிகள், பெருங்குடியில் மற்றுமொரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் புறநகர் உள்ளாட்சி அமைப்புகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆகியவை தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டார்.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பேரூராட்சிகளில் விரைவில் செயல்படுத்தப்படக்கூடிய வகையில் பணிகளை துரிதப்படுத்திட அறிவுறுத்தினார்.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகளை கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். ✶

# டாஸ்மாக் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி, உள்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், டாஸ்மாக் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர், "டாஸ்மாக்" நிறுவன பணியாளர் சங்கங்களுடன் அவர்களுடைய கோரிக்கைகள் குறித்து கலந்தாலோசனை நடத்தினார்கள். கலந்தாலோசனைக்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம், "டாஸ்மாக்" பணியாளர்களுக்கான சலுகைகள் குறித்து பின்வரும் பரிந்துரைகளை வழங்கியுள்ளார்கள்.

"டாஸ்மாக்" நிறுவனத்தில் பணிபுரியும் மேற்பார்வை யாளர்கள், விற்பனையாளர்கள், மதுக்கூட உதவியாளர்கள் ஆகியோருக்கு தற்போது மாதம் ஒன்றுக்கு ஊதியமாக முறையே ரூபாய்.3000, 2,000, 1,500 என வழங்கப்பட்டு வருகிறது. இதனை மேற்பார்வையாளருக்கு 500 ரூபாயும், விற்பனையாளருக்கு 400 ரூபாயும், மதுக்கூட உதவியாளருக்கு 300 ரூபாயும் கூடுதலாக அதிகரித்து வழங்கலாம். இதன் மூலம் 30 ஆயிரத்து 730 பணியாளர்கள் ஆண்டொன்றுக்கு 17 கோடியே 27 இலட்சம் ரூபாய் அளவுக்குப் பயனடைவார்கள்.

டாஸ்மாக் கடைகளின் திறந்திருக்கும் நேரத்தை காலை 8 மணி முதல் நள்ளிரவு 12 மணி முடிய என்று இருந்து வருவதைக் குறைத்து, காலை 10 மணி முதல் இரவு11 மணி முடிய என்று மாற்றியமைக்கலாம்.

பணியிலிருக்கும்போது மரணமடைந்திடும் பணியாளரின் குடும்பத்திற்கு குடும்ப நலத் திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டு வரும் தொகையான ஒரு இலட்சம் ரூபாய் என்பது உயர்த்தப்பட்டு, இனி வருங்காலங்களில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயாக வழங்கலாம்.

தனியார்களால் எடுத்து நடத்தப்படாத மதுக்கூடங்களில், திண்பண்டம் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரிப்பதற்கு "டாஸ்மாக்" மேற்பார்வையாளர்கள் தற்போது செலுத்தி வரும் மாதக் கட்டணம், அந்தக் கடையின் விற்பனையில் 2.5 சதவிகிதத்திலிருந்து 1.5 சதவிகிதமாகக் குறைக்கலாம். இதனால் 1,600 மதுக்கூடங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்கள் ஒவ்வொருவரும், மாதம் ஒன்றுக்குத் தோராயமாக ஆயிரம் ரூபாய் அளவுக்குப் பயனடைவார்கள்.

தற்போது காப்புத் தொகையாக மேற்பார்வையாளரிடமிருந்து 50 ஆயிரம் ரூபாயும்; விற்பனையாளரிடமிருந்து 15 ஆயிரம் ரூபாயும்; மதுக்கூட உதவியாளரிடமிருந்து 10 ஆயிரம் ரூபாயும் பெறப்பட்டுள்ளது. இந்தக் காப்புத் தொகைக்கு வட்டியளிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று, இனி வருங்காலங்களில் ஆண்டொன்றுக்கு 3.5 சதவிகிதம் வட்டி வழங்கலாம். இதன் மூலம் வருடம் ஒன்றுக்கு மேற்பார்வையாளர்கள் 1,750 ரூபாயும், விற்பனையார்கள் 525 ரூபாயும், மதுக்கூட உதவியாளர்கள் 350 ரூபாயும் பெறுவார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் "டாஸ்மாக்" பணியாளர் களுக்குச் சலுகைகள் வழங்கும் இந்தப் பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டு அறிவித்துள்ளார். இவை உடனடியாக நடைமுறைக்கு வரும். ●

சென்னை தலைமைச் செயலகத்தில்

# செய்தியாளர்கள் பயன்பாட்டிற்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி

**மா**ண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் 7.5.2007 அன்று சட்டமன்றத்தில், செய்தித் துறை மானியக் கோரிக்கையின்போது, தலைமைச் செயலகத்திலுள்ள செய்தியாளர்கள் அறையில் இருக்கும் இரண்டு தொலைபேசி



களுக்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி (Broadband wireless internet facilities) செய்து தரப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி 21–6–2007 அன்று மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்கள், தலைமைச் செயலகத்தில் செய்தியாளர் அறையில் அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதியினைத் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து.இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் உடன் இருந்தார்.

செய்தியாளர்கள் அறையில் உள்ள 25671513 மற்றும் 25671514 ஆகிய தொலைபேசிகளுக்கு இந்திய அரசு நிறுவனமான பி.எஸ்.என்.எல் மூலம் அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதற்கு மாதம் ஒன்றிற்கு ஒரு தொலைபேசிக்கு ரூ.5,000 வீதம் இரண்டு தொலைபேசிக்கு ரூ.10,000 செலுத்தப்படும். இவ்வசதி மூலம் ஒரு தொலை பேசியால் ஒரு மாதத்திற்கு 30 GB வரை வலைதள வசதியும், 54 MBPS விரைவு திறனுடன் பெறமுடியும். இரண்டு தொலைபேசிகளால் 60 GB வரை பெற முடியும். கம்பியில்லா வலைதள வசதி மூலம் ஒரே நேரத்தில் சுமார் 15/20 பத்திரிகையாளர்கள்/ புகைப்படக்காரர்கள் அவர்களுடைய மடிக் கணினி மூலம் செய்திகளை/புகைப் படங்களை நாளிதழ்களுக்கும், செய்தி நிறுவனங்களுக்கும் விரைவாக அனுப்ப முடியும். தற்பொழுது தலைமைச் செயலகத்திலிருந்து பத்திரிகை யாளர்கள் செய்திகளை தொலைபேசி வாயிலாக அளித்து வருகிறார்கள். புகைப்படங்கள் நேரிடையாக நிறுவனங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இவ்வசதியைப் பயன்படுத் துவதன் மூலம் செய்திகளும், புகைப்படங்களும் உரிய நேரத்திற்குள் விரைவாக நிறுவனங்களுக்குச் சென்றடைந்து பத்திரிகைகளில் வெளிவருவதற்கு வழி வகுக்கின்றது.

□ □ □

# செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசின் திட்டங்களை மக்களுக்கு நல்லமுறையில் எடுத்துச் செல்லவேண்டும்



திரு. **பரிதி இளம்வழுதி**
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்

**தி**ருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல், தேனி ஆகிய 9 மாவட்டங்களின் செய்தி மக்கள் தொடர்பு அதிகாரிகள் பணி ஆய்வுக் கூட்டம், திருநெல்வேலி ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள சாரல் அரங்கில், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 7.7.2007 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதிஇளம்வழுதி அவர்கள் பேசியதாவது :

“முதல்வர் தலைவர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு பல்வேறு நலவாழ்வு திட்டங்களை ஏழை மக்களுக்காக செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டங்களின் பயன்கள் சமுதாயத்தில் வாழ்கின்ற அடித்தள மக்களுக்கு விரைந்து கிடைக்க அரசு முனைப்புடன்செயல்பட்டு வருகிறது. குறிப்பாக 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம், இலவச கலர் டி.வி. திட்டம், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம், இலவச கியாஸ் அடுப்பு மற்றும் இணைப்பு திட்டம் போன்ற சிறப்பு திட்டங்கள் தகுதியான அனைத்து மக்களுக்கும் சென்று அடையும் வகையில் இதற்கான திட்டங்கள் குறித்த விவரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அதிகாரிகள் முழுமூச்சுடன் பணியாற்ற முன்வரவேண்டும்.




அரசுக்கும், மக்களுக்கும் மக்கள் தொடர்பு அதிகாரிகள் பாலமாக இருக்கவேண்டும். இதன் மூலம் அரசின் திட்டப் பயன்கள் முழுமையான வகையில் மக்களை சென்றடைய முடியும். பணிகளில் முழுமையாக ஈடுபட்டு அரசின் திட்டங்களை வெற்றியடையச் செய்யவேண்டும். மக்கள் தொடர்பு அதிகாரிகளின் பொறுப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதால், மக்கள் தொடர்பு பணியில் பிறதுறைகளுடன் இணைந்து செயல்பட்டு, அரசு திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்'' என்று கூறினார்.

செய்தி–மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு.ஆர்.அண்ணாதுரை, துணை இயக்குநர்கள் திரு.இளங்கோவன், திரு.மணிக்குமார், திரு.ஹரிக்குமார், திரு.துரை. தாமரைச்செல்வம், செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள், திரு.உல.ரவீந்திரன், திரு.ஹரிராம், திரு.சாரதி, திரு.கு.தானப்பா, திரு.சரவணன், திரு.சரவணன், திரு.சுப்பிரமணியன், திரு.நடராஜன், திரு.அன்பழகன் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# சாலைப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வெளிவட்டச் சாலை திட்டம்



சென்னை பெருநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டும், பெருநகர வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் பெருநகரின் வெளி ஓரத்தில் வெளிவட்டச் சாலை அமைக்க திட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் வளர்ச்சிப் பணிகளை குழுமத்தின் தலைவரும், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சருமான திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இச்சாலையானது வண்டலூரில் தேசிய நெடுஞ்சாலை எண். 45–ஐயும், நசரத்பேட்டையில் தேசிய நெடுஞ்சாலை எண்.4–ஐயும், நெமிலிச்சேரியில் தேசிய நெடுஞ்சாலை எண்.205–ஐயும், நல்லூரில் தேசிய நெடுஞ்சாலை எண்.5–ஐயும், மீஞ்சூர் திருவொற்றியூர் – பொன்னேரி – பொன்னேரி – பஞ்செட்டி சாலையையும் இணைக்கிறது. இச்சாலையின் நீளம் 62.3 கி.மீ. ஆகும். மேலும் இச்சாலையில் சாலை மற்றும் தொடர்வண்டிப் பாதை அமைப்பதற்கு முறையே 72 மீட்டர் அகலமும், 50 மீட்டர் அகலமும் பிற்கால அபிவிருத்திக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உத்தேசிக்கப்பட்ட தொகை ரூ.900 கோடியாகும்.

இதுகுறித்து செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் கூறியதாவது :

“இத்திட்டத்திற்கான நில எடுப்புப் பணிகள் இரண்டு கட்டமாக நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக தேசிய நெடுஞ்சாலை எண்.45 முதல் தேசிய நெடுஞ்சாலை எண்.205 வரை உள்ள சுமார் 29.5 கி.மீ. நீளத்திற்கு 29 கிராமங்கள் நிறைவு செய்யப்பட்டு மேற்கண்ட நிலங்கள் தற்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பொறுப்பில் உள்ளது. இரண்டாம் கட்டமாக தேசிய நெடுஞ்சாலை எண்.205 முதல் திருவொற்றியூர், பொன்னேரி, பஞ்செட்டி வரையுள்ள 32.8 கி.மீ. நீளத்திலுள்ள 28 கிராமங்களில் 18 கிராமங்களில் 10.72 கி.மீ. நீளத்திற்கு நில எடுப்புப் பணிகள் நிறைவு பெற்றுவிட்டது. மீதமுள்ள 10 கிராமங்களில் நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இதை விரைவுபடுத்துவதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி முடியும்போது சென்னைப் பெருநகரின் போக்குவரத்து நெரிசலை ஓரளவிற்கு தீர்க்கப்படுவதோடு, ஒரு சிறந்த உலகத்தரம் வாய்ந்த போக்குவரத்து சாலையாக இது அமையும் என்றும் தெரிவித்தார்.

மேலும், இதுகுறித்து அவர் பேசும்போது வெளிவட்டச் சாலை விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சாலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

* * *



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை தலைமைச் செயலகத்தில் ரிசர்வ் வங்கியின் கவர்னர் டாக்டர் ஒய்.வி.ரெட்டி அவர்கள் சந்தித்துப் பேசினார்.(11.7.2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள். திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன், மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திருமதி. ராதிகா செல்வி ஆகியோர் உள்ளனர். (15.7.2007)



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 105ஆவது பிறந்தநாளை முன்னிட்டு
15.7.2007 அன்று, சென்னையில் உள்ள
காமராஜர் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த காமராஜர்
திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.ஆற்காடு நா.வீராசாமி,
திரு.பரிதி இளம்வழுதி, டாக்டர் திருமதி.பூங்கோதை, திருமதி.பி.கீதாஜீவன், திரு.உ. மதிவாணன்
ஆகியோரும் மற்றும் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர்
திரு.து.இராசேந்திரன்,இ.ஆ.ப., மற்றும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்
முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,ஆகியோரும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.(15.7.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
தலைமைச் செயலகத்தில், சென்னை மெரீனா கடற்கரை அழகுபடுத்தும் பணிகளைத்
தொடங்குவது குறித்தும், அடையாற்றின் கரையோரத்தில் நவீனமயமான பூங்கா
அமைக்கும் திட்டம் குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டார்.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்களும், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப.,
மற்றும் அரசுத்துறை செயலாளர்கள் உடன் உள்ளனர். (9.6.2007)



தியாகிகள் தினத்தை முன்னிட்டு, சென்னை காந்தி மண்டப வளாகத்திலுள்ள
தியாகிகள் மண்டப முகப்பில் அமைந்துள்ள தியாகி சங்கரலிங்கனார் மற்றும்
தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் ஆகியோரது சிலைகளுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த
திருவுருப்படங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.ஆற்காடு நா.வீராசாமி,
திரு.பரிதி இளம்வழுதி, திரு.கே.இராமச்சந்திரன் ஆகியோரும், பனைத்தொழிலாளர் நல வாரியத் தலைவர்
திரு.குமரிஅனந்தன், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்
முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,ஆகியோரும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.(17.7.2007)



மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள்,
7.6.2007 அன்று, சென்னை புரசைவாக்கத்தில் நவீனமயமாக்கப்பட்ட
கோ-ஆப்டெக்ஸ் 'கற்பகம்' விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்து,
வைகாசி வசந்தம் என்ற கைத்தறி கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்கள்.
மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
திரு.என்.கே.கே.பி.ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளார்கள்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்கள் 10.7.2007 அன்று, தலைமை செயலகத்தில் சிறு தொழில் துறை தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், 2.5.2007ஆம் நாளன்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட சிறுதொழில் துறையின் புதிய திட்டங்கள் செயலாக்க நிலை குறித்து ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்ததாவது;

“நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறு தொழில்களின் முக்கிய பங்கினை செயல் படுத்துவதில் கலைஞர் தலைமையிலான அரசு சிறப்பான தொழில் கொள்கையை வகுத்து வருகிறது. இந்த தொழில் கொள்கை மாண்புமிகு முதல்வருக்கு அனுப்பி ஒப்புதல் பெற்றபின் செயல்படுத்தப்படும். கலைஞர் அரசு பதவியேற்ற இந்த 13 மாத காலத்தில் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலையின் மேம்பாட்டிற்காக ரூ.89 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 31.3.2008க்குள் தாய்கோ (TAICO) வங்கியின் கிளை அனைத்து மாவட்டங்களிலும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, தாய்கோ வங்கி வழங்கும் கடனில் 10 சதவீதம் நுண் தொழில்களுக்கு வழங்கப்படவும், வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டவர்களின் பட்டியல் இணைய தளத்தில் வெளியிடவும், அனைத்து வங்கிகளுக்கும் பொருந்தக்

# கலைஞர் அரசு பதவியேற்ற 13 மாதங்களில் ரூ.12 ஆயிரம் கோடி அந்நிய முதலீடு -25,033 நபர்களுக்கு ரூ.98 கோடி கடன் தொகை பட்டுவாடா

மட்டும் ரூ.12 ஆயிரம் கோடி அந்நிய முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது.

தொழிலில் பின் தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் சிறு தொழில்களுக்கான முதலீட்டு மானியத்தை செயல்படுத்த இந்த ஆண்டு ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டதோடு, தேவைக் கேற்ப கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். ரூ.5 கோடி வரை இயந்திர தளவாட முதலீட்டில் செயல்பட்டு வரும் சிறுதொழில் நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக பெறும் கடன்களுக்கு 3 சதவீத வட்டி மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.10 இலட்சத்திற்கு மிகாத அளவிற்கு வழங்கப்படும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வேண்டும். தரமான மின்சாதனங்கள் மட்டுமே விற்பனை செய்வதை உறுதி செய்ய, இப்பொருட்களின் விற்பனையை மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் கண்காணிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில், கடந்த 13 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 25,033 நபர்களுக்கு ரூ.98.16 கோடி கடன் தொகை பட்டுவாடா கூடிய பொதுக் கடன் விநியோகப் படிவம் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறுதொழில் துறையில் தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களுக்கு கருத்தரங்குகளும், கடன் மற்றும் சலுகை குறித்த விவரங்களும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். சிட்கோவில் உள்ள பல தொழிற்பேட்டைகளில், தொழில் தொடங்குவதாக தெரிவித்து, மனை ஒதுக்கீடு பெற்றவர்கள் நிலத்தின் விலை யேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதாகத் தெரிகிறது. ஏற்கெனவே மனை ஒதுக்கீடு பெற்று, தொழில் தொடங்காதவர்களின் மனைஒதுக்கீடு ரத்து செய்யப்படும். டான்சி நிறுவனம் மூலம் கல்வித் துறையில் ரூ.60 கோடி அளவிற்கும், வருவாய்த் துறையில் ரூ.3 கோடி அளவிற்கும் கொள்முதல் ஆணைகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்கள்.





# காமராஜரின் இளம்பருவம்

விருதுபட்டி–திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சிறு நகரமைப்பு. அதன் மையப் பகுதியில் அமைந்த தெப்பக்குளம், அந்த சிறு நகரைக் கீழ், மேல் பகுதிகளாகப் பிரித்தது. பவளக்கார வகையறா, நாட்டாண்மை வகையறா, வெள்ளைக் கண்ணு வகையறா, கீழக் கடைக்காரர் வகையறா, மேலக் கடைக்காரர் வகையறா, மேகவர்ண வகையறா முதலிய வகையறாக்களைக் கொண்ட நாடார் இன மக்களும், பிற இனமக்களும் விருதுபட்டியில் வாழ்ந்து வந்தனர். பெரும்பாலும் வியாபாரத்தில், குறிப்பாக மொத்த வியாபாரத்தில் தீவிரக் கவனம் செலுத்தி வாழ்ந்தனர்.

ஆட்சி நிருவாக வசதிக்காக, தென்னிந்தியாவின் தென் பகுதியை திருச்சி, மதுரை என்கிற இரு ஜில்லாக்களாக (மாவட்டங்களாக) வெள்ளையர் பிரித்தனர். இராமநாதபுரம் ராஜா முத்துராமலிங்க சேதுபதியின் செல்வாக்கால், இராமநாதபுரம் ஜில்லா உருவானது. அப்போது விருதுபட்டி, திருநெல்வேலியிலிருந்து பிரிக்கப்பட்டு, இராமநாதபுரத்துடன் இணைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பஞ்சாயத்துக் கிராமமாக இருந்து விருதுபட்டியுடன் அல்லம்பட்டி, கோட்டைப்பட்டி, முத்துராம்பட்டி ஆகிய ஊர்கள் இணைக்கப்பட்டு முனிசிபல் நகரசபையாக்கப்பட்டது. இன்று 'விருதுநகர்' என்ற பெயருடன் விருதுநகர் மாவட்டத்தின் தலைநகராமாக உள்ளது.



“அந்தக் காலத்தில் நான்காம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. காமராஜ் ஃபஸ்டு ஃபார்ம் (ஆறாம் வகுப்பு) மாணவன்; எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும். காமராஜ் வெள்ளைக்காரன் நடை, உடை பாவனையோடு ஆங்கிலம் பேசிக்கொண்டு பள்ளி செல்வதைக் கண்டு பாட்டி மகிழ்ந்தார். ஞானம்பிள்ளை பொடிக்கடையை அடுத்த திண்ணையில் வந்தே மாதரம் ஆட்கள் பேசுவதைக் கேட்டு, காமராஜ் மகிழ்ந்தான்.”

வியாபாரத் துறையிலும் கல்வித் துறையிலும் ஊர் வேகமாக முன்னேறியது. மகமை வளர்ச்சியால் பொதுச் சொத்துக்கள் பெருகின. ஆகவே, ஊர் பிரமுகர்கள் ‘விருதுபட்டி’ என்கிற பெயரை மாற்றம் செய்ய ஆர்வம் கொண்டு, பட்டணம் (சென்னை மாநகர்) சென்று, கவர்னரைச் சந்தித்துப் பேசி விருதுபட்டியை ‘விருதுநகர்’ என மாற்றினார்கள்.

கோயில் நிருவாகம், படிப்பு, ஊர்சொத்து பராமரிப்பு குறித்துப் பொதுவாக மகமைக் கூட்டம் நடைபெறும். விருதுபட்டி பஞ்சாயத்து போர்டு உறுப்பினரும் முத்துராம்பட்டியின் கிராம முன்சீபும் (மணியக்காரர்) பக்திமானும் சொல்வன்மை மிக்கவருமான சுலோசன நாடார் நாட்டாண்மைக்காரராக இருந்தார்.

விருதுநகரின் தெப்பக்குளத்திற்கு மேற்கே சென்றால் வரும் தெருவில்தான் (இன்றைய சுலோசன நாடார் தெரு) நாட்டாண்மைக்கார சுலோசன நாடார் வீடு, நாட்டாண்மை வகையறா சுலோசன நாடார் தங்கை பார்வதியை மேகவர்ணம் வகையறா சின்னப்ப நாடார் மணந்தார். பிள்ளைப்பேறு இல்லாத காரணத்தால், மேகவர்ணம் வகையறாவைச் சேர்ந்த குமாரசாமியைத் தம்பதியர் தத்து எடுத்துக் கொண்டார்.

**காமாட்சி – காமராஜ்**

தத்து மகன் குமாரசாமிக்குப் பார்வதியாம்மாள், தம் அண்ணன் மகள் சிவகாமியைத் திருமணம் செய்து வைத்தார். இவர்களுக்கு 1903ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் நாளன்று ஆண்மகவு பிறந்தது. பார்வதியம்மாள் தம் பேரனுக்கு, தங்கள் வழிபடு தெய்வமான அம்மன் நினைவாகக் ‘காமாட்சி’ எனப் பெயர் சூட்டினார். எல்லாரும் குழந்தையைக் ‘காமாட்சி’ என்றே கூப்பிட்டார்கள். தாயார் சிவகாமி மட்டும் ராஜா என்றே அழைத்தார். ஆகவே, தந்தை குமாரசாமி தம் மகனுக்கு குலதெய்வத்தின் பெயரையும் இணைத்துக் “காமாட்சிராஜா” என பெயர் சூட்டினார். காலப்போக்கில் காமாட்சிராஜா, ‘காமராஜ்’ என அழைக்கப்பட்டான். நான்கு ஆண்டுகளுக்குப்பின் தங்கை நாகம்மாள் பிறந்தாள்.

ஐந்து வயது முடிந்ததும் அந்தக் கால முறைப்படி, சரஸ்வதி பூஜைக்கு மறுநாள் விஜயதசமி அன்று, வேட்டி கட்டி, கோட்டு போட்டு, உறவும் சுற்றமும் சூழக் குடும்பத்தவர் திரண்டு சென்று, காமராஜை வேலாயுதம் வாத்தியார் நடத்தி வந்த (நொண்டி வாத்தியார்) திண்ணைப் பள்ளியில் சேர்ந்தனர். அங்கு அரிச்சுவடியும் ஏட்டுக் கணக்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டு, கல்விக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது. பின்னர் காசிக்கடைத் தெருவின் முருகையா நடத்தி வந்த “ஏனாதி நாயனார் வித்தியா சாலா”வில் சேர்ந்தனர். அங்குக் காமராஜ் தமிழ் மொழியை எழுதவும், படிக்கவும் கற்றான். அடுத்த ஆண்டு விருதுபட்டியில் இருந்த ஒரே உயர்நிலைப் பள்ளியான, ‘க்ஷத்திரிய வித்தியா சாலா’வில் சேர்த்தனர்.

'பிடி அரிசி பள்ளி' என்ற பெயரையுடையதும் 1885ஆம் ஆண்டு 'மகமை' மூலம் தொடங்கப்பட்டதுமான இப்பள்ளி முற்றிலும் வித்தியாசமானது எனலாம். தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே இப்பள்ளி ஜாதி மத வேறுபாடு இல்லாமல், அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வியை இன்றளவும் வழங்கி வருகிறது. 'சமுதாய மக்கள் ஒன்று சேர்ந்து செயல்பட்டால் சாதனைப் படைக்கலாம்' என்பதற்கு இப்பள்ளி சிறந்த எடுத்துக்காட்டு. இந்தப் பள்ளியில் படித்த காமராஜ்தான், தமிழ்நாட்டின் முதலமைச்சரானபோது, தமிழ்நாட்டில் பள்ளி இறுதி வகுப்புவரை இலவசக் கல்வி தரச் சட்டம் வகுத்து செயல்படுத்தியதை நினைவில் கொள்ள வேண்டும்.

**அன்புக்கு அடிபணிந்த யானை**

பிள்ளைப் பருவத்தில் காமராஜ் நிகழ்த்திய அருஞ்செயல்கள், இவன் "நெருக்கடிகளையும், சோதனைகளையும் சமாளித்துச் சாதனை படைக்கும் வலிமை கொண்டவன்" என்பதையே உணர்த்தின. ஒரு நாள் குளித்துவிட்டு வந்த கோயில் யானை, பாகனின் கட்டுக்கு அடங்காமல் மதம் கொண்டது போல் பிளிறிக் கொண்டு வீதியில் ஓடியது. இதைக் கண்ட காமராஜ், காரணத்தைப் புரிந்துக் கொண்டு விரைவாகக் கோயிலுக்கு ஓடி, சத்திய சங்கிலியைத் தேடி எடுத்துக் கொண்டு விரைவாக வந்து யானைமுன் வீசினான். உடனே யானை சாந்தமடைந்து, சங்கிலியைத் தூக்கிக் கொண்டு காமராஜைப் பின் தொடர்ந்தது. பாகன் மாரியப்பத் தேவருடன் காமராஜ் இணக்கமாக இருந்ததால், யானைக்கு வாழை முதலான பழங்களை அடிக்கடி கொடுப்பதுண்டு. இந்த உறவுதான், பாகனை மீறிச் செயல்பட்ட யானையை அடக்க உதவியது. மிருகமாக இருந்தாலும் அந்த யானை காமராஜின் அன்புக்கு அடிபணிந்து நடந்தது.

**வந்தே மாதரம்**

காமராஜின் பள்ளிப் படிப்பு ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்தது. திடீரென டைபாய்டு காய்ச்சல் வந்து, நாற்பது நாள் பள்ளிக்குப் போகமுடியாமல் போயிற்று. அதன்பின் காமராஜைப் பள்ளிக்குப் பாட்டி அழைத்துச் சென்று விட்டு வந்தார். அடிக்கடி திடீரென வயிற்று வலி தொல்லைதர, பள்ளிக்குச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டது. காலையில் பள்ளிக்குப் போகாமல் ஊர் சுற்றினாலும் மாலையில் பள்ளிக்குச் சென்று நல்ல பிள்ளையாக வீடு திரும்புவான். இரவு வேளையில் தனிப்பாடம் படிக்கச் சென்றதால் பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்றான். ஒரு நாள் தோழர்களுடன் ஊர் சுற்றி விட்டு வரும்போது, தபாலாபீசு சுவரில் 'வந்தே மாதரம்' ஆட்கள் சுவரொட்டி ஒட்ட, அதைத் தீக்குச்சி ஆட்கள் தடுக்க, ஒருவகை ஓடிப் பிடிக்கும் விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்படி ஒட்டப்பட்ட ஒரு சுவரொட்டியின் எழுத்துக்களை "வ...ந்...தே.... மா...த...ர...ம்...." என்று கூட்டி, முதல் முறையாகக் காமராஜ் படித்தான்.

சந்தனப் பொட்டிட்டுக் குங்குமம் அணிந்த, கண் பார்வை இழந்த, கருப்பு நிற மூதாட்டி பெரியநாயகி, விருதுபட்டி ஐந்து சந்திப்பில் 'காத்தவராயன் கதை' சொல்வதுண்டு. ஒரு சமயம் மக்கள் திரண்டிருந்த போது காமராஜ் முறுக்கு, சுருட்டு, வெற்றிலை, பாக்குப் பொட்டலம், புகையிலை, மஞ்சள் கிழங்கு ஆகியவற்றைச் சேர்த்துக் கட்டிய மாலையை மூதாட்டிக்குப் போட்டான். இதைச் சிலர் கண்டித்தபோது, "பெரியம்மாவுகு விருப்பமான வற்றை நான் மாலை கட்டிப் போட்டேன்! அது தப்புண்ணா அவுங்க சொல்லட்டும்" என்றான். கண் பார்வை இல்லாத அந்த அம்மையாருக்குக் காமராஜின் எதிர்காலம் தெரிந்திருக்கிறது!. அவர் 'என்னைப் போல கருப்பு.... நெற்றியில சந்தனக் காப்பு... எங்க காமராஜா... இந்த நாட்டை ஆள்வான் ராஜா...' என்று பாடிப் பாராட்டினார்.

**ஆங்கிலம் படித்த காமராஜ்**

அந்தக் காலத்தில் நான்காம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. காமராஜ் ஃபஸ்டு ஃபார்ம் (ஆறாம் வகுப்பு) மாணவன்; எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும். காமராஜ் வெள்ளைக்காரன் நடை உடை பாவனையோடு ஆங்கிலம் பேசிக்கொண்டு பள்ளி செல்வதைக் கண்டு பாட்டி மகிழ்ந்தார். ஞானம்பிள்ளை பொடிக்கடையை அடுத்த திண்ணையில் வந்தே மாதரம் ஆட்கள் பேசுவதைக் கேட்டு, காமராஜ் மகிழ்ந்தான். மணியாச்சியில் ஆஷ்துரை சுட்டுக்கொல்லப்பட்டது. சிதம்பரம் பிள்ளை சிறையில் செக்கிழுத்தது முதலான செய்திகள் அங்கே பேசப்பட்டன. சுதந்திரப் போராட்டத்தோடு தொடர்புடைய புதிய செய்திகளைக் கேட்டறிவதில் காமராஜ் ஆர்வம் காட்டினான். சுதேசமித்திரன் நாளிதழ் உரக்கப் படிக்கப்பட்டபோது, பள்ளிக்கு மட்டம் அடித்த காமராஜின் தலையும் அங்கே தெரியும்.

1915 டிசம்பரில் பம்பாயில் நடந்த காங்கிரஸ் மாநாடு, தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் முதல் சொற்பொழிவு, காங்கிரஸ் கமிட்டி மெம்பர் தேர்தலில் போட்டியிட்டுக் காந்தி தோற்றது. எதிர்த் தரப்பைச் சார்ந்தவராயினும் திலகர் தலையிட்டுக் காந்தியின் தேர்வுக்கு வழி வகுத்தது. கோகலேயின் மரணம், சுதேசி இயக்கம் சார்ந்த புரட்சிப் பணிகள் குறித்தெல்லாம் அவர் பேசினார். அன்று மாலை அம்மன் கோயில் பொட்டலில் நடந்த பொதுக்கூட்டத்தில் பம்பாய் அண்ணாச்சி ஆவேசமாக முழங்கினார். காமராஜ் உள்ளத்திலும் சுதந்திரப் போராட்ட உணர்வு முளைவிடத் தொடங்கியது. பொதுக் கூட்டச் செய்திகளைக் கேட்பதிலும் பத்திரிகைச் செய்திகளைப் படித்தறிவதிலும் ஆர்வம் உண்டாயிற்று. அவை அவனுக்குப் புதியதோர் உலகைக் காட்டின.

– "காமராஜ் ஒரு சகாப்தம்" என்ற நூலிலிருந்து

★

# நியாயவிலைக் கடைகளில் பருப்புகள் விலையைக் குறைத்து அரசு ஆணை

பொதுமக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்தும் நோக்குடன் 14.4.2007 முதல் குறைந்த விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா ஆகிய பொருட்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், பருப்பு வகைகள், பாமாயில் போன்றவைகளின் வெளிச்சந்தை விலை குறைந்துள்ளது. தற்பொழுது நிலவும், வெளிச்சந்தை விற்பனை விலைக்கும், நியாய விலைக் கடை விற்பனை விலைக்கும் சிறிதளவே வித்தியாசம் உள்ளது. எனவே, நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவைகளின் விலையை ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் தற்போதைய விற்பனை விலையான முறையே ரூ.34/– மற்றும் ரூ.40/–க்கு பதிலாக, துவரம் பருப்பு கிலோ ரூ.32/– ஆகவும், உளுத்தம் பருப்பு கிலோ ரூ.36/– ஆகவும் 21.6.2007 முதல் குறைத்து விற்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது.

✶

# பொறியியல் பயிலும் 142 மாணவ மாணவியர்க்கு நிதி உதவி

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதி**

பொறியியல் கல்லூரிகளில் பயிலுகின்ற ஏழை எளிய மாணவர்கள் தங்களுடைய படிப்பைத் தொடர முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கக்கோரி மனு கொடுத்தனர். ஆண்டு வருமானம் ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் குறைவாக உள்ள குடும்பங்களில் இருந்து தொழில் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் மாணவ மாணவியர்க்கு, அவர்களுடைய படிப்பைத் தொடரவும், அவர்கள் தங்களுடைய கல்வியில் கவனம் செலுத்தவும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவியாக வழங்கிட அனுமதி அளித்துள்ளார்.

2006–2007ஆம் ஆண்டில் ஒற்றைச் சாளர முறை மூலம் பொறியில் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயின்று கொண்டிருக்கும் 142 மாணவ, மாணவியர்க்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 35 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப் படுகிறது. உதவித் தொகையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மாணவ, மாணவியர்க்கு வழங்குவார்கள்.

✶

# ஒப்பந்தப்புள்ளி முறை குறித்து அரசு அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி முறை குறித்து அரசு 14.7.2007 அன்று அறிவிக்கை வெளியிட்டது, அதில்,

"அரசு மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்கள், நற்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றிற்கான கொள்முதல், வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன், 1998 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை தி.மு.க. அரசு இயற்றியது. இதனை மேலும் செம்மைப்படுத்தி, ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை யார் வேண்டுமானாலும் இணையதளம் மூலமாக பெறுவதற்கு வகைசெய்யும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையை (e-tendering) கழக அரசு இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளதை அனைவரும் அறிவர். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இந்தப் புதிய நடைமுறையின்படி, தமிழ்நாடு அரசு மற்றும் பல்வேறு அரசு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும், www.tenders.tn.gov.in என்ற இணையதள முகவரியில், 1.7.2007 முதல் இலவசமாகக் கிடைத்திட ஆணையிடப்பட்டு, அவ்வாறே ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் கிடைத்து வருகின்றன. இவற்றை ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் எவ்விதத் தடையுமின்றி மேற்கண்ட இணையதள முகவரியில் இலவசமாகப் பெற்று, ஒப்பந்தப்புள்ளிகளை அளிக்கலாம். ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களைப் பெறுவதிலோ அல்லது அவற்றைப் பூர்த்தி செய்து அளிப்பதிலோ ஏதேனும் தடைகள் மற்றும் இடையூறுகள் இருப்பின், அவற்றைக் களைவதற்கும், முறையாக நடவடிக்கை மேற்கொள்வதற்கும்,

**முதலமைச்சரின் செயலாளர் (கண்காணிப்பு),**<br>
**முதலமைச்சர் அலுவலகம்,**<br>
**தலைமைச் செயலகம்,**<br>
**சென்னை–600 009**

என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்," என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 2.6.2007 அன்று அமைச்சரவையின் பதினெட்டாவது கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :

1) தமிழக அரசு ஊழியர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கை இனங்களில் ஒய்வு பெறும் நாளன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்வது தற்போது நடைமுறையில் உள்ளது. அரசு ஊழியர்கள் ஒய்வு பெறும் நாளன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படும் முறையை ரத்து செய்வதென்று அமைச்சரவை முடிவு செய்தது.

2) கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2003ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் காரணமாக சமாதி, பிருந்தாவனம் ஆகியவை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு ஏதுவாக அமைந்து அதனால் விளைந்த குழப்ப நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக 2003ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையைக் கடைப்பிடிப்பதற்கேற்ப சட்டத் திருத்தம் கொண்டு வருவதென்று அமைச்சரவை தீர்மானித்தது.



## அரசு ஊழியர்கள் ஒய்வுபெறும் நாளில் தற்காலிகப் பணி நீக்க முறை ரத்து

## அனைத்து தொடக்க, நடுநிலைப் பள்ளிகளிலும் செயல்வழிக் கற்றல் முறை விரிவாக்கம்

**ஆ**று முதல் பதினான்கு வயது உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளிக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு அரசு செயல்பட்டு வருகின்றது. இவ்வரசு பதவி ஏற்றவுடன் தொடக்கப் பள்ளி மாணவர்களின் அடைவுத் திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து வகுப்பறை சூழல் குழந்தைகளை மையமாக வைத்து செயல்பட (Child centred) வேண்டும் என்கிற அடிப்படையில் முன் மாதிரியாக நடப்பு ஆண்டில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பத்து பள்ளிகள் வீதம் தெரிவு செய்து அப்பள்ளிகளில் செயல்வழிக் கற்றல் முறையினை செயல்படுத்தி வருகிறது. முதன்முதலாக இத்திட்டம் சென்னையிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கடந்த மூன்று ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டது. இப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் கற்கும் திறனில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. ஆசியர்களிடமும் செயல்பாட்டு முறைக் கல்விக்கு மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே, இந்தக் கல்வி ஆண்டில் இத்திட்டம் தமிழகத்தில் உள்ள அனைத்து தொடக்க /நடுநிலைப் பள்ளிகளுக்கும் 1 முதல் 4 வகுப்புகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக அடுத்த ஆண்டு இறுதிக்குள், தமிழகத்தில் பயிலும் அனைத்து தொடக்கப் பள்ளி மாணவர்களும் தமிழை தடையின்றி வாசித்து எழுதுவதற்கும் அடிப்படை கணக்குகளைப் பிழையின்றி செய்து முடிப்பதற்கும் ஏற்ற திறனைப் பெறுவார்கள் என்பது திண்ணமாகும்.

செயல்வழிக் கற்றல் முறையில் மாணவர்கள் விடுப்பு எடுத்தாலும் மாணவர்கள் விட்ட இடத்தில் இருந்து தொடர்வதற்கு ஏற்ற வகையில் அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் திறமைக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு தேவைப்படும் நாட்களை எடுத்துக் கொண்டு கற்கின்ற வாய்ப்பு இம்முறையில் உள்ளது.

# ஈரோடு மாவட்டத்தில் வேளாண்சார் தொழில் வளர்ச்சி

**– என். பாலையா,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*ஈரோடு மாவட்டம்.*

**வே**ளாண் தொழில் மேம்பாட்டிற்கு அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் நலனுக்காக தமிழ்நாடு விவசாய தொழிலாளர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு ஏழை விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு அரசு பல்வேறு உதவிகளை அளித்து வருகிறது.

இதில் ஒரு அங்கமாக விளங்கும் வேளாண் சார் தொழிலுக்கும் அரசு முன்னுரிமை அளித்து கிராமப்புற பகுதிகளில் தொழில் வளர்ச்சியடைய வழிவகையினை உருவாக்கி உள்ளது. கிராமப்பகுதிகளில் வேளாண்சார் தொழிலை ஊக்கப்படுத்துவதன் மூலம் விவசாயிகள் சிறுதொழில்களில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்ட முடியும். மேலும் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், வேளாண் விளை பொருட்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக தயாரித்து சந்தைப்படுத்தவும் முடியும் என்பது அரசின் சீரிய நோக்க மாகும்.

கவுந்தப்பாடி அருகே மாரப்பம் பாளையம் என்ற கிராமத்தில் அரசு நிதி உதவி மூலம் தேங்காய்தொட்டி பவுடர் தயாரிக்கும் ஸ்ரீபண்ணாரி அம்மன் என்னும் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இங்கு தயாரிக்கப்படும் தேங்காய்தொட்டி பவுடர் ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்திச் சுருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் முக்கிய மூலப் பொருள்களில் ஒன்றாகும்.

இந்த நிறுவனம் தேங்காய் வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் கொட்டாங்குச்சி எனப்படும் தேங்காய் தொட்டிகளை கொள்முதல் செய்கிறது. இத்தொழிற்சாலையில் இவைகளை பவுடராக்கி ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்தி சுருள் செய்வதற்காக வடமாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்திச்சுருள் உற்பத்தி செய்யும் இந்நிறுவனங்களில் இந்த பவுடருடன் ஒன்றிரண்டு மூலப்பொருட்கள் சேர்க்கப் படுகின்றன.



தேங்காய் தொட்டி பவுடர் தயாரிக்கும் இத்தொழிற்சாலையினை உருவாக்கிட அரசு மூலம் ரூ.25 இலட்சம் வங்கி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட தொழில் மையத்தின் மூலம் அரசு மானியமாக ரூ.4 இலட்சமும், அரசு மின் மானியமாக ரூ.12 இலட்சமும் வழங்கப்பட்டு உள்ளது.

இத்தொழிற்சாலையின் பங்குதாரர்களாகிய திரு.கே.பி.நந்தகுமார், திரு.என்.எஸ்.சிவராஜ், திரு.ஜி.ரகுராமன் ஆகியோரை நேரில் சந்தித்து இதன் இயக்கம் மற்றும் வளர்ச்சி குறித்து கேட்டபோது அவர்கள் தெரிவித்ததாவது :

*“வேளாண்சார் தொழிலின் மேம்பாட்டிற்கு அரசு நிதியுதவி செய்கிறதென்பதை ஈரோடு மாவட்ட தொழில் மையத்தின் வாயிலாக அறிந்தோம். தேங்காய் தொட்டி பவுடர், ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்தி சுருள் செய்யப் பயன்படுத்தப் படுகிறது என்பதை கேள்விப்பட்டு, இது வேளாண் சார் தொழிலின் கீழ் வருவதால் இத்தொழிலை ஆரம்பிக்க அரசின் நிதி உதவி கோரி விண்ணப்பித்தோம். அரசின் நிதி உதவி கிடைப்பெற்று இத்தொழிற்சாலையை நிறுவி இயக்கி வருகிறோம். இந்த பவுடர் ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்தி சுருள் செய்ய பயன்படும் மூலப் பொருட்களில் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் பூந்துறை, கவுந்தப்பாடி, கோபி, காங்கேயம் ஆகிய பகுதி விவசாயிகளிடமிருந்து தேங்காய் தொட்டிகள் தேவையான இயந்திரத்தின் மூலம் பவுடராக்கப்படுகிறது. நாளொன்றிற்கு 8 டன் தேங்காய் தொட்டி, இயந்திரம் மூலம் அரைக்கப்பட்டு 7.5 டன் பவுடர் கிடைக்கிறது. இந்த வகையில் நாளொன்றிற்கு 50 கிலோ*

*கொண்ட 150 மூட்டைகள். அதாவது 7,500 கிலோ பவுடர் தயாரிக்கப்படுகிறது. ஒரு மாதத்தில் 4,500 மூட்டைகள் அதாவது 2 இலட்சத்து 25 ஆயிரம் கிலோ பவுடர் தயாரிக்கப்படுகிறது.*

*இது இலாபகரமான தொழிலாக உள்ளது. மேலும் தொழிற்சாலைகளுக்கு நேரடியாக இடைத் தரகர்களின்றி இவைகள் விற்பனை செய்வதால் நல்ல இலாபமும் கிடைக்கிறது.*

*இதற்கு முன்னர் விவசாயத் தொழிலை செய்து வந்தோம். தண்ணீர் பற்றாகுறை, தொழிலாளர் பிரச்சினை போன்றவற்றால் விவசாயத் தொழிலில் ஈடுபட முடியவில்லை. இதனால் இந்த வேளாண் சார் தொழிலை ஆரம்பித்து நல்ல முறையில் செய்து வருகிறோம். இந்தத் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்பாக மாவட்ட தொழில் மையத்தின் மூலம் கிடைக்கும் அனைத்து சலுகைகளைப் பற்றி தெரிந்து கொண்டு விண்ணப்பித்தோம். அரசு இதற்காக ரூ.4 இலட்சம் மானியமாகவும், ரூ.12 இலட்சம் மின் மானியமாகவும் வழங்கியமை பேருதவியாக உள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்ற ஒருவழிக் கருத்துக் குழுக் கூட்டத்தில் ஆலோசித்தபடி, தொடர்புடைய அனைத்து துறைகளிடமிருந்து தேவையான அனைத்து உரிமங்களும் உடனடியாக கிடைக்கப்பெற்றன.*

*இத்தொழிற்சாலையில் பொருட்களை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் வாகனங்கள் மூலம் தேங்காய் தொட்டிகளை கொண்டு வருதல், பவுடரை சந்தைப்படுத்துதல், பவுடர் உற்பத்தி செய்தல் போன்றவற்றின் வாயிலாக நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 50 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இதுவரை இருந்து வந்த இந்த வேளாண்மை பொருளின் மீதான உற்பத்தி வரியினை 1.1.2007 முதல் அரசு முழு விலக்கு அளித்து தொழிலை மேலும் மேம்படுத்திட செய்தமைக்கு அரசிற்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்''* என்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் தென்னை நார்தொழில், கயிறு தயாரிக்கும் தொழில், தேங்காய் பவுடர் தயாரிக்கும் தொழில், பால் பதப்படுத்தும் தொழில், நவீன அரிசி ஆலை, சூரியகாந்தி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கால்நடை மற்றும் கோழி தீவனங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், ஏக்டிவேட்டட் கார்பன் தொழில் நிறுவனங்கள், தென்னை நார் கழிவு கட்டி தயாரிக்கும் தொழில் போன்ற 38 வேளாண் சார் தொழில் சம்பந்தப்பட்ட ஆலைகள் இயங்கி வருகின்றன. மேற்படி நிறுவனங்களுக்கு 2006–2007ல் முதலீட்டு மானியமாக ரூ.24.50 இலட்சமும், மின்மானியமாக ரூ.55 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் சார் தொழில் மற்றும் இதர தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், சென்னிமலை ரோடு, ஈரோடு என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

## மழலையர் ஆசிரியர் பயிற்சியளிக்கும் போலி நிறுவனங்கள் அரசு எச்சரிக்கை

அனைத்து வகை, ஆசிரியர் கல்விக்கென, அகில இந்திய அளவில், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) என்றவொரு அமைப்பு, பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இதன்படி, தமிழ்நாட்டில் எந்தவொரு, ஆசிரியர் பயிற்சி ஆனாலும், இதற்கென நியமிக்கப்பட்ட தென்மண்டல தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால், அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

இந்நிலையில் தமிழ்நாடு பிரி–பிரைமரி எஜுகேஷனல் டிரஸ்ட் (TNPET) மற்றும் தமிழ்நாடு மக்கள் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை (TNPEDT) என்ற அமைப்புகள் இரண்டு வருட மழலையர் பயிற்சி நடத்தி வருவதாக பத்திரிகை விளம்பரம் செய்து மாணவர் சேர்க்கை செய்து வருகிறது. மழலையர் ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் இரண்டாம் வகுப்பு வரை பள்ளிப் பணியில் அமர வாய்ப்புள்ளது என விளம்பரப்படுத்தி வருகின்றனர். இவ்வகை பயிற்சிக்கு தமிழக அரசோ, மத்திய அரசோ அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வகை நிறுவனங்களில் சேர்ந்து பயிலும் மாணவர்கள் அரசால் நடத்தப்படும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்நிறுவனத்தின் மூலம் பயிற்சி பெற்று நிறுவனத்தின் சான்றிதழ் பெறக்கூடிய மாணவர்கள் எவரும் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பணிபுரிய தகுதியற்றவர்கள் ஆவர். எனவே தவறான செய்தினை வெளியிட்டு பொதுமக்களை ஏமாற்றி, மாணவர்களை சேர்த்து பணம் வசூல் செய்து வருவது மோசடி நடவடிக்கையாகும். பொதுமக்கள் மற்றும் மாணவர்களை ஏமாற்றுபவர்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மாணவர்கள் எவரும் இவ்வகை போலியான விளம்பரத்தைக் கண்டு ஏமாறாமல், அங்கீகாரம் இல்லாத நிறுவனங்களில் சேர வேண்டாம் என அறிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் விழிப்புடன் செயல்பட்டு, அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில், அங்கீகாரம் பெற்ற பயிற்சி குறித்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தை தொடர்பு கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியில் சேருமாறு அறிவிக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அறிவித்துள்ளார். ■



# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்


**– மூ.நா.கிருட்டிணசாமி**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*கிருஷ்ணகிரி மாவட்டம்.*


**கி**ருஷ்ணகிரி மாவட்டத்தில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் 9.3.2005 முதல் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 2006–07ஆம் வருடத்திற்கு 71 சிறப்புப்பள்ளிகளுக்கு ரூ.1,83,11,400/– மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து பெறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 63 சிறப்புப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு, இச்சிறப்புப் பள்ளிகளில் மொத்தம் 2007 சிறார்கள் பயின்று வருகிறார்கள்.

**நோக்கம் :**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆபத்தான மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களை (8–14 வயது) மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் வகையில் சிறப்புப் பள்ளிகளில் சேர்த்து இரண்டு வருடங்களுக்குள் அவர்களின் வயதுக்கேற்ப தகுதி பெறச் செய்து பொதுப்பள்ளிகளில் சேர்த்து சிறார்களின் கல்வியைத் தொடரும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

**குழந்தை தொழிலாளர் ஆய்வு :**

கிருஷ்ணகிரி மாவட்டத்தை குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாவட்டமாக மாற்றும்பொருட்டு மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி குழந்தைத் தொழிலாளர் ஆய்வுக் குழு உருவாக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகள், தொழிலகங்கள், உணவகங்கள் மற்றும் பட்டறைகள் ஆகிய இடங்களில் 101 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுகளின் போது இதுவரை 93 சிறார்கள் மீட்கப்பட்டு சிறப்புப்பள்ளிகளிலும், பொதுப் பள்ளிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், சிறார்களை பணியில் அமர்த்திய நிறுவனங்களின் உரிமையாளர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து மொத்தம் ரூ.1,54,000 நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**கல்விப் பொருட்கள் :**

இச்சிறப்புப்பள்ளி சிறார்களுக்கு பாடநூல்கள், குறிப்பேடுகள், பேனா, பென்சில், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் காலணிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், யுனிசெப் மூலம் கதைப் புத்தகங்கள், கரும் பலகைகள், பென்சில்கள், உலக உருண்டைகள், வரைபடங்கள், புத்தகப்பைகள், குடிநீர் வடிகட்டும் பாத்திரம், சாப்பிடும் தட்டு, டம்ளர் ஆகியவை வழங்கப்படுகிறது.

**தொழிற்கல்விப் பயிற்சி :**



சிறப்புப் பள்ளியில் பயிலும் சிறார் களுக்கு கல்வி கற்பிப்பதுடன் பயிற்சி பெற்ற தொழிற்கல்வி பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இவற்றில் கூடை பின்னுதல், துணி தைத்தல், வண்ணப் பூச்சு, பொம்மை தயாரித்தல் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவை கற்றுத் தரப்படுகிறது. இப்பயிற்சிக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகிறது.

**மதிய உணவு :**

சிறப்புப்பள்ளி சிறார்களுக்கு மதிய உணவுடன் ரொட்டி, பேரீச்சம்பழம், பொறியல், வாரத்திற்கு மூன்று நாட்கள் சுண்டல் மற்றும் 2 முட்டைகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு நாள் ஒன்றிற்கு ஒரு சிறாருக்கு ரூ.5 வீதம் அனுமதிக்கப்படுகிறது.

**ஊக்கத்தொகை :**

சிறப்புப்பள்ளியில் பயிலும் சிறார் களுக்கு மாதம் ஒன்றிற்கு ஊக்கத் தொகையாக ரூ.100 அவர்களின் அஞ்சலக/வங்கி சேமிப்புக் கணக்குகள் வாயிலாக வழங்கப்படுகிறது. இத்தொகை சிறார்கள் பொதுப்பள்ளியில் சேர்க்கப்பட்ட பிறகே வங்கி/அஞ்சலகத்திலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும்.

**இலவச பேருந்து அனுமதி :**

சிறப்புப்பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு இலவச பேருந்து அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு 184 சிறார்களுக்கு இலவச அனுமதிச் சீட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

**பயிற்சிகள் :**

பயிற்றுனர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் பயிற்றுனர்களுக்கு யுனிசெப் மூலம் அறிவியல் குறித்த சோதனைகள், எளிய முறையில் கணக்கு கற்பித்தல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

**குழந்தைத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தினால் அபராதம்**

குழந்தைகளை பணியில் அமர்த்தக்கூடாது என அரசு சட்டம் பிறப்பித்துள்ளது. அதன்படி, தொழிற்சாலைகள், தொழிலகங்கள், பட்டறைகள், தாபாக்கள், உணவு விடுதிகள் ஆகிய இடங்களில் குழந்தைகளை பணியில் அமர்த்தினால் 3 மாதம் சிறைவாசம் அல்லது ரூ.20,000 அபராதம் விதிக்கப்படும்.

மேலும், மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அக்டோபர் 10, 2006 முதல் புதியதாக குழந்தைத் தொழிலாளர் குறித்து சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இதன்படி வீட்டுவேலை, சாலையோரத்தில் உள்ள தாபா உணவகங்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், தேநீர் கடைகள், சுற்றுலா உணவகங்கள், பொழுதுபோக்கு மையங்கள், நீரூற்று உணவகங்கள் மற்றும் பட்டறைகள் தொழிற்சாலைகள், தொழிலகங்கள் உட்பட எந்த இடத்திலும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தக்கூடாது என உத்தரவிட்டுள்ளது.

**குழந்தைகளின் இணையதளம் :**

மாவட்ட ஆட்சித்தலைவரின் முயற்சியால் குழந்தைகளுக்காகவே www.Back2school.in என்ற பெயரில் இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில் பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற மாணவர்களின் புகைப்படத்துடன் அவர்களின் குடும்ப சூழ்நிலை, பொருளாதார நிலை குறித்த விவரங்கள் இந்த இணையதளத்தில் பதியப்பட்டுள்ளது. மேலும், இவர்களின் வாழ்க்கை நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவர்களுக்கு தேவைப்படும் அரசு உதவிகள் செய்வதுடன், கல்வியைத் தொடர ஆவன செய்யப்படும்.

**மருத்துவப் பரிசோதனை :**

சிறப்புப்பள்ளி சிறார்களுக்கு மாதம் ஒரு முறை அரசு மருத்துவர்களால் பள்ளிகளில் மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது.

1. போகனப்பள்ளி சிறப்புப்பள்ளியில் பயிலும் கண்ணப்பன் என்னும் சிறுவனுக்கு மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின் பேரில் விரை வீக்க நோய்க்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.



2. U. குருபரப்பள்ளியில் சிறப்புப் பள்ளியில் பயிலும் ஆறுமுகம் என்ற சிறுவனுக்கு சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட இடது கால் அறுவை சிகிச்சைக்காக மாவட்ட ஆட்சியரின் விருப்ப நிதியிலிருந்து ரூ.2,000 வழங்கப்பட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

3. தளி ஒன்றியம், லஷ்மிபுரம் குழந்தைத் தொழிலாளர் சிறப்புப்பள்ளியில் பயின்று வரும் மாரி (வயது 9) என்ற சிறுவன் இரண்டு வருடங்களுக்கு முன்பு குப்பை பொறுக்கிக் கொண்டிருந்தபோது டெட்டனேட்டர் வெடித்து அவனுடைய கண்கள் பாதிக்கப்பட்டன. மாவட்ட ஆட்சியர் அவர்கள் மாணவனின் சிகிச்சைக்கு மாவட்ட ஆட்சியரின் விருப்ப நிதியிலிருந்து ரூ.2,000 வழங்கினார்.

**மகளிர் சுயஉதவி குழுக்கள் :**

இச்சிறப்புப்பள்ளிகளில் பயிலும் சிறார்களின் பெற்றோர்களுக்கு மகளிர் சுயஉதவிக் குழு ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கு தொழில் தொடங்க வங்கிகளின் மூலம் கடன் வாங்கித் தரப்படுகிறது.

இவ்வாண்டு கெலமங்கலம் சிறப்புப்பள்ளியின் சுயஉதவி குழுவிற்கு,

SGSY மூலம் 15
உறுப்பினர்களுக்கு – ரூ.2,50,000

தாட்கோ மூலம் 14
உறுப்பினர்களுக்கு – ரூ.25,000

SISRY மூலம் 10
உறுப்பினர்களுக்கு– ரூ.25,000

முழு சுகாதார திட்ட கடன் – ரூ.45,000

சிறுவனின் அம்மாவிற்கு
உடல் ஊனமுற்றோர் கடன் – ரூ.20,000

இலவச தையல் மிஷின் – 18 மிஷின்கள்

பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் ரூ.1,75,000 கடனுதவி வழங்கப்பட்டது.

**தங்கும் விடுதி :**

தளி ஒன்றியம் லஷ்மிபுரம் கிராமத்தில் பெங்களூரை சேர்ந்த பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனம் மூலம் 35 மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு விடுதி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளியில் அவர்களுக்கு கணினிப் பயிற்சியும் அளிக்கப் பட்டு வருகிறது.



# தாழங்குடா கடற்கரைப் பகுதியில் செயற்கை பவளப் பாறை நிறுவ தமிழக அரசு நடவடிக்கை

– எம்.ஆர். லிங்கம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர் மாவட்டம்.

இயற்கையாக அதிகமான மீன்கள் வளரும் சூழ்நிலையை பவளப் பாறைகள் கொண்டுள்ளன. இந்த இயற்கை பவளப்பாறைகள் தமிழக கடற்கரைப் பகுதிகளில் மண்டபம், இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் இருந்தாலும் மற்ற பகுதியில் இவ்வகைப் பாறைகள் இல்லாத சூழ்நிலை இருந்து வருகிறது. இதனால் மீன்களின் இயற்கையான வளர்ச்சியினை அதிகமாக்க கடலூர் மாவட்டத்தில் 53 கி.மீ. தூரம் கடற்கரை இருந்தபோதிலும் பவளப்பாறை இல்லை. இந்த சூழ்நிலையை செயற்கையாக உருவாக்கும் நோக்கத்துடன் மத்திய மீன்வளத் துறை, தமிழக மீன் வளத்துறையுடன் சேர்ந்து தஞ்சாவூர் செயற்கை பவளப் பாறையை ரூ.1.5 கோடியில் உருவாக்கி பெரிய கப்பல் மூலமாகக் கொண்டுவந்து முதல் கட்டமாக தமிழகத்தில் 11 கடல்பகுதிகளில் உறைவிடங் களை அமைத்துள்ளது. செயற்கை உறைவிடங்கள் அமைக்கப்பட்ட இடங்களில் தாவரம் மற்றும் இதர உயிரினங்கள் அதிக அளவு உற்பத்தியாகி, அது மீன்களுக்கு ஏற்ற உறைவிடங்களாக உருவாகும். இதனால், அரிய வகை மீன்கள் அழிவிலிருந்து பாதுகாக்கப்படும். இதனால் கடல் பகுதிகளில் மீன் உற்பத்தி அதிகமாகும். இவ்வகைப் பாறைகள் நாகப்பட்டினம் – தாரங்கம்பாடி, புதுக்கோட்டை – கோடிமுனை, கோபால்பட்டிணம், தஞ்சாவூர் – கொள்ளுக்காடு, ஏரிபுறந்துறை, வல்லவன்பட்டினம், இராமநாதபுரம் – திருபாலக்குடி, வில்லுண்ட தீர்த்தம், தூத்துக்குடி – வேம்பார், வெல்லபட்டி, கடலூர் – தாழங்குடா ஆகிய இடங்களில் இவ்வுறைவிடங்கள் அமைக்கப் படுகிறது.

மீன் உற்பத்தியினைப் பெருக்கும் நோக்குடனும், தமிழக மீனவ கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும், செயற்கைப் பவளப் பாறைகள் கடலூர் தாழங்குடா கடல் பகுதியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் நிறுவப்பட்டுள்ளது. சிமெண்ட் கான்கிரீட்டினால் ஆன இந்த செயற்கைப் பவளப் பாறைகள் கூம்பு, சதுர வடிவம் மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மூன்று வளையம் கொண்ட பல அமைப்புகளில் தயாரிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 400 கி.கி. எடையுள்ள இந்த பாறைகள் இயற்கையான பவளப் பாறைகளைப் போன்றே மேடு பள்ளமாக, கரடு முரடான வடிவங்களுடன் மீன்கள் சென்று தங்கும் வகையில் துளைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பாறைகள் 15 – 20 மீ ஆழத்தில் 200 மீ பரப்பளவிற்கு நிறுவப்பட்டுள்ளன.

இந்த செயற்கைப் பவளப் பாறைகள் தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு அமைப்பின் மூலம் தயாரிக்கப்பட்டு 28.4.2007 அன்று கடலூர் தாழங்குடா கடல் பகுதியில் நிறுவப்பட்டது. கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட இப்பாறைகள் பணியாளர்கள் உதவியுடன் கயிறு மூலம் கடல் படுகையில் வைக்கப்பட்டது. செயற்கைப் பவளப் பாறைகளை நிறுவுவதற்கு இதுவே சரியான காலம் என மீன்வளத் துறை தீர்மானித்துள்ளது. காரணம் ஏப்ரல் 15 முதல் மே 29 வரை மீன் உற்பத்திப் பெருக்கத்திற்காக மீன் பிடிக்கும் பணி தடை செய்யப்பட்டுள்ளது. இது மீன் உற்பத்தியினை மேலும் அதிகரிக்கும் என மீன்வளத்துறை தெரிவித்துள்ளது.

மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (Fisheries Development Mission) ஒரு பகுதியாக இப்பணி, கொச்சியில் உள்ள மத்திய கடல் மற்றும் மீன்வள ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து கூட்டுப் பணியாக இதனை மேற்கொள்கிறது. நீண்ட கடல்வள ஆராய்ச்சிக்குப் பின் கடல்வள ஆராய்ச்சி மையம் இந்த செயற்கைப் பவளப்பாறை அமைக்கும் இடங்களைத் தேர்வு செய்துள்ளது. இந்தப் பாறைகள் அமைத்தபின் வழக்கமான மீன்பிடி கப்பல்களின் போக்குவரத்திற்கு இப்பாறைகள் இடையூறு ஏற்படுத்தாவண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மீன்பிடி வளைகளையும் பயன்படுத்த முடியாது.

கடலின் இயற்கையான இயல்பில் இப்பாறைகள் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. வழக்கமாக கடற்பாறைகளில் படியும், ஆல்கா, நுண் படிவங்கள், சிற்றுயிரினங்கள் போன்றவை இந்த செயற்கைப் பவளப் பாறைகளுடன் சேர்ந்து தங்கள் வளர்ச்சியினை மேற்கொள்ளும். எனவே, இந்த செயற்கைப் பளவப் பாறைகள் வழக்கத்தைவிட செறிவான மீன்வளத்தைப் பெருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதன்மூலம் குறிப்பாக சிறு மீன்பிடி படகுகள், நாட்டுப் படகுகள், ஆழமற்ற கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிப்போருக்கு அதிகப்படியான மீன்வளத்தினை அளிக்கும். மேலும் இந்த செயற்கை பவளப் பாறைகள் கடற்கரைக்கு அருகே அமைந்திருப்பதால் டீசல் போட் மூலம் மீன் பிடிப்போர் அதிக ஆழமான கடற்பகுதிக்குச் செல்லாமல் வெகு அருகிலேயே மீன் பிடிப்பதன் மூலம் அவர்களின் எரிபொருள் செலவு வெகுவாகக் குறைகிறது.

கடலூர் மாவட்டத்தில் சராசரியாக ஆண்டிற்கு 28,000 டன் மீன் பிடிக்கப்படுகிறது. மேலும் மீன் ஏற்றுமதி மூலமாக கடலூர் மாவட்டத்தில் ஆண்டிற்கு ரூ.6 கோடி வருவாய் ஈட்டப்படுகிறது. இங்கு அரிய வகை மீன் இனங்களான மக்காரல், டூனா, கேட்டில் பிஷ், சீ பாஸ் மற்றும் பெர்ஷஸ் போன்ற மீன்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. இயற்கையாக மீன்கள் வளரும் சூழ்நிலையை கடலுக்கு அடியில் உருவாக்கி மீன் உற்பத்தியை பெருக்குவதே தமிழக மீன் வளத்துறையின் நோக்கமாகும். மீன் அதிக அளவு ஏற்றுமதியாகும் கடலூரில் இதுபோன்ற செயற்கை பவளப்பாறை அமைவதால் மேலும் உற்பத்தி பெருகி மீனவர்களின் பொருளாதாரமும் உயரும் என்பதில் ஐயமில்லை. ■

# சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் கொடைக்கானலில் அரசின் மேம்பாட்டுப் பணிகள்

**டி.எஸ்.சுப்பிரமணியம்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் மாவட்டம்.



**கோ**டையில் கடுமையை போக்கும் குடையாக விளங்கும் மலைகளின் இளவரசி கொடைக்கானலுக்கு செல்வதென்றால் மக்களுக்கு தனி மகிழ்ச்சிதான். இன்றைக்கும் இயற்கை அன்னையின் பசுமை மாறாமல் இருப்பதால் மலைகளின் இளவரசி என்ற பட்டப் பெயர் மிகவும் பொருத்தமானதாகும். கொடைக் கானல் மலையேறும்போதே வெள்ளித்துளிகளை நம்மீது சிதறச் செய்து பரவசப்படுத்தும் வெள்ளி நீர்வீழ்ச்சி முதலாவதாக நம்மை வரவேற்கின்றது. 185 மீட்டர் உயரத்தில் இருந்து முத்துப் போல் மூலிகைத் தண்ணீரை நம்மீது தெளித்து வரவேற்கின்றாள் மலைகளின் இளவரசி. கொடைக்கானலின் இயற்கை வனப்பை மேலும் மெருகூட்டும் வண்ணமாக சுமார் 140 ஆண்டுகளுக்கு முன் மதுரை ஆட்சியராக இருந்த சர்வெரே ஹென்றி லெவிஞ் என்பவர் 24 எக்டேர் பரப்பளவில் அழகான நட்சத்திர வடிவத்திலான ஏரியை உருவாக்கினார். ஏறத்தாழ 5 கி.மீ. சுற்றளவு கொண்ட இந்த ஏரியைச் சுற்றிவர

சைக்கிள்கள் மற்றும் குதிரைகள் பயன்படுத்தப் படுகின்றன. ஒருவர், இருவர் மற்றும் நான்கு பேர் சேர்ந்து ஓட்டும் விதவிதமான சைக்கிள்களில் குழந்தைகளுடன் ஏரியைச் சுற்றி வருவது எங்கும் கிடைக்காத பரவச அனுபவம் ஆகும். குதிரை மீது அமர்ந்து சவாரி செய்து இயற்கை அழகை ரசிப்பவர்களும் உண்டு. அடுத்தது பசுமை பள்ளத்தாக்கு. மலைப்பகுதியின் விளிம்பிற்கே சென்று ரசிப்பது இவ்விடத்தில்தான். மலைகளுக்கு அடியில் பெரும்பள்ளம், அப்பள்ளத்தில் பசுமை, பசுமை எங்கும் பசுமை என பல மலைச்சிகரங்கள் நம்மை மெய்மறக்கச் செய்துவிடும்.



**பிரையண்ட் பூங்கா**

103 ஆண்டுகளுக்கு முன் வனத்துறை அதிகாரியாக இருந்த பிரையண்ட் 20 ஏக்கர் பரப்பளவில் பச்சைக் கம்பளத்தில் வண்ண வண்ண மலர்களைக் கொண்டு அழகிய வேலைப்பாடு அமைத்தது போன்று பிரம்மாண்ட பூங்காவை வடிவமைத்துள்ளார். இப்பூங்காவில் 500 வருடத்திற்கும் பழமையான மரம் மிக நெடிது வளர்ந்து உயரமாக நிற்கும் காட்சி காண்போரை திகைப்பில் ஆழ்த்துகிறது. இந்தியாவில் வேறெங்கும் கிடைக்காத 80 அரியவகை மலர்ச் செடிகள் கண்ணாடி மாளிகையில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு ஆண்டி ரைனம், கொரியாசீஷ், டெல்பினியம், காஸ்மரஸ், டேலியா, அஸ்டோமெரியா, பென்டிசிமென், பாப்பி, டெல்ஸ், மேரிகோல்டு போன்ற 750–க்கும் மேற்பட்ட வகைவகையான மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. வருடந்தோறும் தமிழக அரசு சார்பில் கோடைவிழாவும் மலர்க் கண்காட்சியும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மட்டுமின்றி வெளிமாநிலங்களி லிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் கொடைக் கானலுக்கு வருகை தருகின்றனர்.

**புதிய பேருந்து நிலையம்**

இந்த ஆண்டு 20.5.2007 நடைபெற்ற மலர் கண்காட்சி மற்றும் கோடைவிழாவை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் பேசும்போது, “கொடைக்கானலுக்கு ஏராளமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவதையொட்டி இப்பகுதியை மேம்படுத்த சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கொடைக் கானல் கேரளாவை இணைக்கும் கோசன் சாலையை சீரமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோல கொடைக்கானல் கும்பக்கரை வழியாகச் செல்லும் பாதை சீரமைக்கப்படும். எப்போதும் மக்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு அவர்கள் வளர்ச்சி பெறவேண்டும் என்ற எண்ணத்தில் திட்டங்களை தீட்டி அவற்றை செயல்படுத்தும் மொத்த உருவம் தான். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் “மலைவாழ் விவசாயிகள் நல்ல முறையில் காய்கறிகளை விற்பனை செய்ய வேண்டும். அதற்கு தொலைத்தொடர்பு வசதிகள் முக்கியம் என்று கருதி மேல் மலைப்பகுதி முழுவதும் தொலைபேசி இணைப்பு கிடைக்க காரணமாக இருந்தவர் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள். மேலும் கொடைக்கானலில் 20 ஆண்டுகாலமாக கேட்டுக் கொண்டு இருந்த பேருந்து நிலையம் தற்போது ரூ.4.10 கோடி மதிப்பில் சர்வதேச தரத்துடன் உருவாகிக்கொண்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாது நகர்ப்புறப் பகுதிகளிலே 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்போருக்கு பட்டா வழங்க உத்தரவிட்டு இருப்பதும் கலைஞர் அவர்களின் அரசு இப்படி ஏழைகளின் நலனை பாதுகாக்கும் அரசாக கலைஞர் அரசு செயல்பட்டுக் கொண்டுள்ளது. ஏனென்றால்

ஒவ்வொரு விநாடியும் அவர் மக்களைப் பற்றியே சிந்தித்துக்கொண்டே இருக்கிறார். என்ன செய்யலாம், எவ்வாறு செய்யலாம், அதனை எப்படி செயல்படுத்தலாம் என்று சிந்தித்துக்கொண்டு இருக்கும் ஒரே தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

**மேம்பாட்டுப் பணிகள்**

இந்திய அரசு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கொடைக்கானல் வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.470.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதில் கணினி மயமாக்கப்பட்ட நவீன சோதனைச் சாவடி கட்டுதல் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், முக்கிய சுற்றுலா இடங்களுக்குச் செல்லும் சாலைகள் மேம்படுத்தும் பணிகள் சுமார் ரூ.50 இலட்சம் மதிப்பிலும், கொடைக்கானல் ஏரியைச் சுற்றி அலங்கார மின்விளக்குகள் அமைத்தல் ரூ.50 இலட்சம் மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ரூ.133 இலட்சம் மதிப்பில் கொடைக்கானல் ஏரி – 3 கி.மீ. அப்சர்வேட்டரி சாலை மேம்படுத்த ரூ.70 இலட்சத்திலும், கொடைக்கானல் – கொச்சின் சாலையில் கோல்ப் மைதானத்தில் இருந்து பில்லர்ராக் வரை 3 கி.மீ. சாலை மேம்படுத்த ரூ.63 இலட்சத்திலும் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு அரசு நிதியுதவி திட்டத்தின் கீழ் மாவட்ட நிருவாகத்தின் பங்களிப்புடன் ரூ.120 மதிப்பில் கொடைக்கானல் கோக்கர்ஸ்வாக் பசுமைப் பள்ளத்தாக்கு மற்றும் அப்பர்லேக் வியூ பகுதிகளில் நவீன உள்கட்டமைப்பு பணிகள் ரூ.45 இலட்சத்திலும், ஏரி பாலம் முதல் ஏராட்டா சாலை வரை குடிநீர் விநியோகப் பணிகள் ரூ.35 இலட்சத்திலும், வெள்ளி நீர்வீழ்ச்சி பகுதியில் நவீன விளக்கு, வசதிகள் ரூ.5 இலட்சத்திலும், கொடைக்கானல் முதல் வட்டக்கானல் வரை, சீனிவாசபுரம் முதல் வெள்ளி நீர்வீழ்ச்சி வரை, உகார்ந்தே நகர் முதல் வெள்ளி நீர்வீழ்ச்சி வரை மற்றும் லாய்ஸ்காட்ரோடு சர்ச் வரை உள்ள பகுதிகள் சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.35 இலட்சத்திலும் நடைபெற்று வருகிறது. மேற்குத் தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.15 இலட்சத்திலும், பகுதி–2 திட்டத்தின்கீழ் சுற்றுலாத் துறையின் மூலம் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.10 இலட்சத்திலும் ஆக கொடைக்கானல் சுற்றுலா விளக்க காட்சி மையம் அமைக்க ரூ.25 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வருகிறது. இதுதவிர தமிழகத்தில் திண்டுக்கல் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் கொய்மலர் சாகுபடி செயல்படுத்தப்படுகிறது. ஊட்டிக்கு அடுத்தபடியாக திண்டுக்கல் மாவட்டம் கொடைக் கானலில் கொய்மலர் சாகுபடிக்கு தகுந்த தட்பவெப்ப நிலை உள்ளதால் ரோஜா, மல்லிகை, கனகாம்பரம் போன்ற மலர்கள் அதிக அளவில் பயிரிடப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.



கோடைவிழாவினையொட்டி 10 நாட்களுக்கும் தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைகளான கரகம், காவடி ஆட்டம் மற்றும் சீர்காழி சிவசிதம்பரம் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி, பரதநாட்டியம் ஆகிய நிகழ்ச்சிகள் அரசின் சார்பில் நடத்தப்பட்டு பொதுமக்கள் அதிக அளவில் வருகை தர ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து 10 நாட்கள் பல்துறை பணி விளக்க முகாம் நடத்தப்பட்டது. அரசின் திட்டங்களை பொதுமக்கள் பார்த்து பயன்பெற்று சென்றனர். ■

# ஒற்றுமைக்கு வழிகாட்டுகிறது ஒரு கிராமம்

**உல. ரவீந்திரன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி மாவட்டம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிக்கு இலக்கணமாகத் திகழ்கிறது திருநெல்வேலி மாவட்டம், வன்னிக்கோனந்தல் அருகேயுள்ள மேசியாபுரம் கிராமம். இது ஒரு சிறிய கிராமம். ஆனால் இங்குள்ள மகளிர் ஒற்றுமையால் இன்று உயர்ந்து நிற்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்புவரை இந்த கிராமத்தினர் விவசாயக் கூலி வேலையைத்தான் செய்து வந்தனர். காலையில் விவசாயக் கூலி வேலைக்கு சென்றால் இருட்டிய பின்தான் வீடு திரும்புவர். அன்று அவர்களுக்கு கிடைத்த ஒரு நாள் கூலி ரூ.20 அல்லது ரூ.25தான்.

டான்வா மகளிர் திட்டம் இந்த கிராம மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. 1997 ஆம் ஆண்டு டான்வா மகளிர் திட்டத்தின்கீழ் இந்த கிராமத்தை சார்ந்த பெண்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இதில் பயிற்சிப் பெற்ற ஜான்சிராணி என்பவரிடம் வேளாண்மைத்துறை அலுவலர்கள், உங்கள் கிராமத்தில் மகளிர் குழுக்களை அமையுங்கள்; அதன் மூலம் உங்கள் கிராமப் பெண்கள் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்துங்கள் என்றனர். மகளிர் குழுக்களை அமைக்கும் பணியில் ஜான்சிராணி ஈடுபட்டார். 110 வீடுகளை கொண்ட மேசியாபுரத்தில் உள்ள பெண்களை சந்தித்தார். இதன் மூலம் 40 பெண்களை கொண்ட இரண்டு டான்வா பண்ணை மகளிர் குழுக்களை அமைத்தார். இதனால் இக்கிராம மகளிர் தலை நிமிர்ந்தனர்.

சிறிய அளவில் நிலங்களை வைத்து விவசாயம் செய்யாமல், பிறர் நிலங்களில் உழைத்த இம்மக்கள் விழித்தெழுந்தனர். டான்வா பண்ணை மகளிர் திட்டத்தின் கீழ் இவர்கள் தங்கள் நிலங்களில் நிலக்கடலை, பயிறு போன்ற தானியங்களை பயிரிட்டனர். இதன் மூலம் இக்கிராம மக்கள் கையில் காசு சேர்ந்தது. இம்மகளிர் குழுக்களுக்கு கால்நடை வளர்ப்புத் தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டது. இதையடுத்து கிராம மக்கள், ஒன்றிணைந்து மகளிர் பால் கூட்டுறவு சங்கம் தொடங்கினார்கள்.

வீட்டிற்கு இரண்டு கறவை மாடுகள் வீதம் வாங்கினர். தினமும் காலை, மாலை இருவேளைகளிலும் குறைந்தது 20 லிட்டர் பால் கறக்கிறது. இதனால் ஒரு வீட்டிற்கு குறைந்தபட்சம் மாதம் ரூ.3 ஆயிரம் வரை வருமானம் ஈட்டுகின்றனர். இது குறித்து இக்கிராமத்தை சேர்ந்த திருமதி. பொன்னம்மாள் (வயது 32 எ ண் வ் கூறுகையில், “மகளிர் பால் கூட்டுறவு சங்கத்தின் மூலம் தினமும் ரூ.200 முதல் ரூ.250 வரை சம்பாதிக்கிறோம். இதில் கால்நடை தீவனம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் போக நாள் ஒன்றிற்கு ரூ.100 முதல் ரூ.125 வரை மிச்சமாகிறது. இதனால் நாங்கள் எங்கள் சொந்த காலில் நிற்கிறோம்” என்றார்.

மேசியாபுரம் மகளிர் பால் கூட்டுறவுச் சங்கம் கடந்த 2000 ஆம் ஆண்டு சிறந்த பால் கூட்டுறவுச் சங்கமாக தேர்வு செய்யப்பட்டு விருது பெற்றுள்ளது.



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை

## மதுரை, கோவையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகங்கள்

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கிளை செயலகத்திற்கான தலைமை அலுவலகம் சென்னையில் அமைக்கப்படவேண்டும் என்றும், மதுரை, கோவை ஆகிய இடங்களில் பாஸ்போர்ட் அலுவலகங்கள் புதிதாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மத்திய அரசுக்கு 9.6.2007 அன்று கடிதம் எழுதி வலியுறுத்தியிருந்தார்.

மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இக்கோரிக் கைகளை ஏற்று, 15.6.2007 அன்று கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கிளைச் செயலகத்திற்கான தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள தமிழ்நாடு பாடநூல் கழகக் கட்டடத்தில் வரும் ஆகஸ்டு மாத ஆரம்பத்தில் தொடங்கப்படும் என்றும், மதுரையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகம் அமைக்கப் படுவதற்கான இடம் தேர்வு செய்யப் பட்டுள்ளதாகவும், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அவ்வலுவலகம் செயல்படத் தொடங்கும் என்றும், கோவையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகம் அமைப்பதற்காக, அங்கு அவினாசி சாலையில் உள்ள மாநகராட்சி அலுவலகப் பகுதியில் உள்ள கட்டடம் தேர்வு செய்யப்பட்டு, புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், பணிகள் முடிவடைந்த பிறகு 2007 ஆம் ஆண்டு இறுதியில் கோவையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகம் செயல்படத் தொடங்கும் என்றும், மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி, அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.



ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள மில்க் டெஸ்டர் என்ற இயந்திரம் அரசு மானியத்துடன் இக்கூட்டுறவு பால் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பால் கூட்டுறவு சங்கத்தினர் தனது சேமிப்பாக ரூ.2 இலட்சம் சேமித்துள்ளனர். இதற்கெல்லாம் காரணம் இக்கிராம மக்களின் ஒன்றுபட்ட ஒற்றுமையே ஆகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் டான்வா திட்டத்தின் தொடர்ச்சியாக வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டத்தில் 373 மகளிர் குழுவிற்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் புளூரோட்டஸ் காளான் மூலம் மக்கிய தொழு உரம் தயாரித்தல், வேளாண் விளை பொருட்களை பதப்படுத்தி பாலிதீன் பைகளில் அடைத்து விற்பனை செய்தல், அழகு மீன்கள் வளர்த்தல், துரித உணவு தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், தெளிப்பு நீர் பாசனம், மர நாற்றங்கால் வளர்த்தல், சான்று பெற்ற விதைகளுக்கு துணிப்பைகள் தைத்தல் மற்றும் ஸ்கிரீன் பிரிண்டிங் செய்தல், பிளாஸ்டிக் சேர்களை வாடகைக்கு கொடுத்து லாபம் சம்பாதித்தல், முந்திரி பருப்பினை பாலிதீன் பைகளில் அடைத்து லேபிள் ஒட்டி விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த தொழில்கள் தொடங்குவதற்காக மகளிர் குழு ஒன்றிற்கு ரூ.3,500 வீதம் 373 குழுக்களுக்கு ரூ.13 இலட்சத்து 5 ஆயிரத்து 500 செலவில் தொழில் தொடங்கப்பட்டது. இப்பெண்கள் குழு தயாரிக்கும் பொருட்களை உலகம் முழுவதும் விளம்பரம் செய்ய www.geocities.com/cashewtanwabe என்ற இணையதளம் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.

* * *

# இரட்டைமலை சீனிவாசன்

"நானும் எனது நண்பர் ராவ்பகதூர் சீனிவாசனும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இந்திய அரசியல் சட்டத்தில் எத்தகைய பாதுகாப்புகளை எதிர்பார்க்கின்றனர் என்பதைத் திட்டவட்டமாக விளக்கும் தெளிவான அறிக்கை ஒன்றை எழுத்துப் பூர்வமாக இம்மாநாட்டில் சமர்ப்பித்துள்ளோம்'' என்று அண்ணல் அம்பேத்கர் ஒரு முறை கூறினார். அம்பேத்கர் அவர்கள் ராவ்பகதூர் சீனிவாசன் என்று குறிப்பிடுவது, தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிகரற்ற தலைவராக விளங்கிய இரட்டைமலை சீனிவாசன் அவர்களைத் தான்.



தாழ்த்தப்பட்ட மக்களால் "தாத்தா'' என்று அன்போடு அழைக்கப்படும் இரட்டைமலை சீனிவாசன், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கோழியாளம் என்ற சிற்றூரில் 1860ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் நாள் பிறந்தார்.

இவரது தந்தையார் பெயர் இரட்டைமலை, தாயார் பெயர் ஆதிலெட்சுமி. தனது பெயரோடு தந்தை பெயரையும் இணைத்து இரட்டைமலை சீனிவாசன் என இவர் அழைக்கப்பட்டார்.

இரட்டைமலை சீனிவாசன் செங்கல்பட்டு மாவட்டத்தில் பிறந்திருந்தாலும் இவரது பூர்வீகம் தஞ்சாவூர் மாவட்டமாகும். இளம் வயதிலேயே தீண்டாமைக் கொடுமைக்கு இரட்டைமலை சீனிவாசன் ஆளானார். இவர் கோயம்புத்தூரில் ஒரு பள்ளியில் படித்தபோது மொத்தமுள்ள 400 பேர்களில் 10 பேர் தவிர மற்றவர்கள் உயர் ஜாதியினர். ஜாதிக் கோட்பாடுகள் கடுமையாக இருந்த அந்தக் காலத்தில் தனது ஜாதியைப் பற்றி பிற மாணவர்கள் அறிய நேர்ந்தால் தன்னைத் தாழ்வாக நடத்துவார்கள் என அஞ்சி பள்ளி மணி அடித்த பின்பு வகுப்புக்குச் செல்வதும், பள்ளி முடிந்ததும் யாருடனும் சேராமல் நேரே வேகமாக வீட்டுக்கு வருவதும் அந்தச் சிறுவனுக்குப் பழக்கமாகிவிட்டது.

அந்தச் சின்னஞ் சிறுவயதில் மற்ற பிள்ளைகளோடு கூடி விளையாட முடியவில்லையே என்ற ஏக்கம் அவருக்கு இருந்துள்ளது. படிப்படியாக கல்வி கற்று உயர்ந்து கோவையிலேயே கல்லூரிக் கல்வியையும் முடித்தார். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே அரங்கநாயகி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். பின்பு நீலகிரியில் ஒரு ஆங்கிலேய வணிக நிறுவனத்தில் கணக்கராகப் பணியாற்றினார்.

தனது சொந்த நலனுக்காக வேலைசெய்து வந்தாலும், தமது சமுதாய நலன் குறித்து பெரும்

கவலை கொண்டதாகவே அவரது மனம் இருந்தது. 10 ஆண்டுகள் அந்நிறுவனத்தில் பணியாற்றியபோது தீண்டாமையை எப்படி ஒழிப்பது என்பதே அவரது எண்ண ஓட்டமாக இருந்தது.

1890 இல் சென்னைக்கு வந்த இரட்டைமலை சீனிவாசன், இதர வகுப்பினரைப் போல தமது வகுப்பாரையும் மேல்நிலைக்குக்கொண்டு வருவது குறித்து 3 ஆண்டுகள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து தமது சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுப்பது என்ற முடிவுக்கு வந்தார். இந்தக் காலகட்டத்தில்தான் 1891 இல் பறையர் மகாஜன சபை என்ற அமைப்பையும், 1893 அக்டோபர் திங்களில் 'பறையன்' என்ற தமிழ் இதழையும், இரட்டைமலை சீனிவாசன் தொடங்கினார். இதே காலகட்டத்தில் வாழ்ந்துவந்தவரும் பவுத்தம் குறித்து, பல்வேறு பணிகளைச் செய்துவந்தவருமான க.அயோத்திதாச பண்டிதரின் மைத்துனர்தான் இரட்டைமலை சீனிவாசன் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இதழ் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தர குரல் கொடுப்பது, தீண்டாமையை எதிர்ப்பது, நல்லொழுக்கங்களைப் போதிப்பது என பல தொண்டுகளைச் செய்துவந்தார்.

1900 இல் இந்தியாவிலிருந்து புறப்பட்டு லண்டனுக்குச் சென்ற இரட்டைமலை சீனிவாசன், பின்னர் அங்கிருந்து ஆப்பிரிக்காவின் ஜான்சிபாரில் தங்கியிருந்து, அதன்பின்பு தென் ஆப்பிரிக்கா சென்றார். அங்கு 'நெட்டா'வில் தங்கி நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அதோடு அங்கு வழக்கறிஞராகப் பணியாற்றிய மகாத்மா காந்தியடிகளுக்கு மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தார். இந்த காலத்தில் தான் காந்தியடிகளுக்கு தமிழ்மொழியையும், மோ.க.காந்தி என தமிழில் கையெழுத்திடவும் இரட்டைமலை சீனிவாசன் கற்றுத்தந்தார் என்பது குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க நிகழ்வாகும்.

1921 இல் சென்னை திரும்பிய இரட்டைமலை சீனிவாசன், நீதிக்கட்சியுடன் இணைந்து செயல்பட்டார். 1923 முதல் 1938ஆம் ஆண்டு வரை சென்னை ராஜதானியின் மேல்சபைக்கு நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டு பணியாற்றினார்.

'தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுச்சாலைகளில் நடக்கவும், பொதுக் கிணறுகளில் நீர் எடுக்கவும் அனுமதிக்கவேண்டும்' என்று, 1924ஆம் ஆண்டு ஆகஸ்டு 25ல் இவர் கொண்டுவந்த தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொண்டு அரசிதழிலும் பதிவு செய்தது.

சட்டசபையிலும் மக்கள் மன்றத்திலும் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் பாடுபட்டுவந்த இரட்டைமலை சீனிவாசனுக்கு 1926 ஜனவரி 1ல் 'ராவ்சாகிப்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. 1928ல் The Madras Provincial Depressed Classes Federation என்ற அமைப்பை நிறுவினார். இதன் பின்னர், 1930ல் ராவ்பகதூர் பட்டமும், 1936ல் திவான் பகதூர் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

லண்டனில் 1930, 31, 32 ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று வட்டமேஜை மாநாடுகளிலும் சென்னை மாநிலத்தின் சார்பாக இரட்டைமலை சீனிவாசனும் பம்பாய் மாநிலத்தின் சார்பாக அண்ணல் அம்பேத்கரும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் பிரதிநிதிகளாக கலந்துகொண்டனர்.

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியலில் அதிகாரம் வழங்கினால்தான் தீண்டாமை ஒழியும். சட்டசபையிலும் அம்மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் வாழ்க்கை முன்னேற்றமடையும் என இரட்டைமலை சீனிவாசன் முதல் வட்ட மேஜை மாநாட்டில் உரையாற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

தனது வயது முதிர்ந்த காலத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களக்காகவே குரல் கொடுத்து போராடிவந்த இரட்டைமலை சீனிவாசன், தமது 85ஆவது வயதில் 1945 செப்டம்பர் 18ஆம் நாள் காலமானார்.

*வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்களை மேன்மை தாங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், ராணியும் வின்சர்காஸ்டல் என்னும் ராஜ் மாளிகைக்கு மூன்றுமுறை வரச்செய்து, கை குலுக்கி விருந்தளித்தனர். மன்னரிடம் பின்னுமோர்முறை இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் சந்தித்துப்பேச நேர்ந்தது. அவ்வமயம் மன்னர் 'தீண்டாமை என்றால் என்ன ? என்று திரு.இரட்டைமலை சீனிவாசன் அவர்களைக் கண்டு வினவினார். அதற்கு அவர், 'மேல் ஜாதியான் என்போன் கீழ் ஜாதியான் என்போனைத் தீண்டமாட்டான்' என்று பதிலளித்தார். உடனே மன்னர் "ஒரு கீழ் ஜாதியான் தெருவில் வீழ்ந்துவிட்டால் மேல்ஜாதியான் தூக்கி விடமாட்டானா ?" என்று மேலும் வினவினார். அதற்கு இரட்டைமலை சீனிவாசன் "தூக்கி விடமாட்டான்" என்று பதிலளித்தார். அதை மன்னர் கேட்டுத் திடுக்கிட்டுநின்று "அவ்விதம் நடக்க என் அரசாட்சியில் விடமாட்டேன்" என்றார்.*

*– தி.பெரியார் சாக்ரடீசு*

## வேலூர் மாவட்டத்தில்

# அரசின் உதவியால் வளம் பெற்ற பண்ணை மகளிர்

ஆ. ராஜா,
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*வேலூர் மாவட்டம்.*

*அரசின் திட்டங்களைப் பெற்று ஒன்றுபட்டு உழைத்தால் உயர்வு நிச்சயம் என்பதைப் பறைசாற்றுகிறது ஒரு பண்ணை மகளிர் குழு. எப்படி உயர்ந்தோம் என்பதை விளக்கமாகக் கூறுகிறார்கள் அந்தப் பண்ணை மகளிர் குழுவினர். அரசின் உதவியால் பயன்பெற்ற நெஞ்சங்கள் இதோ பேசுகின்றன :–*

"வேலூர் மாவட்டம் ஆற்காடு வட்டத்தில் உள்ளது கத்தியவாடி என்ற சிறு கிராமம். இந்த கிராமத்தில் வாழ்க்கையின் அடித்தளத்தில் ஏழ்மையில் இருந்த நாங்கள் வேளாண்மைத் துறையின் டான்வாபி திட்டத்தின் மூலம் பண்ணை மகளிர் பயிற்சி பெற்று நாங்கள் 18 பேர் சேர்ந்து டான்வாபி பண்ணை மகளிர் குழுவினை ஆரம்பித்தோம். தலா 50 ரூபாய் வீதம் சிறுசேமிப்பு செய்து அருங்குன்றம் இந்தியன் வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கினோம். மாத சேமிப்பை வங்கியிலிருந்து எடுத்து உறுப்பினரின் அவசிய அவசரத் தேவைக்கு குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து எங்களின் குழு உறுப்பினர்களின் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்தோம். 2004 ஆம் ஆண்டு இந்தியன் வங்கியின் மூலம் 10 இலட்சம் ரூபாய் மானியக் கடனை நமது வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கையால் மகிழ்ச்சியுடன் பெற்று 7 ஏக்கர் தரிசு நிலத்தினை குழுவிற்காக விலைக்கு வாங்கி கடும் முயற்சியால்





ஆழ்துளைக் கிணறு அமைத்து அதன் மூலம் பெறும் நீரைப் பயன்படுத்தி 2005–2006 ஆம் ஆண்டு மணிலா, உளுந்து விதைப் பண்ணைகள் அமைத்து தரமான விதைகளை ஆற்காடு வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு விநியோகம் செய்தோம். அதன் மூலம் ரூ.25,000 இலாபம் பெற்றோம். இந்த ஆண்டு குழி முறையில் 3 ஏக்கர் கரும்பு நடவு செய்து சொட்டுநீர்ப் பாசனம் மூலம் உரம் மற்றும் தண்ணீர் விநியோகம் செய்து விதைக் கரணைகளுக்காக 6 மாதத்தில் அறுவடை செய்தோம். அதனை ஆற்காடு கூட்டுறவு கரும்பு அலுவலகத்திற்கு விநியோகம் செய்து அதன் மூலம் 1,20,000 ரூபாய் இலாபம் பெற்றோம். ஆற்காடு வேளாண்மைத் துறையினை அணுகி அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பெற்றுப் பயனடைகிறோம்.

2006–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வேளாண்மைத் துறை ஆணையர் எங்கள் கரும்பு வயலையும், உழைப்பையும் பார்வையிட்டு கரும்பில் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்ததற்கு அரசு மானியம் ரூ.25,000/– பெற ஆணை வழங்கினார். மேலும் வேளாண்மைத் துறையின் மூலம் பருப்பு உடைக்கும் கருவியை எங்கள் குழுவிற்காகப் பெற்று, அனைவருக்கும் குறைவான விலையில் பருப்பு உடைத்தல் மற்றும் கேழ்வரகு கோதுமை மாவு ஆகியனவற்றை அரைத்துக் கொடுக்கிறோம். இவை அனைத்திலும் வரும் வருமானம் மூலம் குழுவிலுள்ள 18 பேருக்கும் 2 பவுன் தங்கச் சங்கிலி வாங்கிக் கொடுத்துள்ளோம். மேலும் வங்கியில் பெற்ற கடனில் ரூ.1,00,000/– திருப்பிச் செலுத்தி உள்ளோம். இதன் மூலம் எங்களால் சொந்தக் காலில் நிற்கமுடியும் என்ற தன்னம்பிக்கை அதிகரித்து குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சி பெருகியதுடன் குடும்பத்தார் மதிக்கும் நிலைக்கு உயர்த்துள்ளோம் என்பதனை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களுடைய நிலத்தில் தினமும் 2 பேர் சுழற்சி முறையில் பணியாற்றி வருகிறோம்.

நடப்பு ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் பயோ கண்ட்ரோல் லேப் எங்கள் கிராமத்தில் எங்கள் குழுவிற்கு அமைத்து கொடுக்க 5 இலட்ச ரூபாய் சுழல் நிதி வழங்கி உதவி செய்துள்ளனர். இந்த ஆய்வகத்தில் டிரைகோடர்மா விரிடி மற்றும் குடோமோனஸ் பூஞ்சாணத்தை நாங்களே தயாரிக்க எங்களுக்குப் பயிற்சி அளித்தனர். எங்கள் ஆய்வகத்தில் தயாரிக்கும் இந்த மருந்தினை வேளாண்மைத் துறையின் விரிவாக்க மையங்களில் குழுவின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன் மூலம் நாங்கள் தொழில்நுட்ப ரீதியாக திறமை சாலிகளாக மாறிவருவதுடன் எங்கள் குழு உறுப்பினர்களுக்கு நிரந்தர வேலை கிடைப்பதால் வருமானம் பெருகி எங்கள் குடும்ப பொருளாதாரம் மென்மேலும் வளர்ந்துள்ளது. எங்களின் இந்த பொன்னான வாழ்க்கைக்கு உறுதுணையாக, ஏணிப்படிகளாக இருந்த தமிழக அரசின் வேளாண்மைத் துறையினருக்கு எங்கள் குழுவின் சார்பில் சிரம் தாழ்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறோம்''.

# இண்டஸ்

# குழந்தைத் தொழிலாளர் திட்டம்



நாமக்கல் மாவட்டத்தில் இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் 9 – 13 வயதுடைய குழந்தைத் தொழிலாளர்களை கண்டறிந்து அவர்களை மீட்டு, இத்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இணைப்புக் கல்வி மையங்களில் சேர்த்து கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மாவட்டம் முழுவதும் 41 இணைப்புக் கல்வி மையங்களில் 1,671 குழந்தைகள் படிக்கிறார்கள். குழந்தைகளுக்கு இலவச உணவு, இலவச புத்தகம், இலவச சீருடை வழங்கப்படுகின்றது. அனைத்து குழந்தை களுக்கும் உதவித் தொகையாக மாதம் ரூ.100 வழங்கப்படுகின்றது. ஆடல், பாடல், நாடகக் கலை வடிவில் பாடம் மற்றும் தொழிற்கல்வி கற்பிக்கப்படுகின்றது.

கி. கண்ணதாசன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாமக்கல் மாவட்டம்

இதுவரை இணைப்புக் கல்வி மையங்களில் படித்து வந்த 688 குழந்தைகள் முறைசார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு படித்து வருகின்றனர். இக்குழந்தைகள் இண்டஸ் திட்ட களப்பணியாளர்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

### ஆசிரியர்களுக்குப் பயிற்சி

இண்டஸ் இணைப்பு கல்வி மையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையம் மூலமும், அனைவருக்கும் கல்வி திட்டம் மூலமும் ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழிற்கல்வி பயிற்சி, சிறார் நாடகக் கலைப் பயிற்சி, வள மையப் பயிற்சி, வகுப்பறை பாடங்கள், விளையாட்டுகள் போன்றவை தேர்ந்த வல்லுநர்கள் மூலம் அளிக்கப் பட்டுள்ளது.



### மருத்துவ வசதி

இணைப்புக் கல்வி மையங்களில் படிக்கும் குழந்தைகளுக்கு உடல் நல பரிசோதனை மாதந்தோறும் அந்தந்த பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மூலம் செய்யப்பட்டு வருகின்றது.



ஒவ்வொரு இணைப்பு கல்வி மையத்திற்கும் ரூ.600 மதிப்பில் முதல் உதவி பெட்டி வழங்கப் பட்டுள்ளது.

**சுயஉதவிக் குழுக்கள்**

குழந்தை தொழிலாளர்களின் பெற்றோர்களை மட்டும் உறுப்பினராகக் கொண்டு 42 மகளிர் சுய உதவி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இண்டஸ் திட்டத்தின்



மூலம் குழுவில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுழல்நிதி ரூ.2,000 வீதம் வழங்கப்படுகிறது. மேலும் மகளிர் திட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட தொழில் மையம் ஆகிய துறைகளுடன் இணைந்து தொழிற்பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும் NABARD, SGRY THADCO மற்றும் திட்டங்களின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவிகள் மற்றும் வங்கிகள் மூலம் நேரடிக் கடன் உதவிகள் ஆகியவை ஏற்பாடு செய்யப் படுகின்றன. திட்டத்தின் மூலம் இண்டஸ் சுய உதவி குழுக்களின் ஊக்குனர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் இண்டஸ் பணியாளர்கள் களப்பணி ஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் சமுதாய தன்னார்வ பணியாளர் களுக்கும், சுயஉதவிக் குழுக்கள் நடத்துதல் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட நிருவாகம் மூலம் அரசு மூலம் அளிக்கப்படும் பல்வேறு நலத் திட்ட உதவிகளான ஆதரவற்ற விதவைகள் / முதியோர் / கணவனால் கைவிடப்பட்டோர் / உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை மற்றும் சிறுபான்மையினத்தவருக்கு கடன் உதவி மற்றும் மானியம் வழங்குதல் ஆகியவற்றில் குழந்தைத் தொழிலாளர் களின் பெற்றோர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**குழந்தைத் தொழிலாளர்களை மீட்க எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள்**

குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் உள்ள கிராம பகுதிகளில் இண்டஸ் திட்டத்தின் மூலம் சிறப்பு கிராம கல்வி குழு அமைக்கப்பட்டு, குழந்தைகளின் நிலை கண்டறியப்படுகின்றது. அந்தந்த கிராமப் பகுதிகளில் பணிபுரியும் குழந்தைகளின் பெற்றோர்களை குழு உறுப்பினர்கள் சந்தித்துப் பேசி குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்து வருகின்றனர். கல்வியறிவு இல்லாத குழந்தைகளுக்கு தன்னார்வ பணியாளர் மூலம் சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பணிபுரியும் குழந்தைகளை மீட்க திருச்செங்கோடு மற்றும் நாமக்கல் கோட்டாட்சியர் தலைமையில் சிறப்பு கண்காணிப்புக்குழு மாவட்ட ஆட்சியரால் அமைக்கப்பட்டு திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.



**விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

விழிப்புணர்வு ஏற்படும் விதமாக மாவட்டம் முழுவதும் விளம்பர பலகைகள் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. முக்கியமாக இணைப்புப் பள்ளிகள் செயல்படும் பகுதிகளில் "பௌர்ணமி பூக்கள்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின் பேரில் மாதா மாதம் தொடர்ந்து நடத்தப்படுகிறது. குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பின் முக்கியத்துவம், இண்டஸ் திட்டம் மூலம் வழங்கப்படும் நல உதவிகள், குழந்தைகளின் திறமை வெளிப்பாடு, குழந்தைகளின் எண்ண வெளிப்பாடு, கல்வியின் அவசியம் போன்றவை இந்நிகழ்ச்சியின் மூலம் மக்களை சென்றடைந்து ஒரு நல்ல மனத்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும், நிகழ்ச்சியில் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் மனநிலை உற்சாக மடைகிறது. அவர்களின் தன்னம்பிக்கை வளர்கிறது. களபணியாளர்கள் திட்டப் பணிகளை நிறைவேற்ற எளிதில் சமுதாயத்தை ஊடுருவ இந்நிகழ்ச்சி வாய்ப்பு அளிக்கிறது. இந்நிகழ்ச்சிகளில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் மாவட்ட அரசு உயர் அலுவலர்கள் நேரடியாக கலந்து கொள்கின்றனர். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் 500க்கும் மேற்பட்ட உள்ளூர் மக்கள் கலந்துகொள்கின்றனர்.

**விழிப்புணர்வு வாசகங்கள்**

குழந்தைத் தொழிலாளர் நிலை ஒழிப்போம்.

குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது பெற்றோருக்கு அவமானம்.

குழந்தைகளே நாட்டின் கருவூலம்

கல்வியே குழந்தைகளின் கருவூலம்.

பட்டு மேனிக் குழந்தைகள்
விசைத்தறியில் வேலை செய்யலாமா ?

வேலைக்குப் போனால் சிறுவருமானம்
வாழ்நாள் முழுக்க அவமானம்

குழந்தைத் தொழில் முறையை
முற்றிலும் நீக்குவோம்.

போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் குருசாமிபாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் எழுதப்பட்டுள்ளன.

**தொழிற்பயிற்சி**

14–17 வயதுடைய பள்ளி இடைநின்ற மற்றும் பணிக்கு செல்லும் இருபாலருக்கும் தொழிற் பயிற்சி வழங்கப் படுகின்றது. மாவட்டம் முழுவதும் 17 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் 15 வகையான தொழிற் பயிற்சிகள் வழங்கப் படுகின்றது. இதுவரை 269 குழந்தைகள் தொழிற் பயிற்சி முடித்துள்ளனர். தொழிற் பயிற்சி பெறும் குழந்தைகளுக்கு பயணப்படி மாதம் ரூ.300 வழங்கப் படுகின்றது. 6 மாத பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்பிற்கும் வழிகாட்டப்படுகின்றது. தொழிற்பயிற்சி முடித்தவர்களுக்கு ரூ.1,200 மதிப்புள்ள கைக்கருவிகளும் இலவசமாக வழங்கப் படுகின்றது. தற்பொழுது 731 மாணவ மாணவியர்கள் இண்டஸ் திட்டத்தில் தொழிற்பயிற்சி பெற்று வருகின்றனர். இதுவரை 200ற்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். தற்பொழுது பயின்று வரும் குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பு பெற்று தருவதற்கான முன்னேற்பாடுகள் இத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்டு வருகிறது.

# குழந்தைத் தொழிலாளர் பள்ளியில் பயின்ற சில குழந்தைகளின் பேட்டி



### அன்னை தெரஸா
### இண்டஸ் குழந்தை தொழிலாளர் பள்ளி

நான் இண்டஸ் பள்ளியில் சேர்வதற்கு முன்பு தறிப்பட்டறையில் நூல் போட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது இண்டஸ் ஆசிரியைகளை பார்த்து நான் படிக்க வேண்டும் என்று அவர்களிடம் கூறினேன். கடந்த 2004 ஆம் ஆண்டு ஐந்தாம் வகுப்பு சேர்ந்து இப்பள்ளியில் படித்தேன். ஆசிரியைகள் எனக்கு மிகவும் உதவி செய்தனர். இவர்கள் உதவியினால் நான் 8 ஆம் வகுப்பு வரை இண்டஸ் பள்ளியில் படித்தேன். பின்பு அரசு பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்து நல்ல முறையில் படித்து வருகிறேன். என் பெற்றோர்கள் எனக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கின்றனர். நான் போலீஸ் ஆகனும்கிறது என்னோட ஆசை. அதனால் நான் நன்றாக படித்து போலீஸ் ஆகி இந்த இண்டஸ் பள்ளிக்கு பெருமைச் சேர்ப்பேன்.

எம்.ஜெகதாம்பாள், 9 ஆம் வகுப்பு
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
அலவாய்ப்பட்டி



### அம்மன் இண்டஸ் பள்ளி – அத்தனூர்

நான் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் வீட்டின் குடும்ப சூழ்நிலை காரணமாக என்னுடைய படிப்பை தொடர இயலாமல் விசைத்தறி சம்பந்தமான தார்போடுதல், நூல்போடுதல் போன்ற வேலைகளை செய்துக் கொண்டிருந்தேன். இண்டஸ் குழந்தை தொழிலாளர் பள்ளி ஆசிரியர்களின் உதவியால் இப்பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்து முடித்து ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தற்போது ஏழாம் வகுப்பு படித்து வருகிறேன். எனது இலட்சிய கனவு ஒரு ஆசிரியர் ஆகி நானும் இதுபோன்ற சேவைகளை செய்ய விரும்புகிறேன். வாய்ப்பினை அளித்த இண்டஸ் திட்ட இயக்குநருக்கும், அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ.சரவணன்

**எஸ். அலெக்ஸ்**
சித்தன், காடச்சநல்லூர்
திருச்செங்கோடு



வணக்கம். நான் கடந்த 2002 – 2005 ஆண்டு வரை காடச்சநல்லூர், எஸ்.பி.பி. காலனி நகர் திருச்செங்கோட்டில் வசித்து வருகின்றோம். நான் பஞ்சு மில்லுக்கு வேலைக்கு போய்க்கொண்டிருந்தேன். அங்கு நான் மாதம் 600 ரூபாய் சம்பளத்தில் பணிபுரிந்து வந்தேன். வேலை மிக மிக கஷ்டமாக இருந்தது. எங்களுடைய குடும்பம் பெரிய குடும்பம். எங்கள் தாய் தந்தை கூலி வேலைக்குச் சென்று எங்களைப் படிக்க வைக்க முடியவில்லை. ஆகையால் என்னுடைய படிப்பை பாதியில் நிறுத்திவிட்டேன். என் தம்பிகள் படிப்பிற்கும் என் அம்மா, அப்பா செய்து வரும் கூலி தொழிலின் சம்பளம் குடும்ப செலவிற்கும், படிப்பு செலவிற்கும் போதியதாக இல்லை. பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கியிருந்தோம். இந்த நிலையில் இருந்த போது குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டம் (இண்டஸ் திட்டம்) கீழ் R.R.I.T.I யில் Domestic Industiral & Plumbing ஆறு மாதம் இலவசமாக பயிற்சி பயின்று வந்தேன். இப்பயிற்சி எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. பயிற்சியின் போது பிளம்பிங் வேலை முழுவதும் கற்றுக் கொண்டேன். தற்போது திருச்செங்கோடு அருகே கே.எஸ்.ஆர். ஏற்றுமதி நிறுவனங்களில் பணிபுரிந்து வருகிறேன். இங்கு மாதம் ரூ.1,400 சம்பளம் பெற்று வருகிறனே். மேலும் நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்களை பற்றியும் அறிந்து புதிய பயிற்சிகள் பற்றியும் அறிந்து கொண்டிருக்கிறேன். இப்பயிற்சியானது என்னுடைய வாழ்க்கைக்கு மிகவும் உறுதுணையாக உள்ளது. வேலை நேரம் தவிர மற்ற நேரங்கள், விடுமுறை நாட்களில் கட்டிட மற்றும் சிறு சிறு பிளம்பிங் வேலைகளுக்கும் சென்று வேலை செய்கிறேன்.

# குழந்தைத் தொழிலாளர் பள்ளியில் பயின்ற சில குழந்தைகளின் பேட்டி

**ஆர்.ஜீவானந்தம்**
**குழந்தை தொழிலாளர் பள்ளி**
**புத்தர் தெரு**
**குமாரபாளையம்**



நான் சங்ககிரியில் உள்ள சின்னாகவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 7ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் குடும்பத்தின் வறுமை காரணமாக பள்ளியை விட்டு நிற்கும் நிர்பந்தம் ஏற்பட்டது. நாங்கள் எங்கள் ஊரை விட்டு குமாரபாளையம் வந்து சேர்ந்தோம். இந்த ஊருக்கு வந்து சேர்ந்த பிறகு வேலைக்குச் சென்றுக் கொண்டிருந்தேன். அப்பொழுது SRET தொண்டு மூலம் – Annai Terasa Indus Child Labour School ஆரம்பிக்கப்பட்டதைப் பற்றி நான் அறிந்தேன். நான் கற்ற கல்வி கனவாகி விட்டது என்று நினைத்திருந்தபோது இண்டஸ் பள்ளியை பற்றி ஆசிரியர்கள் வந்து கூறினார்கள். அதனால் என் படிப்பின் ஆர்வம் அதிகமாகிவிட்டது. இக்காரணத்தால் இப்பள்ளியில் வந்து சேர்ந்தேன். நான் அங்கு பாதியில் விட்ட என் கல்வியைத் தொடர்ந்த கற்க இப்பள்ளி எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. இங்கு நான் 7ஆம் வகுப்பு படித்து வந்தேன். எனக்கு படிப்பின் ஆர்வத்தை போலவே மற்றவற்றிலும் ஆர்வம் அதிகம் இருந்தது. பேப்பரில் பொம்மை, விலங்குகள், வீடுகள் போன்ற சிறு சிறு பொருட்கள் செய்வதில் ஆர்வம் எனக்கு உண்டு மற்றும் எலக்ட்ரானிக்ஸ் சம்மந்தப்பட்ட பொருட்கள் செய்யவும் எனக்குத் தெரியும். நான் இங்கு 7ம் வகுப்பு முடித்து விட்டேன். பிறகு என்னை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பில் சேர்த்து விட்டார்கள்.

# கோ - ஆப்டெக்ஸ்

## வைகாசி வசந்தம் கைத்தறி கண்காட்சி

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் திரு.என்.கே.கே.பி. ராஜா அவர்கள் 2006 – 2007 ஆம் ஆண்டு கைத்தறித் துறை மானியக் கோரிக்கையின்போது, கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில், முதற் கட்டமாக 5 விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப் படும் என்று அறிவித்தார்கள். இதனடிப்படையில், சென்னை மயிலாப்பூரில் உள்ள மயிலை கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், மதுரையில் கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி மாளிகை, வேலூர் கோ–ஆப்டெக்ஸ் தீபம் விற்பனை நிலையம் ஆகியவை குளிர்ச்சாதன வசதியுடன் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, குளிர்ச்சாதன வசதியுடன் நவீனப்படுத்தப்பட்ட சென்னை புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கோ–ஆப்டெக்ஸ் கற்பகம் விற்பனை நிலையத்தை, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் 7.6.2007 அன்று திறந்து வைத்து, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்ய புதிய இரக சேலையை அறிமுகப்படுத்தி, "வைகாசி வசந்தம் கைத்தறி கண்காட்சியை" தொடங்கி வைத்தார்கள்.

இங்கு பட்டுப் புடவைகள், கோரா சேலைகள், வனவாசி பருத்தி சேலைகள், மதுரை சுங்குடி சேலைகள், சிறுமுகை சேலைகள், பரமக்குடி சேலைகள், திருச்சி ஜெயங்கொண்டம் பருத்தி சேலைகள், வண்ண வண்ண சுடிதார்கள், ரெடிமேட் சட்டைகள், நைட்டிகள், போர்வைகள், துண்டுகள் வேட்டிகள், லுங்கிகள் ஆகியவை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

"மேஜிக் டிசைன்" பட்டு சேலைகளில் ஒரே வடிவமைப்பில் இரண்டு விதமான வடிவமைப்புகள் தெரியும் வண்ணம் புதியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த பட்டுச் சேலையில் யானையின் உருவத்தை ஒரு கோணத்திலும், மயில் உருவத்தை மற்றொரு கோணத்திலும் காணலாம். மேஜிக் பட்டு இரக சேலைகள் காஞ்சிபுரம் பகுதியில் தூய ஜரிகையினால் நெய்யப்பட்டுள்ளது. இந்த பட்டுச் சேலையின் எடை 1,100 கிராம். மேஜிக் பட்டுச் சேலையின் நிகர விலை ரூ.35,000. இந்தச் சேலையை உபயோகப்படுத்தும்பொழுது இரண்டு வகையான மேஜிக் வடிவமைப்புகளை மற்றவர்களால் காண முடியும்.

"வைகாசி வசந்தம்" கண்காட்சியில் புதிய வடிவமைப்புகளுடன் கூடிய பருத்தி இரக சேலைகள் ஜெயங்கொண்டம், உறையூர், சிறுமுகை புதூர், நெகமம், பரமக்குடி, வனவாசி ஆகிய இடங்களிலும் கோரப்பட்டு இரக சேலைகள் கோவையிலும் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த பருத்தி இரக சேலைகள், ரூ.325 முதல் ரூ.1,000 வரையிலும் கோரா பட்டு இரக சேலைகள் ரூ.600 முதல் 1,500வரையிலும் உள்ளது. இதை தவிர மலிவு விலையில் மதுரை பருத்தி சேலைகள் ரூ.180 க்கும் அச்சிடப்பட்ட வண்ண பருத்தி சேலைகள் ரூ.170க்கு ம் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID) வடிவமைப்பில் உருவான பத்தி இரக சேலைகள் ரூ.600 முதல் ரூ.1,000 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் கற்பகம் விற்பனை நிலையம் ரூ.64 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்துள்ளது. நடப்பாண்டில் ரூ.2 கோடி விற்பனை செய்ய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ★




செ.ம.தொ.இ / 602 / வரைகலை / 2007

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06
TN/PMG(CCR) WPP-518/06-08

